பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

டிசம்பர் 2024

## இலக்கிய வித்தகர்
## மஷ்ஹூறா சுஹூறுத்தீன் JP

நேர்காணல்




வடிவமைப்பு
சேவைகள்
GRAPHIC DESIGN
எமது சேவைகள்
Logo Design
Banner Design
Designing Business Cards
Flyer Designs
Brochure Design
Certificate/Invitation Designs
மற்றும் தங்கள் விருப்பத்திற்கேற்ப தட்டச்சு மற்றும் வடிவமைப்பு வேலைகளை தமிழ், சிங்களம், ஆங்கிலம் மொழிகளில் செய்து கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: 0753761731 / 0779998608

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

உதயம் 1972 – டிசம்பர் 2024

636

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர்மணி தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் ஈழபாரதி

வடிவமைப்பு :

அமின் மொஹமெட்

ஆயிஷா சகீலா

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

**இராம வேல்முருகன்**
எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச் சாலை
வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண் +91 9952529619 ( கட்செவி )
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின்கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

அன்பார்ந்த தமிழ்நெஞ்சங்களே வணக்கம்! நெஞ்சோடு நெஞ்சமாக உங்களோடு பேச வந்திருக்கிறேன். எல்லோரும் நலந்தானா?

வருடத்தின் இறுதி மாதத்தில் பாதம் பதித்திருக்கிறோம். நடந்தவைகளை அசை போட்டு, கசப்பான அனுபவங்களில் இருந்து பாடங்கற்று, நல்ல தருணங்களை இசை மீட்டி, வரப்போகும் வருடத்தையும் கோலாகலமாக வரவேற்கத் தயாராவோம்.

இம்மாதத்தில் பல முக்கிய தினங்கள். அதிலொன்று உலக எய்ட்ஸ் தினம் டிசம்பர் ஒன்று. இதை சமூக விழிப்புணர்விற்காகவே பிரகடனப் படுத்தியுள்ளார்கள். தனிமனித ஒழுக்கமும், இரத்ததானத்தில் (கொடுப்பதில், பெறுவதில்) அதீத கவனமும் இந்த உயிர்க்கொல்லி நோயிலிருந்து பாரிய அளவு பாதுகாப்பைத் தரும்.

டிசம்பர் பத்தாம் திகதி உலக மனித உரிமைகள் தினமாக கொண்டாடப் படுவதும் தனிப்பட்ட மனிதனுக்கான அடிப்படை உரிமைகளைப் பற்றிய தெளிவினைப் பெற்றுக் கொடுக்கத் தான். இன்றும் பல நாடுகளில் தமக்கான உரிமைகள் எவை எனத் தெரியாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த சர்வதேச பிரகடனம் மூலம் பல்லாயிரம் மக்கள் பயன்பெறும் வாய்ப்புள்ளது.

டிசம்பர் 12 ஆம் திகதியை உலக அமைதி நாளுக்கென ஒதுக்கினாலும் கூட, என்னைப் பொறுத்தவரை எல்லா நாட்களும் உலக அமைதிக்கான நாட்களே! இதைப் புரிந்து கொண்டு வாழும்போது உலக அமைதி என்றென்றும் பேணப்படும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.

எப்போதுமே சுய சிந்தனையோடு சக மனிதனின் நலம் நோக்கும் எண்ணமும் வந்து விட்டாலே போதும். ஒரு கட்டுக்கோப்பான வாழ்க்கை நம் மக்களுக்கு வசப்படும். அத்தோடு சமுதாய விழுமியங்களை காத்து எதிர்கால சந்ததி கரங்களில் ஒப்படைக்கும் பக்குவம் எல்லோருக்குமே வந்துவிடும். சிந்திப்போம். சிறப்பாக வாழ்வோம்.

நத்தாரைக் கொண்டாடிக் கழிக்கக் காத்திருக்கும் அன்பர்களுக்கும் இனிய நத்தார் தின நல்வாழ்த்துகள்! புத்தாண்டில் சந்திப்போம். நன்றி!

என்றென்றும் அன்புடன்
தமிழ்நெஞ்சம் அமின்
(ஆசிரியர்)

பட விநயம் : கூகுள்

## தமிழ்நெஞ்சம் அமின் – ஏடி வரதராசன்

# பண்டிகையால் என்னே பயன்...?

**அமின் :**

நண்பா வணக்கம்
நலம்தானே உங்களுக்கென்
அன்பான வாழ்த்தை
அளிக்கின்றேன் - இன்பமுடன்
வந்திருக்கும் தீபா
வளிநாளைக் கொண்டாடி
சிந்தட்டும் உங்கள்
சிரிப்பு.



**ஏடி :**

வந்தநாள் போனநாள்
வாருந் திருநாளென்(று)
எந்தநாள் கொண்டாடி
என்னபயன் - அந்தநாளில்
எல்லாம் விரயம்தான்
ஏதும் பயனன்றி
எல்லாமும் நட்டம்தான்
இங்கு.

**அமின் :**

அப்படியேன் சொல்கின்றீர்
ஆண்டுவந்த முன்னோர்கள்
செப்பியதைத் தானேநாம்
செய்கின்றோம் - எப்போதும்
கொண்டாட்டம் என்றால்
குதூகலம் எண்ணத்தில்
உண்டாகும் அன்றோ
உயிர்த்து?

**ஏடி :**

கொண்டாட்ட நாளில்
குதூகலம் உண்டாகி
என்னபயன் கொஞ்சம்
இயம்புங்கள் - முன்னோர்கள்
அப்படி என்ன
அறைந்தார்கள் வெண்பாவில்
செப்புங்கள் கொஞ்சம்
சிறிது.

**அமின் :**

.

முன்னோர்கள் பற்றி
முறைதவறி பேசாதே
முன்னோர்கள் எல்லாரும்
முட்டாளா - முன்னோர்கள்
எல்லாம் கணித்துவைத்து
இங்குள்ளப் பண்பாட்டை
எல்லார்க்கும் சொன்னவர்கள்
இங்கு.

.

**ஏடி ;**

.

என்னே பெரிய
இறைவன்போல் பேசுகிறீர்
என்னே தெரியும்
இதைப்பற்றி - என்னைச்
சினப்படுத்தும் நோக்கத்தில்
சீண்டுவது வேண்டாம்
மனமறிந்து பேசுவதே
மாண்பு.

.

**அமின் :**

.

தம்பீ எனைநீ
தவறாக எண்ணாதே
உம்மைச் சினப்படுத்த
ஓதவில்லை - நம்முடைய
அன்பானப் பண்டிகையில்
ஆன்மீகம் சேர்ந்துள்ள(து)
என்றுதான் சொன்னேன்
எடுத்து.

.

**ஏடி :**

.

ஆன்மீகத் திற்கும்
அதற்கும் தொடர்பென்ன
நான்கேட்கக் கொஞ்சம்
நவிலுங்கள் - நான்கொஞ்சம்
போற்றமாட்டேன்: ஆன்மீகம்
பொய்யென்பேன் ஆகையினால்
ஏற்றபடிச் சொல்வீர்
எனக்கு.

.

**அமின் :**

.

ஆன்மீகம் பொய்யென்றால்
ஆண்டவனே இல்லையென
ஏன்தம்பீ இவ்வா(று)
இயம்புகிறாய் - வான்கொண்ட
அந்த இறைவன்தான்
ஆட்டிநமை வைக்கின்றான்
இந்தவுண்மை யைநெஞ்சில்
ஏற்று.

.

**ஏடி :**

.

ஏற்றுவதா வேண்டாமா
என்றெல்லாம் நானறிவேன்;
போற்றுவதா தூற்றுவதா
போக்கறிவேன்; - மாற்றமன்றி
சம்மந்தம் என்னவெனச்
சாற்றி விபரத்தோ(டு)
உம்பதிலை மட்டும்
உரை.

.

**அமின் :**

.

நாட்டை அழித்த
நரகா சுரனையிறை
வேட்டையாடிக் கொன்ற
வியன்தினத்தை - நாட்டமுடன்
திக்கெல்லாம் கொண்டாடும்
தீபா வளிநாளாய்
இக்கதையைச் சொல்வார்கள்
இங்கு.

.

**ஏடி :**

.

நான்கூடக் கண்டதில்லை
நம்புகின்ற நீங்களும்
தான்கூடக் காணா
தவர்தானே - ஆன்மீகம்
சாற்றுவ தெல்லாஞ்
சரிதானா என்றறிந்துப்
போற்றிப் புகழ்தல்
புகழ்.

**அமின் ;**

.

ஆன்மீகம் மெய்யா
அதுபொய்யா என்றெல்லாம்
ஏன்தம்பீ வீணாய்
இயம்புகிறாய்த் - தேன்போல
நல்லதைச் சொன்ன
நயமான முன்னோர்கள்
சொல்வதைக் கேட்டால்
சுகம்.

.

**ஏடி :**

.

சொல்வதை எல்லாஞ்
சுகமென்று நம்பிநம்பிக்
கல்லான தெய்வக்
கதைகேட்டால் - நல்லுலகம்
எங்குமே நிற்காமல்
எல்லை தனையறிந்து
உங்கள்முன் ஓடும்
உணர்.

.

**அமின் :**

.

ஓடுவார் ஓடட்டும்
உள்ள பொருள்தன்னைத்
தேடுவார் தேடித்
திரியட்டும் - வாடுங்கால்
பண்பாய்க் கரங்கோத்துப்
பக்கத்தில் நிற்கின்ற
நண்பரை மட்டும்நீ
நம்பு.

.

**ஏடி :**

.

என்னென்ன வோபேசி
என்னைக் குழப்பாதீர்
இன்னும் பதிலுரைக்கா(து)
ஏய்க்காதீர் - உண்மையில்
ஆன்மீகம் சொல்வதென்ன
ஆய்ந்த பதில்தன்னை
ஏன்சொல்ல வில்லை
இனும் .

**அமின் :**

.

பண்டிகை எல்லாமும்
பாருக்குள் ஒன்றாகக்
கொண்டாடித் தானே
குவிகின்றோம் - மண்மீது
கோடி பிரிவிருந்தும்
கொள்கை பலவிருந்தும்
நாடிவரு வோமன்றோ
நாம்...?

.

**ஏடி :**

.

ஆமாம்! அதற்கென்ன;
ஆழப் பொருளென்ன
ஆமாம் அதுவாசொல்
ஆன்மீகம்? - நாமாகக்
கூடி மகிழ்வதையே
கொண்டு குழப்புவது
வேடிக்கை பேச்சாகும்
விள் .

.

**அமின் :**

.

ஒற்றுமை யோடும்
உணர்வோடும் கொண்டாடப்
பற்றோ(டு) இருப்பதற்கே
பண்டிகைகள் - அற்றமற
எப்போதோ முன்னோர்கள்
இக்கா ரணத்தால்தான்
செப்பினார் என்றுமனம்
சேர்.

.

**ஏடி :**

.

அப்பப்பா வாழ்வின்
அழகானத் தத்துவத்தைச்
செப்பியதைக் கண்டு
சிலிர்க்கின்றேன் - ஒப்பில்லா
ஆழ்ந்த கருத்தோன்
அமினை வணங்குகிறேன்
தாழ்த்திய வண்ணம்
தலை..

# உளி பேசும் மொழி



## 21


**நெல்லை க. சோமசுந்தரி**

(கவிஞர், எழுத்தாளர் & தொல்லியல் ஆர்வலர்),

சென்னை, தமிழ்நாடு


புராணம் என்பதற்கு 'பழமையான' என்று பொருள். புராணக் கதைகள் என்பது செவிவழிச் செய்தியாக, காலங் காலமாகத் தொன்று தொட்டு அடுத் தடுத்தத் தலைமுறைகளுக்குக் கடத்தப் பட்டவையாகும். அவ்வகையில், புராணக் கதைகளானது பழங்காலத்தில் நிகழ்ந்ததாகக் கருதப்படும் நிகழ்வின் பொருண்மையை எடுத்துரைப்பதற்கு அக்கால மாந்தர்களால் கையாளப்பட்ட ஒரு வழிமுறையாகக் கருதலாம். அவ் வழியே, திருவானைக்காவல் கோவிலை மையக் கருத்தாகக் கொண்டு அங்கு எழுந்தருளியுள்ள ஜம்புகேஸ்வரர் மற்றும் அகிலாண்டேஸ்வரி அம்மனையும் முதன்மையாகக் கொண்டு பல புராணக்கதைகள் உள்ளன. அவற்றில், இத்திருக்கோவில் உருவாவதற்குக் காரணமானவரின் தோற்றம் பற்றி ஒரு புராணக் கதையானது எடுத்துரைக்கிறது. அக்கதையின் படி கைலாய மலையில் உள்ள இரு கணநாதர்களான மாலியவான், புஷ்பதந்தன் ஆகிய இருவருக்குமிடையே, தங்களுக்குள் யார் சிறந்த சிவபக்தன் என்ற போட்டி உண்டானது. அந்தப் போட்டியின் தீவிர நிலையில் இருவருக்குமிடையே பகை உண்டாகி ஒருவரையொருவர் சபித்துக் கொண்டனர். அதனால் மாலியவான் சிலந்தியாகவும், புஷ்பதந்தன் யானையாகவும் பிறப்பெடுக்க வேண்டிய நிலையில் இருவரும் சிவபெருமானிடம் முறையிட்டு, தங்களுடைய சாபம் தீர்க்கும் வழியினை வேண்டினர். அதன்படி, அவர்கள் இருவரையும் சோழநாட்டிலுள்ள ஞான ஸ்தலத்தை அடைந்து, அங்குள்ள ஜம்புகேஸ்வரரை வழிபட்டு, தங்களுக்கான சாப விமோசனத்தைப் பெறுமாறு அருளினார்.

அவ்வகையில் யானையும், சிலந்தி யும் இறைவனை வழிபட்டு வந்தபோது அவர்களின் வழிபாட்டு முறையினால், மீண்டும் இருவருக்குமிடையே பகை யுணர்வுத் தோன்றியது. அந்தக் கோபத்தின் தாக்கத்தால் சிலந்தியானது, யானையின் துதிக்கையின் துளை வழியே மேலேறி, அதன் உச்சியில் சென்று கடித்தது. அதனால் யானையானது இறந்துவிட்டது. அதனுள் இருந்த சிலந்தியும் வெளிவர இயலாமல் உயிர் நீத்தது. இந்நிலையில் இறைவன் எழுந்தருளி

"யானையானவன் மீண்டும் கணநாத னாக விளங்குவான்" என்றும் யானை வடிவம் பெற்ற அவன் பெயராலேயே 'திருவானைக்கா' என்று இத்திருத்தலம் சிறப்புப் பெற்று விளங்கும் எனவும், சிலந்தி வடிவம் பெற்றவன் சோழர் குலத்தில், சுப தேவனுக்கும், கமலாவதி என்பவருக்கும் புதல்வனாகப் பிறந்து, கோச்செங்கணான் என்ற பெயரில் அரசாண்டு, பல நற்காரியங்களைச் செய்து பேறு பெறுவான் எனவும் வாழ்த்தினார்.

அப்பேறு பெற்ற கோச்செங்க சோழனால் கட்டப்பட்ட ஆலயமே, அவ்வரசன் ஞானம் பெற்ற திருவனைக் காவல் கோவில் ஆகும், மேலும் பல சிவதலங்களையும் கட்டியுள்ளதனை,

"எண்தோள் ஈசற்கு எழில் மாடம்





எழுபது செய்து உலகாண்ட" திருக்குலத்து வளர் சோழன் என்று திருமங்கை ஆழ்வார் பாடியுள்ளதன் மூலம் அம்மன்னனின் சிவபக்தியினை நம்மால் உணர முடியும். மேலும் சுந்தரர் பாடிய திருத்தொண்டர் தொகையில் 63 நாயன்மார்கள் வரிசையில் கோச்செங்கணான் சோழன் சேர்க்கப்பட்டிருப்பதன் மூலம் அவரின் சிறப்பினை நம்மால் அறிய முடிகிறது.

மேற்கூறிய புராணக்கதையின் வழியே, மற்றொரு புராணக் கதையானது, சிவபெருமான் ஒரு முனிவரின் தவத்திற்கு அருளியது பற்றி எடுத்துரைப்பதாகும். திருவானைக்காவல் கோவில் தலமானது நாவல் மரங்கள் நிறைந்து காணப்பட்ட சோலையாகும். அச்சோலையில்தவமிருந்த முனிவர் முன்னே நாவல் மரத்திலிருந்து ஒரு வெண் நாவல் பழம் விழுந்தது. அது மிக்க ஒளியுடையதாகவும் சுவையுடைய தாகவும் விளங்கவே, முனிவர் அப்பழத்தை இறைவனுக்குப் படைத்து, அதனைத் தாம் உண்டார். அப்பழத்தின் விதையானது, முனிவரின் வயிற்றிலிருந்து முளைக்கத் தொடங்கி, முனிவரின் தலையை மீறிக்கொண்டு வளர்ந்து மரமாகி நிரம்பத் தளிர்த்து விளங்கியது. அதனைக் கண்டு முனிவர் ஆனந்தக் கூத்தாடி பெருமானைப் போற்றினார். அவ்வாறு பெருமை பெற்ற வெண் நாவல் மரமே, இவ்வாலயத்தின் தல விருட்சமாக இன்றும் விளங்குகிறது. மேலும் மற்றொரு புராணக் கதையில் உலகாண்ட அம்பிகை உபதேசம் பெற்ற சிறப்பினைக் கூறுகிறது.

அம்பிகை ஒரு முறை ஈசனிடம் யோகத்தின் உண்மையைக் குறித்து விளக்குமாறு வேண்டினார். அதற்குச் சிவபெருமான் அம்பிகையை ஞான தலமாகிய திருவானைக்கோவில் சென்று தம்மை வழிபட்டு, தவம் செய்யும் படியும் அத்தவத்தின் பயனாகத் தாம் எழுந்தருளி, அம்பிகைக்கு உபதேசிப்ப தாகக் கூறினார். அவ்வழியே, அம்பிகையும் திருவானைக்காவல் கோவிலில் எழுந்தருளி, சிவபெருமானின் திருவடிகளைத் தியானித்து நீராலான தீர்த்தத்தைத் திரட்டி, ஒளி. பொருந்திய லிங்கமாகச் செய்து வழிபட்டார். அதனாலேயே, இவ்வாலயத்தின்மூலவர்'அப்பு(நீர்)லிங்கம் என்று இன்றும் அழைக்கப்படுகிறார்.

அம்பிகையின் தவத்தினைப் போற்றி, சிவபெருமான் காட்சி தந்து, உபதேசத்தினை வழங்கி யோகத்தின் உண்மை நிலையை எடுத்துரைக்கிறார். இங்ஙனம் இவ்வாலயமானது உபதேச தலம் என்று அழைக்கப்படுகிறது. அம்பிகை வழிபட்டதை உணர்த்தும் விதத்தில் இன்றும் இவ்வாலயத்தின் சிவாச்சாரியார் ஆணாக இருப்பினும் பெண் போன்று சேலையணிந்து, உச்சிகாலப் பூஜையின் போது, பசுவுடன் வந்து ஜம்புகேஸ்வரரை பூசிப்பது நடந்து கொண்டிருப்பதைக் காணும்போது அம்பிகையின் பக்தியினை



இந்நிகழ்வு மேலும் உறுதிப்படுத்துகிறது.

இம்மூன்று புராணக்கதைகளை நாம் படிக்கும் போது அவரவர் கற்பனையில் கதைகளானது மனக்கண்ணில் காட்சி யாகத் தோன்றியிருக்கும். அதனை அறியும் வகையில், இக்கதைகளின் சாரம்சத்தை ஒன்று திரட்டி நம் அகக்கண் முன் கொண்டு வர இயலுமா என்ற வினாவிற்குப் பதிலாக இங்குள்ள சிற்பத்தில் அதனைத் தத்ரூபமாகச் சிற்பியினால் உளியின் துணைகொண்டு செதுக்கிய விதம், அந்நிகழ்வுகளை நம் புறக்கண்ணால் பார்த்து அகம் மகிழ முடியும் என்பது மிகுந்த ஆச்சரியத்தை நமக்குள் ஏற்படுத்தும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. இவ்வாலயத்தின் மிக முக்கியமான பெருமைகளை எடுத்துரைக்கும் புராணக் கதைகளின் மொத்த பொருண்மையையும் ஒரேயொரு முழுமையான சிற்பத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அச்சிற்பத்தில் யானை மற்றும் சிலந்தி பூசிப்பதும், அம்பிகை பெருமானை வழிபடுவதும் அந்த முனிவர் வயிற்றில் முளைத்த வெண்நாவல் மரம் வளர்ந்து அவரின் தலைக்கு மேலே வளர்ந்து இருப்பதையும் கண்முன்னே நிறுத்துகிறது. அம்மரத்தின் கிளைகள் மற்றும் அதன் இலைகளும் வெண் நாவல் மரத்தின் உண்மையான நிலையினை உணர்த்துவது போல் அப்படியே வடிக்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்வாலயத்திலுள்ள சில தூண்களில் ஐந்து தலை நாகமானது, படமெடுத்து நிற்பதனைப் போன்று முப்பரிமாண வடிவத்தில் செதுக்கப் பட்டுள்ளது. அதனைநாம் பார்க்கும்போது கற்சிற்பமே ஆனாலும் உண்மையான ஐந்து தலை நாகத்தினை பிரதிபலிப்பதாக நேர்த்தியுடன் காட்சியளிக்கிறது. இவ்வா லயத்தின், இவ்வளவு சிறப்புகளையும், கடந்த சில மாதங்களாக உளியின் மொழியின் வாயிலாக நாம் அறிந்து கொண்டிருக்கிறோம். அவ்வாறே அடுத்துச் சிறப்புப் பெற்ற மற்றொரு ஆலயத்தினைப் பற்றி அறிய உளியின் மொழியோடு தொடர்ந்து பயணியுங்கள்.

உளியின் மொழி தொடரும்



# முடக்கப்படும் பெண்களின் திறமை

ஆண்களும் பெண்களும்
சமமானவரென்று நிரூபணமானதன்று..

பெண்களை தாழ்த்தும் காலம் வந்துவிட்டதின்று..

ஒரு ஆண் கல்வி கற்று பதவியேற்றால் மதிப்பும்
மரியாதையும் வரவேற்பும்..

ஒரு பெண் படித்து பதவியேற்றால்
வதந்திகளும் எதிர்மறை விமர்சனங்களும்..

ஒரு பெண் பத்தொன்பது வயதை எய்தி
விட்டால் கூடிய சீக்கிரம் திருமண பந்தத்தில்
இணைக்கப்பட்டு விடுகிறாள்..

சிறு வயதிலே தன் உறவுகளை விட்டுப் பிரியும்
அவள் கவலை கொள்வது
தன்னுறவுகளை பிரிந்ததற்காக மட்டுமல்ல
தன் கனவு கை கூட முன்னே கலைந்து விட்டதே
என்பதற்காகவும் தான்..

அவளைக் கருவியாக உபயோகிக்கிறார்களே தவிர
அவள் மனதைப்புரிந்து அவள் கனவுக்கு
கை கொடுப்பவர்கள் குறைவு..

உயர் கல்வி கற்ற ஆண் ஏசியறையில் என்றால்
உயர்கல்வி கற்ற பெண்
எரிக்கும் அடுப்பங்கரையில்
இதுதான் இன்றைய நிலை..

ஊது குழல் ஏந்தும் அவர்களின் கைகள்
எழுது கோல் ஏந்த துடிக்கிறது
ஏந்த விடாமல் தடுக்கிறது சூழ்நிலை...

தன்னுரிமைக்காக போராடும் பெண்களை
எப்படியெல்லாம் வார்த்தைகளால் வதைக்கிறார்கள்
நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்த போதிலும்
பெண்களுக்கு எங்கே கிடைத்தது சுதந்திரம்

பெண்கள் புரிந்து கொள்ள முடியாத புத்தகம்
அவளவனுக்கு மட்டுமே புரியும்
அவளின் மனதென்ற புத்தகம்
புரிந்து கொள்ள முயலாவிட்டால்
அவளை புரிந்து கொள்ளவே முடியாது

அவள் எதிர்பார்ப்பது தன் மனதை புரிந்து
ஆதரவாய் கூறும் தன் துணையின்
சில நம்பிக்கை வார்த்தைகள் மட்டும் தான்..

ஒவ்வொரு ஆணும் தன்னவள் திறமையை
கண்டறிந்து அவள் கனவை நனவாக்க
முனைந்தால் அவனுக்காக அப்பெண் எந்த
தியாகத்தையும் செய்ய முன் வருவாள்

**ரஸ்னா ரம்ஸான்**
அக்குறணை

# அதுவும் பறவும்..

எதையும்
ஊதிப் பெரிதாக்க நினைப்பவர்களுக்கு
பலூன்களை மட்டும்
பரிசாகக் கொடுங்கள்..
அவர்கள் ஊதி..
பெரிதாக்கி
அப்பரிசையும் கூட
பரவ விட்டுவிடுவார்கள்..
பறக்க விடுவார்கள்..
அதுவும் பரவும்..
பறக்கும்..
காற்றடைத்த வாழ்க்கையாய்!



**ம.சக்திவேலாயுதம்**
நெருப்பு விழிகள்

# துளிப்பாக்கள்

1.
வலையில் சிக்கிய மீன்
இழுபடும் கயிற்றில்
துடிக்கிறது நதி

2.
ஒற்றைத் தண்டவாளம்
கவிழாமல் நகர்கிறது
கட்டெறும்புகளின் வரிசை

3.
வளரும் காகம்
மெல்லக் கரைகிறது
பென்சில்

4.
நசுக்கியபடி செல்கிறது
இரயிலுக்கு எங்கே தெரியும்
பூவின் வாசம்

5.
உயர்ந்த கட்டிடம்
பள்ளத்தில் தெரிகிறது
சிதைந்த மலை

ஐ.தர்மசிங்
நாகர்கோவில்

# எம் பொம்மை!

தினந்தினமும்
நானொரு பொம்மையோடு
பேசுவது வழக்கம்..
இன்று அப்படி இல்லை..
நேற்று பேசிய
பொம்மையிடம்
இன்றும் பேசினேன்..
'நாளை நீ இருப்பாயா என்பது
எனக்குத் தெரியாது..
உன்னை என்னோடு
வைத்துக்கொள்ள
அப்பாவிடம் பேசி வருகிறேன்'
என்பதற்குள்
விற்று விட்டாள் அம்மா..
வாங்கிய..
என் வயதொத்த
முகத்தவளைப் பார்த்தேன்..
நானென நினைத்து
பேசிச் சிரித்து..
முத்தமிட்டு
அவளோடே சென்றது
எம் பொம்மை!

ம.சக்திவேலாயுதம்
நெருப்பு விழிகள்

# சின்ன சின்ன ஆசை

Dr.ஃபஜிலா ஆசாத்
சர்வதேச வாழ்வியல் ஆலோசகர்

சிறு வயதில் உங்களிடம் யாராவது, உங்களுக்கு பிடித்த விஷயங்களை, உங்களை மகிழ்ச்சிப்படுத்தும் விஷயங்களை சொல்லச் சொன்னால் என்ன சொல்லி இருப்பீர்கள்.. ஒரு கார்காலத்து மண்வாசனை, ஒரு மெல்லிய தூறல், எங்கோ தென்றலில் இசைந்து வரும் பாடல், வண்ணத்து பூச்சி, அன்றலர்ந்த மலர், பௌர்ணமி நிலவு, குழந்தையின் சிரிப்பு, அலைகளின் ஆரவாரம் – இப்படி நீண்டிருக்கும் உங்கள் பட்டியல்.

எத்தனை வயதானாலும், வாழ்க்கை எத்தனை அனுபவங்களை தந்திருந்தாலும், மனதின் ஏதோ ஒரு மூலையில் உயிர்ப் போடு வீற்றிருக்கும் உங்கள் இள வயது நினைவுகளை சற்றே மீட்டெடுத்து மீட்டிப் பாருங்கள், உங்கள் சின்ன சின்ன ஆசைகள் அது தந்த நிறைவு உங்களுக்குள் இப்போதும் ஒரு மகிழ்ச்சியாய் ஒரு அழகிய சித்திரம் வரையும்.

நீங்கள் ரசித்து, இலயித்து, அன்று உங்களுக்குப் பிடித்த விஷயங்களை சொல்லும்போதே உங்கள் மனம் எத்தனை சந்தோஷித்தது, உங்கள் முகம் எப்படி மலர்ந்தது என்று நினைத்துப் பாருங்கள். இயற்கை இப்படி எப்போதும் உங்களுக்கான மகிழ்ச்சியை இலவசமாக தான் உங்களுக்கு அள்ளித்தருகிறது. ஆனால் இன்றைய அவசர உலகில் இதையெல்லாம் சந்தோஷம் என்று நினைப்பதே குழந்தைத் தனம், அறியாமை என்று நினைக்கிறீர்கள். அதனால் உங்கள் மெல்லிய உணர்வுகளை கடினமாக உங்களுக்குள் இருத்தி அழுந்திப் போகிறீர்கள். அதையே உங்கள் வளர்ச்சியாக நினைத்துக் கொண்டு உங்களுக்குள் நீங்களே சுருங்கிப் போகிறீர்கள்.

இங்கு மகிழ்ச்சி என்பது விரும்பிய கோர்ஸில் சேர்வதும், விரும்பிய பட்டம் வாங்குவதிலும், விரும்பிய நாட்டில் வசிப்பதிலும் விரும்பிய நிறுவனத்தில், விரும்பிய வேலை கிடைப்பதிலும் விரும்பிய பொருளை அடைவதில் மட்டுமாக ஒரு மாய மான் வேட்டையில் உங்கள் கை நழுவிப் போய்க் கொண்டிருக்கிறது.

மகிழ்ச்சி என்பது செல்வ செழிப்பில் தான் இருக்கிறது, என்று '80' சதவீத மக்களும், 'பேரும் புகழிலும்' தான் இருக்கிறது என 50 சதவீதம் மக்களும் அதன் பின்னே ஓடுகிறார்கள் என்கிறது சமீபத்தில் உலகளவில் நடந்த ஆய்வு ஒன்று.

இந்த கல்லூரியில் இந்த கோர்ஸில் சேர்ந்து விட்டால், இந்த நிறுவனத்தில் இந்த வேலையில் சேர்ந்துவிட்டால், இந்த இடத்தில் இந்த வகையில் வீடு வாங்கிவிட்டால், அதுவே மகிழ்ச்சி என்பதாக ஏதோ ஒன்றை மகிழ்ச்சியின் இலக்காக வைத்து, அதை நோக்கிய பயணத்தில் இலக்கற்று அலைகிறது மனம்.

**எத்தனை முறை வீழ்ந்தாலும், காலம் என்னை பின்னோக்கித் தள்ளினாலும் நான் மீண்டும் மீண்டும் எழக் கூடியவன். என்னை நானாக வைத்திருக்கும் சின்ன சின்ன விஷயங்களே எனக்கு இதை சாத்தியமாக்குகின்றன என்றே நினைக்கின்றேன் – ஹெய்தி க்லம்**

அந்த என்றோ ஒரு நாளுக்காக மூச்சைப் பிடித்துக் கொண்டு மகிழ்ச்சியை தள்ளிப் போடும் மனம் அது கிடைக்காமல் போகும் போது, நினைத்தது நினைத்த நேரத்தில் நினைத்த மாதிரி நடக்காமல் போகும் போது, உடைந்து போவது தான் இங்கே கவனிக்க வேண்டிய விஷயம்.

ஏதாவது ஒரு சிறு பிரச்னை என்றாலும், அது தீரும் வரை, உங்களுக்குப் பிடித்த விஷயங்கள் மற்றும், பொழுது போக்கு, சந்தோஷம் என்பவையே taboo வாக ஒரு தவிர்க்கப் பட வேண்டிய விஷயமாக நினைக்கிறீர்கள், அவமானமோ, தோல்வியோ, பிஸினெஸில் நஷ்டமோ அவ்வளவு தான் காற்று கூட புக முடியாதபடி சந்தோஷக் கதவுகளை சாத்தி வைத்து மிரள்கிறீர்கள்.

அந்த பிரச்னை நீங்கும் வரை, அது சரியாகும் வரை, அந்த பிரச்னையை விட்டும் உங்கள் கவனம் சிதறி விடுமோ எனப் பதறுகிறீர்கள். அந்த இடைப்பட்ட கால நேரத்தில் இயல்பாக சிரிப்பதையோ, சந்தோஷிப்பதையோ, குற்றமாக நினைக்கிறீர்கள். இவ்வளவு பிரச்னைக்கிடையே, சந்தோஷமா, மகிழ்ச்சியா, இரசனையா என்று உங்கள் மனதே உங்களை கேட்க அனுமதிக்கிறீர்கள். பிரச்னையை விட்டும் உங்கள் கவனம் சிதறி விடாமல் அதன் தீவிரத்தை ஒவ்வொரு நொடியும் உணர்ந்து கொண்டிருந்தால் தான் உங்களால் உஷாராக இருக்க முடியும் என்று நம்புகிறீர்கள்.

நடந்த பிரச்னைகளையே மீண்டும் மீண்டும் அசைபோட்டு கொண்டு மனம் ஆறவில்லையே என உங்கள் மனமே உங்களிடம் அங்கலாய்க்கிறது. பிரச்னைகள் சூடான பானம் இல்லை அதை உற்று உற்று பார்த்து ஊதி ஊதி ஆற்றுவதற்கு.



அது ஊத ஊத பெரிதாகும் நெருப்புப் பொறி. எந்த பிரச்சினையாக இருந்தாலும் நீங்கள் உங்களுக்குப் பிடித்த விஷயங்களை செய்வதை விட்டும் நிறுத்தாமல் செய்து கொண்டிருக்கும்போது உங்களுக்குள் எழும் நிதானமும், தன்னம்பிக்கையுமே அந்த பொறி, உங்கள் கவலை அனைத் துக்கும் ஒரு மருந்தாகி உங்கள் மகிழ்ச்சியை தக்க வைக்கும்.

பிரச்னைகளையே நினைத்துக் கொண் டிருக்கும்போது, இனி என்ன செய்ய வேண்டும் என உங்கள் லாஜிக்கல் பிரைன் வேலை செய்யாமல் ஸ்ட்ரைக் பண்ண, உங்கள் எமொசனல் பிரைன், இப்படி செய்திருக்க வேண்டுமோ, அப்படி செய்திருக்க வேண்டுமோ என உங்கள் எண்ணங்களை அலை பாயச் செய்து நடந்த பிரச்னைகளையே மனம் மீண்டும் மீண்டும் அசை போடும்.

பொதுவாக 1+1=2 என்பது மாதிரி ஒரு பிரச்னை நடந்தால் நான் இப்படித்தானே இருக்க வேண்டும் என ஏதோ ஒரு பழக்கத்திற்கு கட்டுப்பட்டவர்களாக உங்கள் இயல்பை விட்டும் மாறி, மனம் கனத்து தலை குனிந்து தடுமாறிப் போகிறீர்கள். உண்மையிலேயே எவ்வளவு பெரிய ஆழமான அகலமான கடலாக இருந்தாலும் ஒரு படகில் அலைகளின் மேலே பயணம் செய்து கரை கடந்து விடலாம். ஆனால் அந்த படகுக்குள் சிறு தண்ணீர் புக விட்டாலும் அவ்வளவுதான் படகே தன்னிலை இழந்து மூழ்கி விடக் கூடும்.

அதுபோல பிரச்னையின் மேலே உங்கள் கவனம் இருக்காலாமே தவிர பிரச்னையை உங்களுக்குள் எடுத்துக் கொண்டால் அது உங்களையே மூழ்கடித்து விடும். அதனால் எந்த பிரச்னையிருந்தாலும் உங்களை சுற்றி நடக்கும் சின்ன சின்ன சந்தோஷங்களில் கவனத்தை செலுத்தினால் அதுவே எந்த கவலைக்கும் ஒரு ஆன்டிபயாட்டிக்காக பிரச்னையின் தீவீரத்திலிருந்து உங்களை தற்காக்கும்.

ஒன்றோடொன்றாக கோர்க்கப் படும் சிறு சிறு பூக்களே அழகிய பூமாலையாகிறது. சின்ன சின்ன சந்தோஷங்களை நீங்கள் உணர்ந்து அனுபவிக்கும் போது அது உங்களுக்குள்ளே தருகிற புத்துணர்ச்சியும் புதுத் தெம்பும் ஒரு பெரிய சந்தோஷமாக உங்கள் மனது நிறைந்து போகும்.

பல pixels சேர்ந்தே முழு உருவப் படமாக தொலைக் காட்சியில் வரும். ஒரு படமாக உங்களுக்கு தெரிகிற அதை zoom பண்ணி பார்த்தால் பல புள்ளிகளில் கோர்ப்பு தெரியும். சின்ன சின்ன அந்த புள்ளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது, அந்த உருவம் நல்ல கிளியராகத் தெரியும். எத்தனை சின்ன விஷயமாக இருந்தாலும் அதை மகிழ்ச்சியாக அனுபவிக்கும்போது பிரச்னைகளை தீர்க்கக் கூடிய ஆற்றல் உங்களுக்கு கிடைக்கும்

சிலருக்கு அவர்கள் பிரச்னையை மறக்கடிக்கிற அளவு வேறு ஏதாவது மிகப் பெரும் சந்தோஷமான சம்பவம் நடக்க வேண்டுமென்று எதிர் பார்ப் பார்கள். ஆனால் உண்மையில் அப்படி ஒன்று நடக்கின்ற வரை நீங்கள் உங்கள் மகிழ்ச்சியை தள்ளிப் போட வேண்டியதில்லை. சின்ன சந்தோ ஷங்களும் big picture ராக நல்ல மகிழ்ச்சி யாக உருவாகி எதையும் சமாளிக்கும் சக்தியைத் தரும்.

நீங்கள் நினைத்தது கிடைத்தால் அதை இயற்கையான மகிழ்ச்சியாக உங்க ளுக்கு தெரிகிறது. நீங்கள் நினைத் தது கிடைக்காமல் சந்தோஷிக்க முயலும் போது, அது உங்களுக்கு போலியான மகிழ்ச்சியாக synthetic happiness ஆக உங்களுக்குப் படுகிறது. ஆனால் நம்

மூளையின் frontal lobe இல் இருக்கும் pre frontal cortex பகுதி நீங்கள் செயற்கையாக செய்து பழகுவதை உங்களுக்கு இயற்கை யாக இயல்பாக செய்ய வைக்கும் அபார ஆற்றல் வாய்ந்தது. விமானம் ஓட்ட பழகுபவர்கள் முதலில் சிமுலேட்டரில் ஓட்டி பார்த்து பழகி பின் நேரடியாக ஓட்ட ஆற்றல் தரும் இந்த கார்டெக்ஸ் பகுதி, பிரச்னைகளுக்கிடையே, போலியாக நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க முயலுவதை, ஒரு பழக்கமாக எடுத்து எந்த சூழலிலும் இயல்பாக உங்களை மகிழ்ச்சியாக இருக்க செய்யும். அந்த சிந்தெட்டிக் மகிழ்ச்சியும் நீங்கள் நினைத்தது கிடைக்கும் போது அடையும் இயற்கையான மகிழ்ச்சியைப் போலவே தரமானது, நீடிக்கக் கூடியது என்கிறது அறிவியல்.

உண்மையில் பிரச்னையின் ஆழத்தை விட அது தரும் வலியை விட அதை சற்றேனும் இறக்கி வைக்க முயலாமல் உங்கள் மனதில் தூக்கி சுமப்பதே உங்களுக் குள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி மகிழ்ச்சியற்று தவிக்க செய்கிறது. உங்கள் சின்னஞ்சிறு குழந்தை அருந்தக் கூடிய சிறு டம்ளரில் கொஞ்சம் தண்ணீரை எடுத்துக் கொண்டு அப்படியே சற்று நேரம் சுமந்து பாருங்கள். காற்று போல இலகுவாக இருந்த அந்த டம்ளர், நேரம் ஆக ஆக உங்கள் கைகளுக்குள் சுளீர் என வலியை ஏற்படுத்தி, கைகள் கனத்து அசைவற்று போகுமளவு பாரமாகத் தெரியும். இதுவே உங்களுக்குப் பிடித்த பாடலை பாடிக்கொண்டே பிடித்த விஷயங்களை செய்து கொண்டே சுமந்து பாருங்கள். உங்களுக்கு அது இலகுவாகத் தெரியும். உண்மையில் சுமையில் இல்லை மனபாரம். மனபாரத்தில் இருக்கிறது சுமை.

எந்த சூழலிலும் மகிழ்ச்சியான மனநிலை கொண்டால், மனபாரம் மனபலமாகும். சுமைகளும் சுகமாகும். மகிழ்ச்சி மேலும் மலரும்.

# சிதறிக்கிடக்கிறது.,

சில நாட்களாகவே
நமக்குள் நிகழும்
கருத்து மோதல்களில்,
சிதறிக்கிடக்கிறது.,
நம் காதல் பக்கங்கள்..,

பிரிவின் பெருந்துயரை வேலையின்
திரையால்
துடைத்துக்கொண்டு,
வார இறுதி நாளின்
இரவொன்றில்
அவசர அவசரமாய்
கட்டியணைத்து,

நான் அவதானிப்பதற்குள் அழுத்தமாய்
நீ கொடுக்கும்
ஒற்றை இதழ்
முத்தத்தின் ஈரத்தில்
ஒன்று சேர்ந்து விடுகிறது
காதல் பக்கங்கள்.

ஊடலின் மொத்தக்
காலத்திற்கும் சேர்த்து
வாய்தா கேட்கிறது
முத்தங்கள்..!!!

மீ. யூசுப் ஜாகிர்,
வந்தவாசி.

# நெஞ்சமே ஒருமுறை நில்

நாள்தோறும் நாலாப் பக்கமும்
நாகரீகமென்ற ஆடைகளில்
நாசமாய்த் திரிவதைப் பார்த்து

நெஞ்சமே!
கலாச்சாரத்தை மீறும் இது வல்லவே
நாகரீகமென்று கேள்வி கேட்டது.

அசத்தியத்தை மொழிந்து
அடுக்குமாடியில் அமர்வதைக் காட்டிலும்

நெஞ்சமே !
சத்தியத்தில் நுழைந்து சாதாரணமாய்
பெருவாழ்வு வாழ்வது சிறப்பென்று
உரத்துச் சொன்னது.

கண்டவனைக் கொண்டவனாக்கி
சொற்ப சுகத்திற்காய்
சொர்க்கத்திற்கு தடைபோடும்
இன்பத்திற்கான பாவத்திற்கு

நெஞ்சமே !
பார்வைத் தாழ்த்தி  பெண்மையோடு
மென்மையாய் வாழ்வதே புகழென்று
பேரொலி ஒலித்தது.

செய்த உதவிகளையும்
உதாசீனம் செய்து
உறவுகள் விலகி நடந்திட
ஆவேசம் பீறிட்டு பாயும் வேளையில்

நெஞ்சமே!
இதுவல்லவோ இறுதித் தீர்ப்பென்று
இறைவனுக்காய் பொறுக்கச் சொன்னது.

பழிவாங்க பலமிருந்தும்
சாட்சியாய் பலரிருந்திருந்தும்
துரோகிகளையும் தூற்றாமல்
கடப்பதுவே அழகென்றது.

அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல
அத்தனையும் பொறுத்து இணைத்துப்
போகின்றேன்.
மனச்சாட்சியே பெரும்
சாட்சியாய்ச் சாடுகின்றேன்.

மானத்தை மழுங்கடித்து
மனது விரும்பும் விடயங்களில்

நெஞ்சமே!
ஒரு முறை நில் என்று மார்க்கத்தோடு
மலரச் செய்கின்றது.

மனச்சாட்சி இருக்கும் வரை
மனிதாபிமானமென்பது மரணிக்காது
மலர்ந்து மணம் வீசிக் கொண்டே இருக்கும்.

நெஞ்சமே !
ஒரு முறை நில்லென்று சொல்லி வெளிப்படுத்தி
வழிப்படுத்தும் அத்தனையிலும்
படைத்தவனின் அருள் அள்ளி இருப்பதை
உணர்ந்து கொள்ள தான் முடிகிறதே...

அகிலத்தைப் படைத்தவனை
அகத்தினுள் வைத்து
ஆழ் மனங்களையும்
அடக்கி ஆள்வதெல்லாம் நெஞ்சம் கேள்விக்
கணையைத் தொடுப்பதால் தான்.

முபீதா அமீன்
அக்கரைப்பற்று



**இரஜகை நிலவன்**

# அந்த மரத்தின் நிழலில்...

**வ**டக்குக் களத்தில் நின்றிருந்த வேப்ப மரத்தை பார்த்ததும் கட்டிப் பிடித்து அழ வேண்டும் போல தோன்றியது. கூட வந்த உறவினர்களை உணர்ந்து, கண்ணீர் வழிந்ததை துடைத்துக் கொண்டார் அப்பாத்துரை.

அந்தக் களத்தில் எத்தனை முறை மிளகு பழம் பறித்து வந்து காய வைத்தது, வற்றலாகிய மிளகை எடை போட்டு சந்தைக்கு எடுத்துப் போனது... கடலை எடுத்த சமயங்களில் காய வைப்பதற்காக இந்தக் களத்தில், இதே வேப்ப மரத்தில் வடக் கயிற்றைக் கட்டி, தொட்டில் போல பனை மட்டை சீவி ஊஞ்சலில் ஆடிக் கொண்டே காக்கா விரட்டியது...

அடுத்து இருக்கும் காம்பவுண்ட் சுவரைச் சுற்றியுள்ள பூவரச மரங்கள் ஒவ்வொன்றாய் தொட்டுப் பார்த்துக்

கொண்டே வந்த போது அப்பாவும் அம்மாவும் சேர்ந்து ஊன்றிய மரங்கள், தங்கை, நங்கை ஒவ்வொரு நாளும் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்து ஊற்றியது...

அதைத்தாண்டிய புகையிலை அவிக்கும் சூளைகள் தெரிந்தது. வருடம் தோறும் பச்சைப் புகையிலையை வெட்டிவந்து, வேலையாட்களை வைத்து கண்ணி போட்டு சரம்பில் எரித்து புகையிலையை பதப்படுத்தி கஷ்டம் ரூட்டி கட்டி அப்பா கோடடாத்தில் கமிஷன் கடையில் விற்று விட்டு வாங்கி வரும் திராட்சைப் பழத்திற்கு வீட்டிலே நடக்கும் சண்டை.

எல்லாவற்றையும் தாண்டி திரும்பவும் கீழ களத்தில் உள்ள தென்னை மரங்கள், மா, கொய்யா, ஒரு மல்லிகைச் செடி. துணி துவைக்கும் கல், (அம்மா துவைக்கும் லாவகம் ஞாபகத்திற்கு வந்தது) தாண்டி பழைய சீட்டிற்குள் வந்தபோது, 'என்ன சித்தப்பு, நாளைக்கு அந்த குவைத் பையன் வருகிறான். மொத்தமாக பணம் கொடுத்து விடுவான். நீங்கள் பணகுடி வரைக்கும் போய் எழுதிக் கொடுத்து விட்டு வந்தால் நாளை கழித்து டில்லி ரயிலிலே போய் விடலாம்' என்றான் தண்டபாணி.

'ஆமாம்' என்பது போல தலை யாட்டிக் கொண்டு முன் வரவேற்பரையில் அப்பா எப்போதும் அமரும் அந்தச் சாய்வு நாற்காலியில் அமர்ந்தார் அப்பாத்துரை.

உள்ளே வந்த நங்கை 'அண்ணே அந்த கிழக்கு களத்தில் நிற்கும் தென்னை மரங்களை மட்டுமாவது உங்க மருமக னுக்கு எழுதி வச்சிருக்கலாம். சரி, பரவாயில்லே. சாப்பிட வாறீகளா?' என்று முந்தானையால் மூக்கை சீந்தினாள்.

போன வருடம் வரை, அம்மா அப்பாவை பார்க்க வேண்டும் என்ற கண்டிப்போடு, எப்படியாவது ஊருக்கு வந்து அவர்களோடு ஒரு மாதமாவது தங்கி, தோப்பு, வயல் எல்லாம் பார்த்துக் கொண்டு, தன் இளமைக் காலங்களை தேடிப் பிடித்து விளையாடிய இடங் களை திருவிழா நாட்களில் செய்த சேட்டைகளை ஞாபகப்படுத்திக் கொண்டு திரும்பவும் தேங்காய், அரிசி என மூட்டைக் கட்டிக்கொண்டு டில்லிக்கு திரும்பும்போது அடுத்த வருடம் வரலாம் என்ற ஆறுதலோடு பயணித்த காலங்கள்.

இந்த இடங்களை இப்போது விற்று விட்டுப்போனால் இனி இங்குவர முடியுமா? தங்கைக் குடும்பத்தினர் அனைவருக்கும் துணிமணிகளோடு வந்த பிறகும், பாதி நாள் காபிக் கடையிலே சாப்பிட வேண்டிய சூழ்நிலை. இந்த ஊரில் இருக்கும் நிலங்களை விற்று விட்டுப் போய் திரும்பினால் கண்டிப்பாக இந்த உறவுகளுக்கு கூட வேற்று மனிதனாகத்தான் தோன்றுவேன்.

'அண்ணே, சாப்பிட வாரியளா. அவுக வேற தோப்புக்கு போயிட்டு வர்ற நேரம்' திரும்பவும் கேட்டாள் நங்கை.

'நங்கை எனக்கு பசிக்கலை. போய் உன் வீட்டுக் காரருக்குச் சாப்பாடு போடு நான் சாயங்காலம் வீட்டுக்கு வருகிறேன்' என்றார் அப்பாத்துரை.

எதுவும் சொல்லாமல் கிளம்பிப் போனாள் நங்கை.

'அப்போ, நான் கிளம்பட்டுமா சித்தப்பு. நாளைக்கு காலையிலே அந்தக் குவைத் நாகராஜனை கூட்டிண்டு வாறேன்' என்று தலையைச் சொறிந்தான் தண்டவாணி.

‘ரொம்பக் குடிச்சு வயித்தைப் புண்ணாக்கிக்காத. கொறைச்சுக்கடா‘ என்று பையிலிருந்து ஒரு நூறு ரூபாய் தாளை எடுத்து நீட்டினார்.

‘உங்களுக்கு சாயங்காலம் ஒரு குவார்ட்டர் பிராண்டி வாங்கிட்டு வரணுமா?‘

‘வேணாம் தண்டபாணி. நீ கிளம்பு‘ என்று சொல்லிவிட்டு எழுந்து புழக் கடைக்கு வந்து முகம் கழுவிக் கொண்டார்.

திரும்ப ஒருமுறை வீட்டை வலம் வந்தார். கல்லூரி முடியும் வரை ஏறக்குறைய இருபத்திரெண்டு வயது வரை இளமைக் காலத்தைக் கழித்த இந்த வீட்டை விற்க வேண்டுமா? டில்லிக்குப் போய் வேலை தேடி, திரும்ப வந்தபோது மல்லிகாவை திருமணம் செய்து வைத்த போதும், இரு குழந்தைகளையும் பெற்றுக் கொள்ள மல்லிகா ஊருக்கு வந்தபோது, அவளோடு வந்தது, அப்புறம் வருடம் தோறும் மே மாத விடுமுறைக்கு குழந்தைகளோடு வந்து ஆர்ப்பாட்டம் நடத்திவிட்டுத் திரும்ப அவசர வாழ்க்கைக்குள் புகுந்து கொள்ள ஓடியது...

யோசித்துக் கொண்டு திரும்பவும் வடக்குக் களத்திற்கும் கிழக்கு களத்திற்கும் ஒருமுறை வந்துவிட்டுத் திரும்பினார்.

ஊரின் கிழக்குக்கரையிலுள்ள காபி கடைக்கு வந்து ‘ஸ்டிராங்க் டீ போடு‘ என்று வடை எடுத்துக் கடித்த போது ‘எனக்கும் ஒரு டீ போடு. அப்பாத் துரையிடம் பைசா வாங்கிக் கொள்‘ என வடையும் எடுத்துக் கொண்டு ‘என்ன அப்பாத்துரை நிலத்தையெல்லாம் வித்துட்டு டில்லி யிலேயே செட்டிலாகப்போறியாமே‘ என்றார் இளமைக்கால நண்பர் தங்கசாமி.

# முகமூடி மனிதர்கள்

வையத்தின் இயல்பியலில்
வண்ணங்களாய் அத்தனையும்
வைரங்களாய் காலத்தால்
கரையாத விலைமதிப்பும்

படைப்புகளில் சிறப்பே
ஆறறிவு மானிடம்
மண்ணிலே முளைத்து
புதையும் விதைகளாய்

ஈயின் இறக்கை
போன்ற உலகினில்
ஈரமுள்ள உள்ளங்களும்
இல்லாமலும் இல்லையே

பொதுநலம் மறைந்து
சுயநலம் தலைவிரித்தாடும்
சுவர்க்கமாய் நினைந்து
கரையொதுங்கும் கூட்டங்கள்

அவையிலே ஒற்றுமையாய்
அகம்திறந்த மனங்கள்
அவதூறும் பொய்யும்
புரட்டுமாய் வாழ்வதேனோ?

மேடை நாடகங்களாகும்
குடும்பச் சீரழிவுகள்
மேன்மை நல்காத
இதயங்களின் ஊடுருவலால்தானே

சொற்ப ஆசைக்கும்
பணத்திற்கும் தொலைத்திடும்
அற்ப எண்ணங்கள்
குறைவதாய் தெரியவில்லை

ஏமாற்றும் நயவஞ்சகமும்
அணுவையே விஞ்சிவிடும்
முகமூடி மனிதர்கள்
உறவுகளுக்குள் சாபமே

**சேஹ்ஜு மொஹம்மது பெனாஸிரா**
முஸ்லிம் ஹல்மில்லாவ.

எதுவும் பேசாமல் சிரித்து வைத்தார் அப்பாத்துரை, ‘என்னவோப்பா வித்து டறது பெரிய விஷயமில்லை. குடுத்தா திரும்ப வாங்க முடியாது. அப்புறம் ஊருல வீடு, களம், தோப்பு, துரவுன்னு இருந்தாதான் இந்த ஊருக்குத் திரும்பவும் வரத் தோணும்‘ என்று சொல்லி டீ எடுத்து உறிஞ்ச ஆரம்பித்தார் தங்கசாமி.

‘நீ சொல்றது சரிதான் தங்கசாமி‘ என்று டீ கப்பை வைத்து விட்டு பணம் கொடுத்துவிட்டு அருகிலிருக்கும் தோப்புக்கு போனார்.

தோப்பைக் கவனித்துக் கொண்டிருந்த கதிர்வேல் வேகமாக ஓடி வந்து, ‘என்ன அப்பாத்துரை, நீங்க பாட்டுக்கு தோப்பையும் வித்துட்டுப் போறதா சொன்னீங்களாமே. இது பொன் விளையும் பூமி ஐயா‘ என்றான். தோப்பு தன் கையிலிருந்து கைநழுவப் போவதை உணர்ந்து,

‘யார் சொன்னது கதிர்வேலு‘

‘என்னவோ உங்க அண்ணன் மவன் தண்டபாணிதான் சொல்லிட்டிருக்காரு‘

‘அப்படியா?‘ என்று சொல்லி விட்டு அந்தத் தென்னந் தோப்பின் மாலை இளம் வெயிலின் நிழல்களில் குளித்துக் கொண்டே ஒருமுறை சுற்றித் திரும்பி வந்தார்.

மறுநாள் காலையில் தண்டபாணி கூடவே குவைத் நாகராஜனை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து, ‘என்ன சித்தப்பு. நீங்க லுங்கிக் கட்டிக்கிட்டு இருக்கீங்க. பணகுடி எழுத்தாபீஸுக்கு போவாண்டாமா?‘ என்று கேட்டான்.

‘இல்லை தண்டபாணி. நான் இப்போ எதையும் விக்க விரும்பலை. விக்கணும்னு தோணும்போது சொல்லி அனுப்பறேன்‘ என்றார்.

‘குவைத் ராஜன் வேற பணத்தை எடுத்துக் கொண்டு வந்திருக்கான்‘

‘ஸாரிப்பா‘ என்றபோது, ‘என்ன சித்தப்பு இப்படி பண்ணிப்புட்டீங்க‘ என்று முகத்தை சுழித்துக் கொண்டு தண்டபாணி குவைத் ராஜனை இழுத்துக் கொண்டு வெளியேறினான்.

உடனே செல்போன் அழைக்க, ‘ஹலோ சொல்லு குமணன். நான் அப்பாதான் பேசறேன்‘ என்றார்.

‘எல்லாவற்றையும் விற்று பணம் வாங்கி விட்டீர்களா. நான் இங்கே பிளாட் வாங்க அட்வான்ஸ் கொடுக்க வேண்டும்‘ என்றான் குமணன் எதிர்முனையில்.

‘இல்லப்பா நான் இருக்கிற வரைக்கும் இங்கே எதையும் விற்க விரும்பவில்லை. உனக்கு பிளாட் வாங்க டில்லி வந்ததும் பேங்கிலே லோன் போட்டு பணத்துக்கு ஏற்பாடு செய்கிறேன்‘

‘ஏம்பா.. இங்கேயிருந்து போகும் போது, வீடு, களம், தோப்பு, வயல் எல்லாம் விற்று பணம் கொண்டு வர்றேண்ணுதானே சொல்லிட்டுப் போனீங்க‘ என்றார் எதிர் முனையில் குமணன்.

‘ஸாரிப்பா இதெல்லாம் விற்கக் கூடிய பொருட்களில்லை. நான் நாளைக்கு டில்லிக்கு கிளம்பறேன்‘ என்று சொல்லி தொலைபேசி தொடர்பை துண்டித்துவிட்டு நிம்மதியாக அந்த சாய்வு நாற்காலியில் அமர்ந்தார் அப்பாத்துரை.

# சற்றே உற்றுப் பார்
# நீ ஏங்குவது எதற்காக?

என்றாவது சிந்தித்தாயா?
எல்லாம் மாயை....
ஆசையால் பிணைந்த எதிர்ப்புகள்
எல்லாம் மாயை....

பணப் பித்து பிடித்த மனமே!
உண்மையான அன்பின்
கரிசனம் என்றுமே
கிடைக்காது பணத்தாலே...

பெற்று வளர்த்த தாய், தந்தை
பட்டியலிட்டே உன்னிடம்
வளர்த்த கூலியை வட்டியும்
முதலுமாய் கேட்டால்... மகனே!
நீ அதைச் சம்பாதித்துக் கொடுக்க,
உனது வாழ்நாட்கள் போதாது.

புத்தியிருந்தால் புரிந்து கொள்.
பணத்தை சம்பாதிக்காமல்
அன்பான மனிதர்களைச் சம்பாதி..
உலகை அன்பான
சொர்க்கமாக மாற்றிடு.
எதிர்கால சந்ததியினருக்குச்
சேர்க்க வேண்டிய சொத்து.

தூய்மையான இயற்கையின் மடியில்
எதிர்கால உலகம் தவழ
அன்பைச் சம்பாதியுங்கள்.

**பாதிமா நளீபா**

# விழுது விளையாட்டு..!


வாலிபம் என்பது
இயற்கையின் கொடையா
வயோதிகம் என்பது
வாலிபத் தடையா..?

ஜாலிகள் என்பது
இளமைக்கு மட்டுமா
சக்தி இருப்பினும்
முதுமைதான் மட்டமா..?

லாலிகள் பாடிட
முதுமையோர் சுமையா
இராத்திரி உற்சவம்
முதுமையின் பகையா...?

வேலிகள் என்பது
மனதுக்கு இல்லை
விழுதுதொட் டாடிடும்
விளையாட்டுப் பிள்ளை...!

**பொற்கைப்பாண்டியன்**



படம் : ஈஸ்வரராசா..



# ஏக்கமும்..
# ஏமாற்றமும்..

அத்தனைக்கும்
பேராசைப்படுபவர்களுக்கு
வாழ்க்கையில் மிச்சமும் சொச்சமும்
ஏக்கமும்.. ஏமாற்றமுமே!

துளியான ஆசை
தூள்தூளாகும் போது
பிறப்பது ஏக்கம்..
அது துளித்துளியானால் ஆக்கம்!

எத்தனை ஏக்கங்கள்..
எத்தனை எத்தனை ஏக்கங்கள்..
சலனம் கொள்ளாதே..
சபதம் கொள்..உடைத்தெறி!

எத்தனையோ ஆக்கங்கள்..
அத்தனையும் மகிழ்ச்சிகள்..
உன் முயற்சிக்கு கிடைத்த
மாபெரும் பரிசுகள்!

வாழ்க்கையை சரிசமமாய் பார்..
ஏக்கம் கூட
சிறந்த ஊக்கம் தான்..
உன் விடாமுயற்சியால்!

ஒரெழுத்தை நீக்கி
கொஞ்சம் மாற்றிப் பார்..
ஆசைகள் நிறைவேற
ஊக்கம் ஊக்கியாய் வரும்!

ஏங்கி ஏங்கி அழுவதற்கு
ஒன்றுமில்லை இங்கு..
ஓங்கி ஓங்கி எழுவதற்கு
எல்லாமும் உண்டிங்கு!

தாங்கி நின்றிட
தன்னம்பிக்கை கொள்
தேங்கி ஏங்கி நிற்காமல்
நதி போல ஓடு!

ஏக்கத்தை தேக்கி வைக்கும்
நீர்தேக்கமல்ல நீ..
ஆக்கத்தை ஊக்குவிக்கும்
அணைக்கட்டு நீ!

நடக்காத ஒன்றை நம்பி
வீழ்ந்து கொள்ளாதே..
நடக்கக் கூடியதோடு கூடி வாழ்ந்து பார்!

உடல் வருத்தி தூக்கம் தொலைக்கும்
ஏக்கத்தை ஏற்றிக் கொள்ளாதே தலையில்..
உன் காலடியில் ஏற்றியே கொல்!

ஏக்கத்தின் நீட்சியை
மனசு வரையறுக்கிறது
'ஏமாற்றம்' என்ற புனைப்பெயரில்!

நினைத்தது நடக்காததை
எண்ணி வருந்தி நிற்காதே
நினைத்தது நடக்க எண்ணி
மாற்றங்களை கரம் சேர்!

வாழ்க்கை அகராதியில்
ஏமாற்றம் என்ற சொல்லை
படிக்காத மனிதர்கள் மனிதர்களா?
இல்லவேயில்லை!

ஓரெழுத்தை களைந்து பார்..
ஏமாற்றம் கூட
உனை விட்டுப் பறந்து போகும்..
மாற்றமாய் நிமிர்ந்து வாழும்!

படிப்படியான மாற்றத்தை ஏற்றுக் கொள்..
இல்லையெனில்
ஏமாற்றம் தொற்றிக் கொல்லும்!
அதீதமான மாற்றம்
புதுமையான தோற்றத்தை
உண்டு செய்யலாம்..
நிறைவாய் அதுவும் ஏமாற்றமே!

ஏமாற்றத்தால் கலங்கியவர்கள்
ஒருபோதும் வென்றதில்லை..
ஏமாற்றத்தை கடந்தவர்கள்
வெல்லாமல் இருந்ததில்லை!

காலம் கனிய
பல மாற்றங்கள் காண்..
காலம் மாற
சில ஏமாற்றங்களே வான்!

மனசைப் படுத்தும் ஏமாற்றம்
தோல்வியல்ல உணர்..
அது வாழ்வின்
படிப்பினை என்றே நிமிர்!

ஏமாற்றத்தை சந்தித்துப் பார்..
வாழ்க்கையை சிந்திக்க முடியும்!
வாழ்க்கையை சிந்தித்துப் பார்..
மாற்றத்தை சந்திக்க முடியும்!

ஏக்கத்தை ஆக்கமாக்கு..
அதற்காகவே இயங்கு..
அழுது உலர்ந்த வாழ்க்கை
விழுது விரிந்த விருட்சமாகட்டும்!

ஏமாற்றத்தை மாற்றமாக்கு..
அதற்காகவே எழுந்துகாட்டு..
அவநம்பிக்கை மனசு
தன்னம்பிக்கை புதையலாகட்டும்!

ஏக்கத்தை தூக்கி வீசு..
ஏமாற்றத்தை தள்ளி வை..
என்றும் வாழ்க்கைப் பிடியில்
நீயே வெற்றிப் படியில்!

**ம.சக்திவேலாயுதம்**




இலங்கை சம்மாந்துறையைப் பிறப்பிடமாகவும் தற்போது மருதமுனையை வசிப்பிடமாகவும் கொண்டவர் சித்தி மஷூறா சுஹூறுத்தீன்.1979 ல் மஷூறா ஏ மஜீத் என்ற பெயரில் வானொலியில் எழுதவாரம்பித்து இலங்கையின் தேசிய பத்திரிகைகள் அனைத்திலும் மற்றும் சஞ்சிகைகளிலும் எழுதியவர். தற்போது பல மின் சஞ்சிகைகளிலும் எழுதி வருகிறார். sithy mashoora suhurudeen என்ற தனது முகநூல் பக்கத்திலும் தனது படைப்புகளை பதிவேற்றி வருகிறார்.

கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், பாடல், வில்லுப்பாடல், தாளலயம் பேச்சு, சித்திரம், கைப்பணி, சஞ்சிகை என பல் துறைகளிலும் தேர்ந்தவராவார்.

2021 ல் கிழக்குமாகாண கலாசார அலுவல்கள் திணைக்களம் வழங்கிய இலக்கிய வித்தகர் விருது உட்பட இலக்கியத்திற்காக பதினைந்து விருதுகள் பெற்றுள்ளார்.சுற்றாடல் அமைச்சின் ஆசிரியர்களுக்கான பசுமை விருது கல்வியமைச்சின் ஆசிரியர் பிரதீபா பிரபா விருது உட்பட சாரணியம் முதலுதவி போன்றவற்றில் ஈடுபாடுகாட்டியமைக்கான சேவை விருது என்பனவும் பெற்றுள்ளார். இலங்கை இந்தியா உட்பட பல கவிதைத் தொகுதிகளில் இடம்பெற்றிருக்கிறார்.

நதிகளின் தேசிய கீதம் இவரது கவிதைத் தொகுதியாகும்.மூன்று தொகுப்பு நூல்களைத் தந்துள்ளார்.

இவரால் ஸ்தாபிக்கப்பட்டு இயங்கிவரும் Sri Lanka pen club ஆற்றலுள்ள பெண்களுக்கு களம் அமைக்கும் பணியைச் செய்து வருகிறது. இவ்வமைப்பின் மூலம் அவரி என்ற காலாண்டு சஞ்சிகையொன்றினையும் வெளியிட்டு வருகிறார்.இவ்வருடம் (2024)க்கான சாஹித்திய விருதினை அவரி வென்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. முப்பதுக்கு மேற்பட்ட சஞ்சிகைகளின் ஆசிரியராக செயற்பட்டிருக்கிறார்.

பாடலாக்கம்,கவிதை,சிறுகதை ,நாடகம் என தேசிய மட்டத்தில் பல வெற்றிகளைப் பெற்றுள்ளார். தேசிய மட்டத்தில் நாடகத் தயாரிப்பிற்கான விருதும் பெற்றுள்ளார்.

இவர் அகில இலங்கை சமாதான நீதவானுமாவார்.



நேர்காணல்

## இலக்கிய வித்தகர்

# மஷூறா சுஹூறுத்தீன் (JP)



***கவிதாயினியாக, கைப்பணிக் கலைஞராக, சித்திரக் கலைஞராக ஓர் அமைப்பின் ஸ்தாபகராக, ஓய்வு பெற்ற ஆசிரியராக பன் முகத் துறைகளில் மிளிரும் நீங்கள் உங்கள் அமைப்பைப் பற்றி, அதன் செயற்பாடுகள், எதிர்காலத் திட்டங்கள் பற்றிக் கொஞ்சம் கூறுங்களேன்!***

இலக்கியம் மட்டுமன்றி அனைத்து ஆற்றல்களையும் பெண்கள் வெளிப் படுத்துவதில் பெரும் சவால் களுள்ளன. தற்காலத்தில் கணிசமான அளவு இத்தகைய குறுக்கீடுகள் குறைந்திருந்தாலும் இன் னும் குறைய வேண்டியிருக்கிறது. நான் எழுதவாரம்பித்த அல்லது எழுதிக் கொண்டிருந்த கால கடடங்களில் பெரும்பாலான பெண் எழுத் தாளர்கள் ஆண் எழுத் தாளர்களின் வழி காட்டலில் தம் ஆற்றல்களை வெளிக் கொணர்வதாய் எண்ணிக் கொண்டு அவர்களது பிடிக்குள் அடங்கிக் கிடந்ததையும் நான் அறிவேன். அத்தகைய பெண்கள்

தான் வாழும் சமூகத்தில் இழிவாக விமர்சிக்கப்பட்ட சந்தர்ப்பங்களையும் அறிவேன். தங்கள் பெயர்களை கெடுத்துக் கொண்டு சொந்த வாழ்க்கையில் நொந்து போனவர்களுமுண்டு. இத்தகைய அவல நிலைக்கு மூத்த பெண் எழுத்தாளர்களும் கணிசமான காரணம்தான். இளையவர்களை வழிநடத்தவோ கைதூக்கி விடவோ அனு சரணை கொடுக்கவோ இவர்கள் முன் வந்ததில்லை. இத்தகைய வழி நடாத்தல் கைதூக்கல் அல்லது அனுசரணை வழங்கும் நோக்கில்தான் இந்த **Srilanka Pen Club** ஐ ஆரம்பித்தேன். பின்னர்தான் வெவ்வேறு அடைவுகளை இலக்குகளை நோக்கிய திட்ட மிடல்கள் நகரலாயிற்று.

தற்போது கலையிலக்கியம் சார்ந்ததாக மட்டுமன்றி பெண்களுக்கு அவசியமான வலுவூட்டல்கள் வாழ்க்கைத் தேர்ச்சிகளை அடைவதற்கான இலக்கு நோக்கி எமது அமைப்பு பயணிக்கிறது.

எதிர்காலத்தில் இதனை ஒரு நூல் வெளியீட்டு நிறுவனமாகவும் பொதுப் பணியில் ஈடுபடக்கூடியதாகவும் கட்ட மைக்கும் முன்னெடுப்புகள் உள்ளன.

பணிப்பங்கீடுகள் மூலம் பெரும்பா லோரின் ஆத்மார்த்தமான ஒத்துழைப்பும் உழைப்பும் எமது அமைப்பை உயிரோட் டமாக வைத்திருக்கிறது.

**உங்கள் அமைப்பை சர்வதேச ரீதியில் கொண்டுபோக நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் எவை?**

சர்வதேச ரீதியில் கொண்டுபோகும் இலட்சியம் உள்ளதுதான். ஆயினும் அதில் அவசரப்படுவதாக இல்லை. உள வீட்டில் பசியோடிருப்பனுக்கு வயிறார உணவிட்டு பசி தீர்ந்தபின்தானே அடுத்த தெருவைப்பற்றி சிந்திக்க முடியும். எங்கள் அமைப்பின் பெண்கள் தங்களது ஆற்றல்களை மேம்படுத்திக் கொள்ள




2016 உலக இஸ்லாமிய தமிழ் இலக்கியப் பொன்விழா கவியரங்கில்

தாகித்திருக்கிறார்கள். எனவே சர்வதேச ரீதியில் முன்னெடுப்பதை ஆறுதலாக ஆற்றலாமென நினைக்கிறேன்.

***பழைய கால இலக்கியத்துறையை விட நடைமுறைக்கால இலக்கியத்துறை மேம்பட்டிருக்கிறதா?***

மேம்பட்டிருக்கிறதெனச் சொல்ல முடியாது. பரவலாக இலக்கியம் என்ற பெயரிலாவது தமது எண்ணங்களை தாபங்களை வெளிப்படுத்துகிறார்கள். இதற்கு இணையத்தளங்களின் வரவு முக்கிய காரணம். யாரும் யாரையும் அங்கீகரிக்க வேண்டியதில்லை.

அன்றைய காலகட்டத்தில் ஒரு ஆக்கத்தை பத்திரிகைக்கு அனுப்பி விட்டு மாதக்கணக்கில் பிரசுரத்திற்காக காத்திருப்போம். பிரசுரமாகாமலும் போகும். ஒரு படைப்பின் இலக்கியத்தரத்தை நிர்ணயம் செய்ய வாய்ப்பிருந்தது. இப்போது இலக்கியம் என்ற பெயரில் எதை எழுதினாலும் பதிவிட முகநூல் சுவரிருக்கிறது. எனது சுவர். நான் எப்படியும் பெயின்ட் அடிக்கலாம். யாரும் வடிகட்ட வேண்டியதில்லை.

***எதிர்கால சந்ததிக்கு நம் கலாசார பண்பாட்டு விழுமியங்களை பழுது படாமல் கொண்டு சேர்க்க எவ் வகையான உத்திகளைக் கையாளலாம்?***

கலைகளினூடு இதனை கடத்த முடியும். ஆனால் அதை கொண்டு செல்லும் முன் பாதுகாக்க வேண்டிய அவசியமிருக்கிறது. அவை இன்று அருகி வருவதே ஒரு ஆபத்தான நிலைதான். நவீன யுகத்தின் இளம் சமுதாயம் பழையனவற்றை முற்றிலும் புறந்தள்ளி விபரிப்புகளில்லாத சுருக்கமான முறையிலேயே அனைத்தையும் கையாள விரும்புகிறது. நம் கலாசார பண்பாட்டு விழுமியங்களின்



கல்வியமைச்சின் பிரதீபா பிரபா விருது பிரதமரிடமிருந்து (2014)



மருதமுனை நாணல் அமைப்பின் மகளிர்தின கௌரவம் (2024)



2021 கிழக்கு மாகாண கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இலக்கிய வித்தகர் விருது.

அழிவிற்கான காரணமும் கணிசமான அளவு இவர்கள்தான். இவர்களிடமிருந்து பாதுகாத்து இவர்க ளுக்கும் இவர்களின் சந்ததிகளுக்கும் கையளிக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு எமக்கிருக்கிறது. நூல் வெளியீடுகள் இவற்றை பாதுகாப்பதற்கான உத்திகளில் முதன்மையானதாக கருதலாம். இன்றும் இலங்கையைப் பொறுத்தவரை இவ்வாறான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. கலாசார நிகழ்ச்சிகள் கூட பங்களிப்பு செய்ய முடியும். பக்கீர் பைத் களிகம்பு கஸீதா போன்ற கலாசார அம்சங்கள் பற்றிய மூன்று ஆய்வு நூல்களை கிழக்குமாகாண கலாச்சார அலுவல்கள் திணைக்களம் கடந்த வருடம் வெளியிட்டிருந்தது. வெளியீடுகளால் அறிவை மட்டுமே தக்க வைக்க முடியும். எனினும் செயற்பாட்டு ரீதியில் இடம்பெற்றால் மட்டுமே மேம்பாடடையும். அது வருங்காலங்களில் சாத்தியமான விடயமில்லை. அசாத்தியத்திற்கான காரணிகள் நிறையவுண்டு.

**இலக்கிய விடயங்களில் கிழக்கிலங்கை வாழ் மக்களுக்கு அரசினால் கிடைக்கும் அனுகூலங்கள் ஏனைய மாவட்ட, பிரதேச வாழ் மக்களுக்கு கிடைப்பதில் தடைகள், சிக்கல்கள் உள்ளனவே! இதற்கு என்ன காரணம் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

நானும் இதனையிட்டு சிந்தித்திருக்கிறேன். கிழக்குமாகாண கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் இலக்கியம் நாட்டாரியல் சிற்பம் இசை பல்துறை என வித்தகர் இளம் கலைஞர் விருதுகளும் பல்திறன் போட்டிகளும் இடம்பெறுகின்றன. அவ்வாறு விண்ணப்பம் கோரும்போது நாம் எமது அமைப்பின் வாட்சப் குறூபில் தெரிவித்தும் விடுகிறோம். ஏனைய மாகாணத்திலுள்ளவர்கள் தங்கள் மாகாணங்களில் நடைபெறுவதே இல்லை என்கிறார்கள். தவிர மாகாண அலுவல்கள் மட்டுமன்றி தேசிய ரீதியிலும் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் பொறுப்பான கலாசார உத்தியோகத்தரிருக்கிறார். தேசிய ரீதியில்தான் கலாபூஷணம் விண்ணப்பங்கள் பிரதேச செயலகங்களுக்கூடாக கோரப்படுகின்றன. கலை கலாசாரப் போட்டிகளும் நடைபெறுகின்றன. ஏனைய மாகாணங்களில் இவை இல்லை என்கிறார்கள். பெரும்பான்மை இனத்தவர்கள் வாழும் பிரதேசங்களில் தாங்கள் புறக்கணிக்கப்படுவதான ஒரேயொரு காரணம்தான் சொல்லப்படுகிறது.

குறிப்பிட்ட ஒரு மாகாணத்தில் மாகாணப் பணிப்பாளரின் சிந்தனையில் புதிய அம்சங்கள் இடம்பெற வாய்ப்புண்டு.



2022 சிறீலங்கா பெண்கிளப்பின்
இரண்டாவது மாநாட்டின் தலைமையுரை




2022 பாடசாலை உலக ஆசிரியர் தின விழாவில் வில்லுப்பாடல் தலைமை

ஆயினும் செயற்திட்டங்கள் வேறு பட்டாலும் தேசிய ரீதியில் அனைத்து பிரதேசங்களும் ஒரே திட்டமிடலில்தான் இடம்பெறும். இவ்விடயம் பற்றி எமது அமைப்பு புதிய வருடத்தில் பிரச்சினைகளை இனம்கண்டு தீர்வுபெற எண்ணியிருக்கிறது.

**நிகழ்கால மாணவர்களின் கலாச்சார சீர்கேட்டிற்கு பெற்றோர்களின் வழிநடத் தல்கள் காரணமா அல்லது ஆசிரியர்களும் பாடசாலை சூழல்களும் தான் காரணமா?**

முதற்காரணம் கல்விக் கொள்கைதான். சிறுவர் உரிமை என்ற பெயரில் அதீத சுதந்திரங்கள் வழங்கப்படுவதால் பெற்றாரோ ஆசிரியர்களோ வழிகாட்டிகளாயிருந்து மாணவர்களை நல்லவற்றின் பால் ஏவ திராணியற்றுப் போயினர். தண்டனை முறைகள் எதுவும் பிள்ளைகள் மீதான வன்மம் காரணமாக நிகழ்த்தப் படுவதில்லை. சில புறநடைகளிருக்கலாம். புறநடைகள் எதில்தானில்லை. நானும் ஒரு ஆசிரியை என்ற வகையில் மாணவர்களை நல்வழிப்படுத்த எடுத்துக் கொள்ளும் சவால்களை அறிவேன். ஒரு மாணவனை இன்னொரு மாணவன் உடல் ரீதியாக இம்சை செய்தாலும் ஒரு மாணவன் ஒரு மாணவியை பாலியல் ரீதியாக துன்புறுத்தினாலும் அவனை ஒரு ஆசிரியர் தண்டிக்க உரிமையில்லை. கண்டு கொள்ளாமல் குருடனாயிருக்க வேண்டும். சட்டதிட்டங்களை ஒருபுறம் தூக்கிப் போட்டுவிட்டு மனச்சாட்சியுள்ள ஒரு ஆசிரியன் குருடனாய் நடிக்க முடியுமா? தண்டித்தால் மனித உரிமை மீறல் வழக்கில் ஆசிரியர் தொழிலைக்கூட இழக்க வாய்ப் புள்ளது. ஆசிரியர்களோ பாடசாலை சூழலோ காரணமாக முடியாது. கணிசமான ஆசிரியர்கள் ஓரளவேனும் கண்டித்தாலும் பெரும்பாலானோர் தமக்கேன் வீண்வம்பு என ஒதுங்கி விடுகின்றனர்.

பெற்றாரும் இவர்களை சரியாக வழிநடத்தாத தன்மை அதிகமுள்ளது. முறையற்ற ஆடைக்கலாசாரத்துடன் பாட சாலைக்கு ஒரு பிள்ளை வருவது வீட் டிலிருந்துதான். பெற்றாரின் கண்டு கொள்ளாமைதான் பாடசாலை கட் டொழுங்குகளை சீர் குலைக்கிறது. ஆசிரி யர்கள் தண்டித்தால் போர்க்கொடி தூக்கிக் கொண்டு ஆசிரியர்களை பழி வாங்கும் கலாசாரம் பெற்றாரிடை மேலோங் கியிருப் பதும்தான் மாணவர்களின் கலாசார சீர் கேட்டிற்கு காரணம்.

**மாணவ சமுதாயம் ஒழுக்க விழுமியங்களை சிறந்த முறையில் கடைப்பிடித்தொழுகவும் சமுதாயச் சீரழிவுகளைத் தடுக்கவும் ஓர் ஓய்வு பெற்ற ஆசிரியராக, நீங்கள் கூறும் அறிவுரை என்ன?**

தண்டனை முறைகள் கொண்டு வரப்பட வேண்டும்.

இயலுமை குறைந்த மாணவர்களை சித்தி எய்தாமல் செய்தல் வேண்டும்.

பாடசாலையில் சமய பாடத்தை விரிவு படுத்தி மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் அனைத்து மாணவர்களையும் அவசியம் ஈடுபடச் செய்ய வேண்டும்.

கல்வித் திட்டம் எவ்வாறிருந்தாலும் அறிவு மட்டுமே இன்று அரசோச்சுகிறது. திறன்விருத்தி மனப்பாங்கு மாற்றம் திட்டமிட்ட அடைவை பெறவேண்டும்.

**கவிதைகள் எழுத இலக்கணக் கோட்பாடுகள் இருப்பதாக கவி வித்தகர்கள் சொல்கிறார்களே! இதில் உங்கள் நிலைப்பாடு என்ன?**

இருக்கிறது.அதனை கைக்கொண்டும் எழுதலாம். மீறியும் எழுதலாம். முன்னையது மரபுக் கவிதைகள். பின்னையது பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. மரபையும் தெரிந்து கொண்டு எழுதுவது சிறப்பு. எந்த வடிவத்தில் எழுதினாலும் வாசகனை சென்றடைந்தால் போதுமானதென நினைக்கிறேன். ஒவ்வொரு எழுத்தாளனின் இலக்கும் அதுதானே.

**ஒரு படைப்பாளியின் படைப்பு எப்போதுமே கொண்டாடப்பட, பேசப்பட வேண்டுமானால் அப்படைப்பு எப்படியானதாக அமைய வேண்டும்?**

எதார்த்தம் அவசியம் இருக்க வேண்டும். இன்றைய காலகட்டத்தில் புனைவுகளுக்கு மதிப்பில்லை. எழுத்து

2024 ஸ்கை தமிழ் விருது



நடையில் மேதாவித்தனங்களை காட்டுவதை விட சாதாரண வாசகனும் புரியக்கூடியவாறும் எழுத வேண்டும். தனக்கென ஒரு தனித்தன்மையை எழுத்தில் கையாண்டாலும் படைப்பாளன் தனித்து நிற்கக்கூடாது. ஏனையவர்களின் படைப்புகளை எள்ளி நகையாடக்கூடாது. அவ்வாறானவர்கள் எத்தனை தரமாக எழுதினாலும் யாரும் கண்டு கொள்வதில்லை.

**உங்கள் அமைப்பின் இதுவரைக்கால சாதனைகள் எவை?**

எழுதி முடித்துவிட்டோம் என ஒதுங்கியிருந்த மூத்த பெண் படைப்பாளிகளை மீண்டும் இயங்கு நிலைக்கு கொண்டு வந்திருக்கிறோம். களங்களை அறிமுகப்படுத்தி இளையவர்களை தாராளமாக எழுதச் செய்திருக்கிறோம். எம்முள் நூலாசிரியர்கள் அதிகரித்திருக்கிறார்கள். முதன்மையானதாக மூன்று நூல்களை இலக்கியப்பரப்பில் முன் வைத்திருக்கிறோம். அவரி என்ற காலாண்டு சஞ்சிகையை ஆரம்பித்து எம்மவர்களுக்கு களம் வழங்கி ஊக்குவித்திருக்கிறோம் .சிறந்த விமர்சகர்கள் நூல்நயம் செய்பவர்கள் உருவாகியுள்ளனர். வாசிப்புப் பழக்கத்தை அதிகரித்திருக்கிறோம். பிறமொழி இலக்கியப் பரிச்சயங்களும் நிகழ்ந்திருக்கிறது. நிகழ்காலத்திற்குத் தேவையான பலவித வாழ்க்கைத் தேர்ச்சிகளும் ஏற்படுத்தியிருக்கிறோம். அனைத்தையும் விட சுயமாக இயங்கும் தன்னம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

**இலக்கியத்துறையில் பல தசாப்தங்களாக இயங்கி வரும் நீங்கள், இதில் புதிதாகக் கால் பதிப்பவர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

முதற்கண் முகநூலில் குழுமங்களில் நான்கு வரி ஆறு வரிக் கவிதைகளை எழுதி விட்டு சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்றுவிட்டதாக திருப்தியடையும் முட்டாள்தனத்தை மூட்டை கட்டுங்கள். இந்த அறியாமை உங்களை வளரவே விடாமல் முடக்கிப்போடும்.

வியாபார நோக்கத்தில் நூல்கள் வெளியிடும் முகநூல் குழுமங்களிடம் ஏமாறாதீர்கள் (சில சிறந்த அமைப்புகளும் உண்டுதான்.) நீங்கள் செலுத்தும் அதே கட்டணத்திற்கு நம் நாட்டிலேயே அதைவிட இருமடங்கு நூல்களை நீங்கள் பெறலாம். தவிர அவர்கள் ISBN முத்திரை தருவதில்லை. ISBN முத்திரையற்ற நூல்கள் உங்களுக்கு எந்த அங்கீகாரத்தையும் தராது.





2016 உலக இஸ்லாமிய தமிழிழக்கிய மாநாட்டில் இலக்கியத்திற்கான விருது

நம்நாட்டின் அச்சுப் பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் அவசியம் எழுதுங்கள். அப்போதுதான் நீங்களும் ஒரு இலக்கியவாதியாக இனங்கண்டு கொள்ளப் படுவீர்கள்.

**தமிழ்நெஞ்சம் இதழ் பற்றிய உங்கள் கருத்து?**

படைப்பாளிகளை ஊக்குவிக்கும் பாரிய பணியினை தமிழ் நெஞ்சம் நெடுங்காலமாக செய்து வருகிறது. காத்திரமான படைப் புகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது சிறப்பம்சம். அதன் ஆசிரியர் இதனை ஒரு வேள்வியாகவே செய்து வருகிறார். தமிழ்நெஞ்சம் என்றதுமே அமின் என்ற பெயர் நினைவிற்கு வருவது தவிர்க்க முடியாததாகிறது. சர்வதேச ரீதியில் பெயர்பெற்ற சஞ்சிகைகளில் தமிழ் நெஞ் சமும் காணப்படுவது பாராட்டப்பட வேண்டிய விடயம். எமது அமைப்பின் Book Bank நிகழ்ச்சியில் பலதடவைகள் இவ்விதழை பதிவிட்டிருக்கிறோம். எமது அங்கத்தவர்கள் பலரது ஆக்கங்கள் இதில் பிரசுரமாகியுள்ளன. எம்மவருக்கு களம் கொடுப்பதற்காகவும் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன். எனக்கு இவ்வாய்ப்பினைத் தந்தமைக்கு தமிழ் நெஞ்சம் ஆசிரியர் அமின் அவர்களுக்கும் வஃபீரா வஃபி அவர்களுக்கும் நன்றியை தெரிவிக்கிறேன்.

**இந்த நேர்காணலில் மிக நேர்த்தியாகவும், சிறப்பாகவும் உங்கள் கருத்துக்களை முன்வைத்துள்ளீர்கள். உங்கள் இலக்கிய பயணத்தில் வாகை சூடி இளம் தலைமுறைக்கும் வழிகாட்ட, தமிழ்நெஞ்சம் சார்பாக நாமும் வாழ்த்துகிறோம்.**

**நேர்காணல் : வஃபீரா வஃபி**

மண்மீது வாழ்கின்றார் தன்ன லத்தார்
வான்கொள்ளி அவர்தலை மேலே வீழ்க?
பெண்ணுரிமை இல்லையெனில் நமது மக்கள்
பேசுகின்ற விடுதலைக்கென் மதிப்போ சொல்வீர்

- கவிஞரேறு வாணிதாசன்

# உன்னோடு வாழாத வாழ்வென்ன வாழ்வு?

உன்னோடு வாழாத வாழ்வென்ன வாழ்வு?
உவப்பேது உள்ளத்தே உலவுதே உயிர்க்கூடு!
கண்ணோடு உறவாகக் கருத்தினிலே நிறைவோடு
கவலையிலா பெருவாழ்வு கண்மணியே யாரோடு?

என்றென்றும் மாறிடாத என்னிதயக் காதலோடு
மன்றமாய் நெஞ்சிலே மணமானேன் உன்னோடு!
என்றுன்னைக் கண்டேனோ அன்றே வென்றாய்!
அன்றுன்னில் கண்டேனே ஆருயிரே நன்றாய்!

கண்மணியே கரைகிறதே காணாமல் உயிர்ப்போடு!
கண்ணிருந்தும் ஒளியிலா காட்சிக்கு உயிர்ப்பேது?
பெண்ணுனைப் பாராவிடில் பிறவிக்கா நற்பேறு?
மண்ணெனைத் தீர்க்குமுன் மீட்டெடு உயிர்ப்போடு!

கவிஞர் மாலதி இராமலிங்கம்,
புதுச்சேரி.






# எனக்கொரு பயம்!

தனித்து விடப்பட்ட இரவின் கருமைகள்
நாலா பக்கங்களிலும் சூழ்ந்து கொண்டு
என்னை காயப்படுத்துகின்றன
இப்போதெல்லாம் என் வீட்டில்
செல்லமாக வளர்க்கப்படும்
கருப்பு நிற பூனையை காணும் போதும்
இருளென மனம் நினைத்து
பயம் கொள்கிறது,

சில நேரங்களில் இருளின் கருமை
மனதையும் பீடித்து
கருமையான மனோபாவனைகளை
வெளிப்படுத்த நினைக்கிறது
அதனாலே இப்போதெல்லாம்
இரவை எனக்கு அவ்வளவு பிடிப்பதில்லை
இரவிடமிருந்து எங்கோ தூரமாக
தப்பியோடவே நினைக்கிறேன்,
சில இரவுகள் என் மீது
அதன் வன்மத்தை கொட்டித் தீர்க்க
செய்வதறியாது என்
போர்வைக்குள் ஒளிந்து கொண்டு
கண்களை இறுகப்பொத்தி
கண் ஓரம் வழியாக
என் அறையை அவதானிக்கிறேன்
அப்போது அந்த இருள் அதன் பிடியிலிருந்து
என்னை இதுவரை விடுவிக்கவில்லை,

அப்போதெல்லாம் இருளையும்
தனிமையையும் மிக அதிகமாக நேசித்து
இரவின் மடியில் எண்ணற்ற கதைகள் பேசி
வெளி உலகை நேர காலம் அறியாத அளவு
உலா வந்து சுற்றித்திரிந்து துடைத்து
எறிந்த எனக்கு இப்போதெல்லாம்
இருளின் கருமை
கொடுக்கின்ற பரிசு இதுதான்,

சீறிப் பாயும் பூனை போல
கருமை நிறைந்த இரவு
என்னோடு சில நேரங்களில்
நடந்து கொள்கிறது
அந்த நேரத்தில் இன்னும் அதிகமாக
இரவிடமிருந்து எப்படியாவது
தப்பித்துக் கொள்ள வேண்டும் என்று
அம்மாவை என் இரு கரங்களாலும்
மிக வேகமாக பற்றிக் கொள்கிறேன்,

இப்போதெல்லாம் பகலின் இருளும்
எனக்கொரு இனம் புரியாத
பயத்தையும் தருகிறது
துணைக்கு யாராவது வர மாட்டார்களா
என்று ஏங்கிக் கொள்ளும் நான்
பகலின் இருளில் தப்பிப்பதா
இரவின் கருமையில் இருந்து என்னை
தற்காத்துக் கொள்வதா
என தடுமாறுகிறேன்.

**இவன் கவிப்பொய்கை**

# வெளிச்சம்



ஒளியால் வாழ்க்கை ஒளிரும்
ஒன்றாய் இன்பம் சேர்ந்திடுமே
அளிக்கும் பலவாய்ப் பயனும்
அகமும் சேர்ந்தே மகிழ்ந்திடுமே
நளினம் தருமே வரவால்
நன்றாய் மிளிர்ந்து வாழ்த்திடுமே
ஒளிரும் மக்கள் மனமும்
ஒன்றாய்க் கூடி மகிழ்வாரே.

இருளைக் கிழிக்கும் வெளிச்சம்
இன்பம்  அங்கே வரவாகும்
பொருளும் இல்லா மனிதன்
பொங்கிப் பெருக வழிதருமே
கருணை மழையைப் பெய்து
கடைக்கண் காட்டி ஒளிதரவே
அருமை பலவும் கிட்டும்
அகிலம் உய்க்க வழிதருமே.

உலகம் எங்கும் வெளிச்சம்
உதய மாகும் விடியலினால்
நலமும் வந்தே சேரும்
நன்றாய் வாழ்வும் செழித்திடுமே
புலன்கள் கூடும் மகிழ்வில்
புன்ன கையதும் உதிர்ந்திடுமே
துலங்கும் யாவும் விளங்கும்
துரித மாகச் சிறந்திடுமே.

**பாவலர்மணி வா.சண்முகம்**
கும்பகோணம்.



# காற்றாய் வருவேன்

டேய் ராம் எங்கடா இருக்க... எத்தன தடவ போன் பண்றது.. பிக் பண்ண மாட்டியா..

சாரீடா டிராபிக் ல மாட்டிகிட்டேன், என்ன னு சொல்லு..

அடையாறு ஆலமரம் பக்கத்து தெருல 15 நம்பர் வீடு காலி னு போர்டு பாத்துட்டு ஹவுஸ் ஓனருக்கு போன் பண்ணேன் அவர் கேட்ட அட்வான்ஸ் க்கு ஒகே பண்ணிட்டேன் முதல்ல பழைய சிடு மூஞ்சி ஓனர் கிட்ட அட்வான்ஸ் திரும்ப வாங்கி, இங்க கொடுத்துட்டு, ஒண்ணாம் தேதி யே இங்க வந்துடுவோம்,...

டேய் அவசர படாத, வீடு நல்லா இருக்கா, பக்கத்துல நாலு பிகர்ங்க இருக்கானு பாருடா

போடா.... உன்னை எல்லாம் திருத்தவே முடியாது...

சேகர் பிடிவாததால், ராம், சேகர், சிம்பு, மணி நான்கு பேரும் அந்த 15 நம்பர் வீட்டுக்கு குடி பெயர்ந்தனர்

நால்வரும் வேறு, வேறு பணியில் இருந்தாலும் ஒரே கல்லூரி, அருகருகே சொந்த ஊர்

புது வீட்டுக்கு வந்து ரெண்டு நாட்கள் ஆச்சு. சுற்றிலும் வீடுகள் இல்லை, அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறிய, பெரிய வீடுகள். ஆள் நடமாட்டம் கம்மியாக இருந்தது

ராம் ஐ டி கம்பெனி... இரவு வேலையும் மாறி, மாறி வரும் அன்று இரவு ராம் ஆபிஸ் போய் விட மற்ற மூவரும் தூங்க, நள்ளிரவில் ஏதோ ஜல், ஜல் சத்தம்





**விஜி ஆர் கிருஷ்ணன்**

இடை விடாமல் கேட்க சேகர் மற்ற இருவரையும் எழுப்பி பயத்துடன்

அங்க என்னடா சத்தம்

எனக்கு கேக்கல, தூங்க விட்றா என்ற சிம்பு வின் காதுகளில் ஜல் ஜல் சத்தம்

ஒருவர் கையை ஒருவர் பிடித்து கொண்டு அடுப்படி, ஹால், வராண்டா, என்று லைட் போட்டு பார்த்தும் ஏதும் கண்ணுக்கு தெரியவில்லை...

மறுபடியும் உள்ளே வந்து படுக்கவும் மீண்டும் அதே சத்தம், டேய் பேய், பிசாசு குடியிருக்க வீட்ல போய் நம்ம இருக்கோம் போல

ஏண்டா, அப்பவே ராம் சொன்னான் ல அவசர படாத னு..

எவண்டா இவன் பேய், பிசாச நேர்ல பாத்த மாதிரி பேசிட்டு இருக்கான் னு சொல்லி முடிக்க, கண்ணாடி ஜன்னல் வழியா தலைவிரி கோலமா ஒரு பெண் உருவம் ஜல், ஜல் னு கடந்து போக, அந்த நிழல் உருவத்தை பார்த்து மூன்று பேரும் பயந்து நடுங்க

காற்றாய் வருவேன்... ன்னு ஒரு Book ல கூட இதே மாதிரி...

வாய மூடுடா, ஏற்கனவே பயமா இருக்கு,

கதை, கத்தரிக்கா ன்னு...டேய் வாங்கடா ஓடிடுவோம்.... மூச்சிரைக்க வெளி கேட்டுக்கு வந்து.. சத்தம் வந்த திசையை திரும்பி பார்க்கும் போது வானில் ஒரு தீப்பிழம்பு எரிந்து அடங்கியது.

மூச்சு விடக்கூட பயந்து ராம் க்கு போன் பண்ணி சொல்லிட்டு போயிடுவோம், ரெண்டு மணிக்கு வந்து நம்மள தேடுவான் ராம் நம்பர் க்கு டயல் செய்தால் ரிங் வீட்டின் உள்ளே இருந்து வர, என்னடா போன வச்சிட்டு போய்ட்டானா.. வா உள்ள போய் பாப்போம்

உள்ளே மூவருக்கும் ஒரு அதிர்ச்சி காத்திருந்தது

டேய் நீ எப்போ, எப்படி உள்ள வந்த

ஓ என்ன விட்டுட்டு பக்கத்துல இருக்க மாரியம்மன் கோயில் திருவிழா பாக்க போனீங்க ளாடா...

உன்ன கொல்ல போறோம் பாரு நாங்களே பேய் க்கு பயந்து ஓடிட்டு இருக்கோம்

பேயா, இங்கயா

ஆமாண்டா, நடந்ததை மூவரும் சொல்ல

ராம் விழுந்து, விழுந்து சிரித்தான்

டேய், அது பேய் இல்ல, என் காதலி ரோகிணி... (Cab) கேப் வந்து இறக்கி விட்டுட்டு, பக்கத்துல குமார் அ ட்ராப் பண்ணிட்டு திரும்ப போகும் போது பிக் அப் பண்றேன்னு சொல்லவும், சரி உங்கள எழுப்பி தொந்தரவு தர வேணாமே னு மொட்டை மாடில ஜாலியா பேசிட்டு இருந்தோம், (Cab) கேப் வரவும் அவளை அனுப்பிட்டு உள்ள வந்து பாத் ரூம் போயிட்டு வந்தா எல்லாரும் வெளிய இருந்து வரீங்க

செம காமெடி டா னு சிரிக்க மற்ற மூன்று பேரும் ராம் முதுகில் மொத்த..

மீண்டும் ஜல், ஜல்... ஒலி

முற்றும்

# வள்ளுவரின் இன்பத்துப்பாலும்

## தன்முனை

## இயைபுக்கவிதைகளும்



**(1)**

**அதிகாரம்** : *தகையணங்கு உறுத்தல்*

நோக்கினாள் நோக்கெதிர்
நோக்குதல் தாக்கணங்கு,
தானைக்கொண் டன்ன
துடைத்து

- ( குறள் 1082 )

**பொருள்:** *நான் பார்த்ததற்கு எதிராகப் பார்வை பார்த்தவளின் அன்புப் பார்வை, ஆயிரம் படைகளுடன் வரும் அணங்கு போன்றே தோன்றியது.*

**தன்முனை இயைபுக் கவிதை.**

பார்த்தவளைப் பார்த்தேன்,
பாவையும் நோக்கினாள்
பல்லாயிரம் படை கொண்டு,
பார்வையால் தாக்கினாள்

**(2)**

**அதிகாரம் :** *குறிப்பறிதல்*

இருநோக்கு இவளுண்கண்
உள்ளது ஒரு நோக்கு
நோய்நோக்கொன் (று) அந்நோய்
மருந்து

- (குறள் 1091 )

**பொருள்:** *இவள், இருவகைப் பார்வை பார்க்கிறாள்.ஒரு முறை கண்களால் காண்கிறாள். நான் தவிக்கிறேன்., மறு முறை என்னைப் பார்த்து என்னை வாழ வைக்கிறாள்.*

**தன்முனை இயைபுக்கவிதை**

கன்னியின் விழிகள்,
கூர்முனைக் கழிகள்
குத்திக் கிழித்தபின்
மருந்திடும் குப்பிகள்

**(3)**

**அதிகாரம் :** *குறிப்பறிதல்*

யான்நோக்கும் காலைநிலன்
நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல
நகும்

- ( குறள் 1094 )

**பொருள் :** *நான், என் காதலியைப் பார்க்கும் போது அவள் என்னைப் பார்க்காமல் வெட்கத்தால் நிலத்தைப் பார்க்கிறாள். நான் பார்க்காத போது என்னைப் பார்த்து தனக்குள் மெல்ல நகைத்துக் கொள்கிறாள்.*

**தன்முனை இயைபுக் கவிதை**

நேராய்ப் பார்த்தேன்,
நிழலைப் பார்த்தாள்
வானம் பார்த்தேன்,
நேராய்ப் பூத்தாள்

................................................................

**(4)**

**அதிகாரம் :** *குறிப்பறிதல்*

கண்ணொடு கண்ணினை
நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும்
இல

- (குறள் எண் 1100)

**பொருள்:** *அன்பு கொண்டவர் மனம் கண்களால் கலந்து விட்டால், பிறடைய சொற்கள் அங்கு பயனற்றுப் போகும்.*

**தன்முனை இயைபுக் கவிதை**

வேலின்றி தாக்கும் மோதல்,
விழியால் தாக்கும் காதல்
சொற்கள் கலவாப் போதில்,
சொல்லியும் விழாது காதில்

................................................................

**(5)**

**அதிகாரம் :** *புணர்ச்சி மகிழ்தல்*

கண்டுகேட்டு உண்டுயிர்த்து
உற்றறியும் ஐம்புலனும்,
ஒண்டொடி கண்ணே
உள..

- ( குறள் 1101 )

**பொருள்:** *என் ஐம்பொறிகளையும் மகிழ்க்கும் ஐம்புலன் தரும் உணர்வை, அழகிய ஒளி வீசும் வளையல் அணிந்த என் அன்பிற்கினியாள் பெற்றிருக்கிறாள்.*

**தன்முனை இயைபுக்கவிதை.**

இன்பம் தரும் வாயில்கள்
பெண் மகளே கொண்டாள்
ஐம்பொறிகள் தனைமயக்கும்
செப்படி வித்தை கண்டாள்

**திருமதி. இரா. இராஜாமணி**

*ஈரோடு.*

# தமிழ்ப்பணியுடன் சமூகப் பணியாற்றும்

# சண்டிகர் தமிழ்ச்சங்கம்




சண்டிகர் ஒரு அழகான வடிவமைக்கப் பட்ட நகரம். இது பஞ்சாப், அரியானா என்ற இரண்டு மாநிலங்களுக்கு மட்டுமல்லாது சண்டிகர் என்ற ஒன்றியப் பிரதேசத்திற்கும் தலைநகராக விளங்கிவருகிறது. இந்நகருக்குச் சென்று ஒரு பட்டிமன்றத்தில் பேசுவதற்கான வாய்ப்பு கிடைத்தது. அந்தப் பயணத்தைப் பற்றிய கட்டுரைதான் இது.

மூன்று மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் மதுரையில் வசிக்கும் கவி வித்தகர் திரு பொற்கைப் பாண்டியன் அவர்களிடமிருந்து ஒரு அலைபேசி அழைப்பு. அக்டோபர் திங்கள் நாம் இந்தியா சென்று வருவோம். கவியரங்கம் பட்டிமன்றம் என்று நிகழ்ச்சிகளை நடத்தி விட்டு வருவோம் என்றார். நானும் சரியென்று ஒப்புதல் தெரிவித்துவிட்டேன். சண்டிகர் தமிழ்ச்சங்கத்தில் பட்டிமன்றம் கவியரங்கம் நூல்வெளியீடு என நிகழ்வுகள் வடிவமைக்கப்பட்டன. தொடர்வண்டியில் பயண முன்பதிவு செய்யப் பட்டது. மதுரையிலிருந்து எழு வரும் குடந்தையிலிருந்து அறுவரும் என பதின்மூவர் செல்வதாகத் திட்டமிட்டோம்.

விஜயதசமி அன்று இரவு சென்னை புரட்சித்தலைவர் எம்.ஜி.இராமச்சந்திரன் மத்திய தொடர்வண்டி நிலையத்திலிருந்து தமிழ்நாடு விரைவுவண்டியில் பயணம்



தொடங்கியது. முதல்நாள் சென்னையில் ஏற்பட்ட இரயில் விபத்து காரணமாக வழக்கமான பாதையைவிட்டு அரக்கோணம் ரேணிகுண்டா வழியாக எங்கள் பயணம் தொடங்கியது.

மதுரையிலிருந்து திருவாளர்கள் பொற்கைப்பாண்டியன் சித்தார்த் பாண்டியன், ஈசுவரராஜா, முத்து முருகன், இவர்களுடன் மாலா, வனிதா ஆகியோர் வர, ஏற்கனவே சென்னை வந்திருந்த முத்துவிஜயன் இளையதீபன் ஆகியோருடன் செல்லதுரை, மோகன், ஆராவமுதன், மதிவாணன் மற்றும் நான் இணைந்து கொள்ள எங்கள் வடஇந்தியப் பயணம் தொடங்கியது. இரண்டு இரவுகள் ஒரு பகல் பயணம் முடிந்தால்தான் டில்லி செல்ல முடியும் என்பதால் இடையில் ஆக்ராவில் இறங்கத் திட்டமிட்டோம். ஆக்ராவுக்கு இரவு 3.00 மணிக்கு செல்லவேண்டிய வண்டி காலை 10.00 மணிக்குச் சென்றது. நடப்பதெல்லாம் நண்மைக்கே என்று எண்ணியவாறே தாஜ் மகாலைக் கண்டுகளித்து அங்கே ஒரு கவியரங்கத்தையும் நடத்திவிட்டு புதுடெல்லி நோக்கிப் பயணித்தோம். புதுடெல்லியில் ஒரு இரவு தங்கிவிட்டு மறுநாள் மதியம் ஒரு விநாயகர் கோயிலைப் பார்த்துவிட்டுஅங்கே ஒரு கவியரங்கம் நிகழ்த்திவிட்டு சண்டிகர் நோக்கிப் புறப்பட்டோம்.



இரவு சண்டிகர் தொடர்வண்டி நிலையத்தில் இறங்கும்போதே சண்டிகர் தமிழ்ச்சங்கத்திலிருந்து வரவேற்க மூன்று மகிழுந்துகள் வந்திருந்தன. தமிழ்ச்சங்கச் செயலர் திரு இராஜசேகரன் மற்றும் சிலர் வரவேற்று அழைத்துச் சென்றனர். மாலை அணிவித்துப் பூங்கொத்துகள் கொடுத்து குளிர்பதன அறையில் தங்கவைத்தனர் ஒரு சிறிய கலந்துரையாடலுக்குப் பிறகு இரவு உணவை முடித்துவிட்டு அறையில் ஓய்வெடுத்தோம்.

சங்கத்தில் தரைத்தளத்தில் அனைத்து வசதிகளும் கொண்ட ஒரு அரங்கம், கீழ்த் தளத்தில் உணவு அருந்தும் அரங்கம், முதல் தளத்தில் சிறிய நூலகம் மற்றும் தங்கும் அறைகள் அமைந்துள்ளன. ஒரு உணவு

விடுதியும் ஒரு இயன்முறை மருத்துவ அறையும் முகப்பில் செயல்படுகின்றன. ஒரு தமிழன்னைச்சிலை சங்கத்தின் வலதுபுறத்தில் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. நுழை வுவாயிலில் திரு விஜிபி சந்தோசம் அவர்கள் வழங்கிய ஒரு திருவள்ளுவர் சிலை நம்மை அன்புடன் வரவேற்கிறது.

ஐம்பது ஆண்டு சண்டிகர் தமிழ்ச்சங்க வரலாற்றில் முதல் பட்டிமன்றம். கம்ப ராமாயணத்தைக் கையிலெடுத்துக் கொண்டு அமைக்கப்பட்ட பட்டிமன்றம். சண்டிகர் தமிழ்ச்சங்கம் அங்கே ஒரு தமிழ்ச்சங்கமாக மட்டுமல்லாமல் ஒரு சமூக சேவை மையமாகச் செயல்படுவது பாராட்டுக்குரியது. ஏழ்மைநிலையில் உள்ள மக்களின் குழந்தைகள் கல்வி கற்பதற்காக அவர்களுக்குத் தேவையான புத்தகங்கள் எழுதுபொருட்கள் ஆடைகள் புத்தகப்பைகள் மிதிவண்டிகள் போன்றவற்றை வழங்கு வதோடு அன்னதானம் போன்ற நிகழ்வுகளையும் முன்னெடுத்துச் செல்கிறது. தமிழை வளர்த்தெடுப்பது, தமிழைக்காப்பது மட்டும் தமிழ்ச்சங்கம் என்ற கருத்தை மாற்றி, அனைவருக்கும் சேவைசெய்யும் அமைப்பாகச் செயல்படுவது இச்சங்கத்தின் முதன்மைச் செயல்பாடாக உள்ளது.

மறுநாள் காலை சண்டிகர் முருகன் கோயில் அழைத்துச் செல்லப்பட்டோம். முருகன் கோயில் உருவான விதம் கட்டிய முறை குடமுழுக்கு நடந்தவிவரங்கள் ஆகியவற்றை திரு இராஜசேகரன் அவர்கள் விவரிக்கக் கேட்டு மெய்மறந்து போனோம். தமிழ்ப்பாடல்களாலேயே முருகன் வணங் கப்படுவதும் சமற்கிருத அர்ச்சனை நடக்காததும் கண்டு வியந்துபோனோம். அதன்பின் காலை உணவு கார்த்திகேயா உணவுவிடுதியில் வழங்கப்பட்டது. அவ் வுணவு விடுதி உரிமையாளர் ஒரு தமிழர். தென்தமிழ்நாட்டைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழர். இருநூறு தமிழர்களுக்கு வேலை தருபவர். கொரானா காலத்தில் ஒரு வருடம் சண்டிகரில் உள்ள தூய்மைப் பணியாளர்களுக்கு இலவசமாக உணவளித்தவர். அவரது அன்பில் நெகிழ்ந்து போனோம்.

அதன்பின்னர் சண்டிகரில் உள்ள ராக் கார்டன் என்ற இடத்திற்குச் சென்றோம். தேவையில்லாத பொருட்களை வைத்து அமைக்கப்பட்ட பூங்கா அது. கற்கள் பானைகள் உடைந்த கிரானைட் கற்கள் துணிகளைக் கொண்டு ஒரு இரண்டு மணிநேரம் சுற்றிப் பார்க்கும் அளவுக்கு வடிவமைக்கப்பட்ட பூங்கா. பொழுது கழிந்ததே தெரியவில்லை.



மதிய உணவுக்குப் பிறகு அறையில் கொஞ்சம் ஓய்வுக்குப் பிறகு மாலை கவியரங்கம் மற்றும் பட்டிமன்ற நிகழ்வு .

மாலை 6.30 மணிக்கு, சங்கத்தலைவர் திரு மாதவன் ஐஏஎஸ், செயலர் அவர்களுடன் மருத்துவர் பொற்கையார் முத்து விஜயன் ராஜா ஆகியோ ருடன் நானும் குத்து விளக்கு ஏற்றி நிகழ்வைத் தொடங்கினோம்.

திரு பொற்கைப் பாண்டியன் அவர்கள் தலைமையில், கம்ப ராமாயணப் பாத்திரங்களின்



தலைப்பில் கவிஞர்கள் முத்துவிஜயன், வனிதா, சோ.மோகன், கு செல்லத்துரை, ஆராவமுதன், இளையதீபன் ஆகியோர் கவிதை வாசித்தனர்

சீதை, கும்பகர்ணன், குகன் உள்ளிட்ட ஆறு தலைப்புகளில் கவிதைகள் வாசிக்க, இளையதீபன், முத்துமுருகன் உள்ளிட்ட கவிஞர்களின் நூல்கள் விழாவில் வெளியிடப் பட்டன.

பின்னர் கம்பராமாயணம் சிறந்து விளங்கக் காரணம் அதன் கருத்துச்செறிவா, கற்பனை வளமா என்ற தலைப்பில் பட்டி மன்றம் நடைபெற்றது. கருத்துச் செறிவே என்ற அணியில் நான், புலவர் மதிவாணன் கவிஞர் சித்தார்த் பாண்டியன் ஆகியோர் பேச, கற்பனை வளமே என்ற தலைப்பில் கவிஞர் முத்துமுருகன், கவிஞர் மாலா கவிஞர் ஈசுவரராசா ஆகியோர் பேசினர். கருத்துவளமே மேலோங்கி இருப்பதாக, திரு பொற்கையார் தீர்ப்பு நல்கினார். இரவு உணவுக்குப் பிறகு அங்கிருந்து எங்கள் குழுவானது புறப்பட்டு சண்டிகர் தொடர்வண்டி நிலையத்திற்கு வந்தது.

பொங்கல் தமிழ்ப்புத்தாண்டு மட்டு மல்லாது இதுபோன்ற நிகழ்வுகளைத் தொடர்ந்து நடத்திவரும் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக அரசு அதிகாரிகள் மருத் துவர்கள் பொறியாளர்கள் என மெத்தப் படித்தவர்கள் இருந்தாலும் கொஞ்சமும் கர்வம் இல்லாது செயல் படுவதைக் கண்டு மனம் நெகிழ்ந்தது. ஒரு மொழி தெரியாத இடத்திற்குச் சென்றோம் என்பதை சிறி தும் தெரியாமல் எங்களைக் கவனித்துக் கொண்ட திரு இராஜசேகர் உள்ளிட்ட சண் டிகர் தமிழ்ச்சங்க நிர்வாகிகளுக்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு நாங்கள் புறப்பட்டோம்.

விருந்தோம்பல், ஈகை, இறையச்சம், சான்றோரைப் போற்றுதல், பணிவு என் பது தமிழர்களின் தலையாய பண்பாடு இப்பண்பாட்டை மிகச்சிறப்பாகப் பின் பற்றி வரும் சண்டிகர் தமிழ்ச்சங்கத்திற்கு தமிழ்நாடு அரசு ஐம்பது லட்சம் நிதி உதவி அளித்திருப்பது சாலச் சிறந்தது. மென் மேலும் சண்டிகர் தமிழ்ச்சங்கம் சிறந்து விளங்க எங்கள் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**இராம வேல்முருகன்**

# நீதானே என் பொன்வசந்தம்



நித்தமும் மலர்கிறாய்
காதலைச் சொல்கிறாய்
பித்தமும் போனது
சித்தமும் தெளிவானது

அன்னத்தின் வடிவே
கன்னத்தில் அழகே
காந்தவர்ப் பார்வையால்
ஈர்த்திட்டக் காரிகையே
இதயத்தில் தூரிகையால்
வரைந்திட்டேன் ஓவியமே

செந்தமிழ்ச் சொல்லெடுத்துப்
படைத்திட்டேன் காவியமே
கார்குழல் தேவதையே
காமனம்பு எய்தவளே
மையலானேன் உன்னிடம்
மாற்றமது என்னிடம்

விழிகளின் வீச்சிலே
சரணடைந்தேன் உன்னையே
நீயில்லாத நேரமெல்லாம்
நெருப்பாற்றில் தகிக்கிறேனே

பனித்துளியாய் வந்துவிடு
உள்ளத்திலே உறைந்திடு
காலமெல்லாம் நீதானே
என் பொன்வசந்தம்

**பெ.வெங்கட லட்சுமி காந்தன்.**
விருதுநகர்



# தாய்த் தமிழே!

மொழியைப் பெற்றதும் தமிழே உலகினில் உண்மை உணர்ந்திடு;
மொழியால் உணர்வுகள் நிறைந்திடும்!
மொழியும் பேச்சினில் வாழ்க்கை உயர்ந்திடக் கூடும் அறிந்திடு;
மொழியில் சிறந்திடும் செம்மொழி!
வழியும் தந்திட அரணாய்க் காத்திட மண்ணில் உயர்ந்திடும்;
வலிமை மிகுந்திடும் செந்தமிழ்!
அழியா மொழியெனப் பாரும் போற்றிடக் காலம் வென்றிடும்
அன்பை ஊட்டிடும் தாய்த்தமிழ்!

# உழைப்பே உயர்வு



உழைத்து வாழ்ந்திட வாழ்க்கை உயர்ந்திடும் அறத்தின் வழியினில்
உன்றன் வாழ்வினை உயர்த்திடு!
பிழைத்து வாழ்வினை வாழ்தல் உலகினை உயர்த்தும் அறிந்திடு;
பிழைக்க இன்னலும் நீங்கிடும்!
தழைத்து எழுந்திடச் செடியும் உயர்ந்திடும் மரத்தைக் காண்க;
தன்னை உயர்த்திட வாழ்ந்திடும்!
மழையும் பொழிந்திடப் புவியும் போற்றிடும் வானம் உயர்விடம்;
மழையாய் வாழ்வினில் சிறந்திடு!

**வாழ்வியல் கவி சா.நாகூர் பிச்சை**
துபாய்



# விதைத்ததே விளையும்

பிறர் செல்லும்
பாதைகளிலெல்லாம் நீ
முட்கள் பரப்பியே
மகிழ்ந்திருக்கிறாய்

பிறர் இறகுகளையும்
சிறகுகளையும்
ஒட்ட நறுக்கவே
முயன்றிருக்கிறாய்

அவர்கள் மண்ணில்
முளைத்துவிடக் கூடாதென்று
மிதித்து நசுக்கியிருக்கிறாய்

அவர்கள்
கிளைகள் விட்டு
வளர்ந்த போதெல்லாம்
முறித்தெறிந்திருகிக்கிறாய்

அடுத்தவர்கள்
அவர்களை
தூக்கி எறிவதற்கு
துணை நின்றிருக்கிறாய்

அவர்கள் முகங்களில்
கரி பூசிட
காரணமாகியிருக்கிறாய்

ஆனாலும் அவர்கள்
காலம் பதில் சொல்லுமென்று
கண்டு கொள்ளாமல்
கடந்து போனார்கள்.

பருவ கால மாற்றங்கள்
வாழ்வையும் புரட்டுமென்று
கண்டு கொண்டார்கள்

விதைத்ததே விளையும்
விளங்கிக் கொண்டார்கள்
நின்று கொல்லும் இறை தீர்ப்பை
நினைவில் கொண்டார்கள்

சுவரில் வீசிய பந்தாய்
அனைத்தும் உன்னிடம்
திரும்பி இருக்கிறது

ஆனாலும்
ஆனந்தம் கொள்ளவில்லை
அவர்கள்

இனியாவது நீ
படிப்பினை பெறு
மாற்றங்களை மனதில் காண்

நல்லதை நினை
பொல்லாப்பைத் தவிர்
உன்னைச் சுற்றி நந்தவனமாக்கு

மலர்களால் மணம் பரப்பு
உன் சூழல்
உள்ளும் புறமும் சுகந்தம்
பெறட்டும் என்று தானே
காத்துக் கிடக்கிறார்கள்

**ஹாஜறா கலீலுர் ரஹ்மான்.**
காத்தான்குடி.

# வெட்டுவதோ எண்ணிப் பார்ப்பீர்

தரும்செல்வம் எனக்கழுதை படத்தை வாசல்
தனில்மாட்டிக் கைகூப்பி வணங்கும் நாமோ
அரும்வாழ்வாய் வாழ்வதற்குத் தூய காற்றை
அளிக்கின்ற மரங்களினை வெட்டு கின்றோம் !
உருவாகும் உடல்நோயைத் தீர்த்துக் காக்கும்
உயர்இறையாய் மருத்துவரைப் போற்றும் நாமோ
கருவினிலே வளர்கின்ற சிசுவைக் கூடக்
காக்கவளி தரும்மரத்தை வெட்டு கின்றோம் !

அருள்வேண்டிக் கோயிலுக்குள் பணத்தாள் கற்றை
ஆளுயர உண்டியலுள் போடும் நாமோ
அருளாகக் கேட்காமல் தூய காற்றை
அளிக்கின்ற மரங்களினை வெட்டு கின்றோம் !
கருணையுடன் கையேந்தும் பிச்சைக் காரர்
கண்ணீரைத் துடைக்கக்கை நீட்டும் நாமோ
அருட்கொடையாய் உயிர்வளியை மாச கற்றி
அளிக்கின்ற மரங்களினை வெட்டு கின்றோம் !

கட்டுகின்ற வீட்டிற்குச் சன்னல் வைத்துக்
காற்றுவர வசதிகளைச் செய்யும் நாமோ
நட்டுமரம் நீரூற்றி வளர்த்தி டாமல்
நஞ்சகற்றும் மரங்களினை வெட்டு கின்றோம் !
பட்டிதொட்டி எல்லாமே தோப்பு தோப்பாய்ப்
பசும்மரங்கள் இருந்தபோது நோய்க ளில்லை
வெட்டியின்று வீடுசாலை அமைத்த தாலே
வேகின்றோம் வெப்பத்தில் எண்ணிப் பார்ப்பீர் !





பாவலர் கருமலைத்தமிழாழன்

# கால் கொலுசு ஓசையிலே



குதூகலம் பிறக்குது
என்னவளே எனதானவளே
வசந்தமும் வந்தது
வாழ்வில் இணைந்ததே

குறுநகை புரிந்தே
உள்ளத்தில் உறவானவளே
களிப்பானேன் உனது
காதலால் அன்பே

என்னுள் நிறைந்தே
ஏகாந்தம் போக்கினாயே
பனித்துளியாய் உருகியே
இதயத்தை குளிர்வித்தாயே

விழிகளின் சந்திப்பில்
ஆனந்தம் கொண்டேனே
கன்னக் கதுப்பில்
முத்திரை பதித்திடவா

இதழமுதம் பருகிட
முகம் சிவந்திடுவாயே
உனது கால்
கொலுசு ஓசையிலே

**பெ.வெங்கட லட்சுமி காந்தன்.**
விருதுநகர்

# தேடலின் விடியல்.

அவள் முகத்தில் ஓர் உறுதி
அதே முகத்தில் ஒரு மகிழ்ச்சி
அவள் கருணையின் பிறப்பிடம்
அதீத வலிகள்மீது சவாரி செய்கிறாள்.

ஒவ்வொரு மூச்சிலும்
ஒவ்வொரு அழுகையிலும்
ஓர் உலகம் புதிதாய்ப் பிறக்கிறது
ஓர் அதிசயமும் இயல்பாய் நிகழ்கிறது
ஒரு மரணத்தை மீறிய இசைவாக.

ஒரு மெல்லிய அழுகைச் சத்தம்
ஒரு குழந்தை பிறந்த சாட்சியாக
எல்லை அற்ற தூய்மையான காதல்
ஒரு கணம் அமைதியாக வெளிப்படுகிறது.

சின்ன விரல்கள்
மென்மைமையின் வடிவம்
தாயின் கண்ணீர் தந்தையின் புன்னகை
குழந்தையின் இதயத் துடிப்பு
இப்போது இலேசாகக் கேட்கிறது.

**- எஸ். ஏ. கப்பார்.**

# சாகாவரம் பெற்றவர்கள்!

.

பைந்தமிழில் குறளெழுதி
பாருக்கு எடுத்துரைத்த
ஐயனான வள்ளுவரும்
ஆசானாம் இளங்கோவும் ,

விருத்தத்தில் பாட்டுகளை
விவரித்தப் பெருங்கவிஞர்
திருத்தமுற ராமாயணம்
திகைப்பூட்டும் கம்பருமே !

பாட்டுக்கொரு புலவனென்று
பாவலரும் போற்றுகின்ற
சீட்டுக்கவி தந்தவராம்
சீர்திருத்த பாரதியார் ,

பகுத்தறிவுப் பாதையிலே
பண்பாட்டுக் கவிபடைத்த
தக்கநல்ல கவிஞரான
தன்மானப் பாவேந்தர் ,

வாடுகின்ற பயிர்பார்த்து
வாடியநல் அருளாளர்
தேடியநல் கருத்துகளால்
தெய்வமான வள்ளலாரும் ,

எண்ணமதில் ஊற்றெடுக்கும்
எழிலானக் கருத்துகளை
வண்ணமுற வடித்தெடுத்த
வளமார்ந்த கண்ணதாசன் ,

வார்த்தைகளில் விளையாடும்
வாலிபத்தின் பெருங்கவிஞர் ,
கோத்துவிட்ட பாடல்களில்
குவலயத்தை ஈர்த்தவாலி !

இவர்களெல்லாம் என்றென்றும்
சாகாவரம் பெற்றவர்களே !
சமர்புரிந்த சான்றோர்கள்
சாதித்து வென்றோரே !



**கவிஞர்.அ.முத்துசாமி,** தாரமங்கலம்.

## மௌனமே நீ கலையாதிரு

மனதில் சொற்களின் நீட்சி தொடர்ந்துகொண்டேயிருக்கிறது

வெகு தூரம் ஓடிக் கலைத்த இருதயம் போல
எனக்குள்ளே சொற்கள் சுழன்றுக்கொண்டிருக்கிறது

பறந்து திரிந்து அலைந்து மரக்கிளையில் வந்தமர்ந்த ஒரு பறவையின் இரகை போல
சொற்கள் எனக்குள் வந்து விழுகிறது.

இது சொற்களின் தேடல்கள் மௌனமே நீ கலையாதிரு ...!

ச. இராஜ்குமார் திருப்பத்தூர் மாவட்டம்

எழுத்தாக்கம்

## பாத்திமா நளீபா



தொடர் 9

# சிரிப்பால் மறைத்த சோகம்

உண்மையில் இந்த சம்பவத்தை அறிய முன்னர் அனைவரும் ப்ரியமுடன் தான் இருந்தார்கள் ஒன்றாக அன்பாக ஆனால் ஆதரவு வழங்க வேண்டிய இவர்களே மரியமை மிகவும் மோசமாக நடத்தினார்கள்.

ஒன்றும் அறியாத பருவம் பாவம் என்ன செய்வாள் மனதில் ரணங்களுடன் ஒவ்வொரு நாளையும் கடத்தினாள். ஹ்ம்ம் 5ம் தரம் புலமைப் பரிசில் பரீட்சை எழுத இருந்தாள். உண்மையில் தாயின் அத்தனை குணாதிசயங்களும் இவளிடம் காணப்பட்டது. குடும்ப வறுமையைசிறு வயதிலேயே சிறப்பாக கையாண்டாள். தான் தாயின் மகிழ்ச்சிக்காக எதையும் துணிந்து செய்யக்கூடியவள். பேரன்பு கொண்டவள் அல்ஹம்துலில்லாஹ்.

அன்று பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சைக்கான கருத்தரங்கு ஒன்று நடை பெற இருந்தது அனைவரும் அழகான புது ஆடைகளுடன் வருகைத் தந்திருந்தார்கள். மரியமின்கண்கள் அனை வரையும் சுற்றி பார்த்து விட்டு தான் ஆடையைநோக்கி பார்வையை தாழ்த்தி வாய்க்குள் எதையோ தனக்கு தானே ஆறுதல் கூறிக் கொண்டே வகுப்பறை நோக்கி நகர்ந்து செல்லும் வழியில் வகுப்பாசிரியர் அனைவரையும் அழைத்து வட்டமாக நிற்கும் படி கூறினார். ஆசிரியர் கூறியது போல ஆண் மாணவர்கள் பெண் மாணவிகள்என அனைத்து மாணவர்களும் ஆசிரியரைச் சுற்றி நின்றார்கள் மரியம் சல்மாவின் பக்கத்தில் சென்று நின்றாள் சல்மாமரியமைப் பார்த்து

‘நீ என்ன என்கிட்ட வந்து நிக்கிற தள்ளிப்போ எங்கட உம்மா சொல்லிருக்கா உன் கூட சேர வேணாம் என்டுபோ என்று தள்ளி விட மரியம் கீழே விழுந்துகையில் காயம் ஏற்படுகிறது‘



அதைஆசிரியரும் சக மாணவர்களும் கவனித்துக் கொண்டே தான் இருக்கிறார் கள். மரியம் ஆசிரியரிடம் கூறலாம் என்று ஆசிரியரை நோக்கி நகர்ந்து செல்லும் போது

ஆசிரியர் - 'அங்கயே நில்லு பக்கம் வராம அங்க நின்றபடி சொல்லும் என்ன என்று கடிந்து கொள்கிறாள்' டீச்சர் சல்மா என்று கூறும் போது எனக்கு எல்லாம் தெரியும் போய் ஓரமாக நில்லு என்று கூறி மற்ற மாணவர்களை நோக்கி students இன்று கருத்தரங்கு இல்ல அதனால நாங்க படிப்போம் என்று கூறினார். அனைவரும் ஆசிரியருக்கு ஒத்துழைப்பு வழங்கி பாடங்களை அதே இடத்தில் கற்க ஆரம்பித்தார்கள்.

மரியம் தனிமையில் மனதை தளர விடாமல் தனியாக புத்தகத்தை எடுத்து வாசிக்க ஆரம்பித்தாள் சிறிது நேரத்தில் ஆசிரியர் மரியமை அழைத்தார் மகிழ்ச்சியுடன் ஆசிரியரிடம் ஓடிச்சென்று பக்கம் நின்றாள்.

குறிப்பு - ( மரியமின் வகுப்பில் பாத்திமா என்ற ஒரு மாணவி பாத்திமாவின் தந்தை பெயர் பாரிஸ் தாயின் பெயர் ஸைனப் ஆனால் இவர்களின் பெயர் மாத்திரமே வேறாக காணப்பட்டது ஆனால் பாத்திமா சற்று வசதி படைத்தவள்)

மரியமை ஆசிரியர் அனைத்து மாணவர் களுக்கு மத்தியிலும் நிறுத்தி விட்டு பாத்திமா இங்கே வாடா என்று அன்பாக அவளையும் அழைத்து இருவரையும் பக்கத்தில் பக்கத்தில் நிறுத்தி students எல்லாரும் புத்தகங்களை மூடி விட்டு இங்கு அவதானிங்க.

ஆசிரியர் - இந்த பாரிஸ் ஸைனப்பட மகள் பாத்திமாவ பாருங்க, இந்த பாரிஸ் ஸைனப்பட மகள் மரியம பாருங்க

பாத்திமா முடிய பாருங்க
மரியம் முடிய பாருங்க

பாத்திமா dress பாருங்க
மரியம் dress பாருங்க

பாத்திமா காலணி பாருங்க
மரியம் காலணி பாருங்க

என்று கூறி மரியமை பார்த்து கடிந்து கொண்டு நீ எல்லாம் எதுக்கு ஸ்கூல் வார. படிச்சு என்னதான் கிழிக்க போற என்று அவள் மனம் எந்த அளவு காயப் படுத்த முடியுமோ அவ்வளவு அவ்வளவு வார்த்தைகளின் மூலம் அவளை சுக்கு நூறாக உடைத்து விட்டார் அந்த ஆசிரியர். அவள் குனிந்த தலை நிமிராது பாடசாலை விடும் வரை அந்த இடத்திலே நின்றாள்... என்ன பாவம் செய்தாள் ஏழையாக பிறந்தது தவறா? இல்லை நான் பிறந்தது தவறா என்ற எண்ணம் அவளை அலைமோதியது..

பாடசாலை விடப்பட்டது அனைவரும் வகுப்பை விட்டு சென்ற பின்னர் அவள் தன் புத்தகப்பை தூக்கியவாறு சிந்தனையில் ஆழ்ந்து வீடு நோக்கி நகர்ந்தாள்

மரியம் வீடு சென்றதும் என்ன நடக்கும்?

ஆசிரியரின் நிலை என்னவாகும்?

தொடரும்....

தொடர் 10



# சிரிப்பால் மறைத்த சோகம்

ஆழ்ந்த சிந்தனையில் சாலையோரமாக நடந்து செல்கிறாள். உண்மையில் பாடசாலையில் அவளது மனம் கொண்ட ரணங்கள் நிச்சயமாக ஏராளம். அவளது சிந்தனையில் அந்த நிமிடங்களில் தன் தாயின் முகம் வந்து வந்து சென்றது. தன் குடும்ப சூழ்நிலையும் தன் எதிரில் நின்று இப்போது இதை நீ வீட்டில் கூறியாக வேண்டுமா. என்று கேள்விக்கு மேல் கேள்வி கேட்க ஆரம்பித்தது. அவள் மனம் சற்று குழப்பமான நிலையில் இருந்தாலும் இறுதியில் ஒரு முடிவுக்கு வர அமைதியாக வீடு நோக்கி நகர்ந்தாள்.

வீடு செல்லும் போது தன் செல்லத் தங்கை அவளை பார்த்து குதூகலமாக சிரித்து கைகளால் அவளை அழைப்பது அவளை ஏதோ ஒரு விதத்தில் மகிழ வைத்தது ஓடிச்சென்று தங்கையை தூக்கி முத்தமிட்டு விட்டு. வீட்டினுள் நுழைந்து. கண்ணாடி முன் நின்று தன் முகத்தை பார்த்தபடி பாடசாலையில் நடந்த சம்பவத்தை நினைத்துப் பார்த்தாள் விட்டில் அதைக் கூறினால் ஏற்படும் பிரச்சனைகளையும் ஒரு கணம் நினைத்துப் பார்த்தாள். இறுதியாக அதை தன் மனதிற்குள் மறைத்து வைத்திருந்தாள். காயம் யாரது கண்ணிலும் படாமல் பார்த்துக் கொண்டாள்.

வீட்டில் யாரும் இல்லை மரியம் அவளது தங்கை சாரா மாத்திரமே. ஸைனம் காலையில் வேலைக்கு செல்லும் போது சமையல் வேலைகளை முடித்து விட்டு தான் செல்வாள். மரியம் குளித்து விட்டு ஒரு தட்டில் தனக்கும் தங்கைக்கும் தேவையான அளவு உணவை எடுத்துக் கொண்டு தன் தங்கை மடியில் வைத்து அவளுக்கும் உணவை தட்டிவிட்டு இறுதியாக அவளும் சாப்பிட்டு முடித்துவிட்டு தங்கையை உறங்க வைத்து அவளும் உறங்கினாள்..

மாலை நேரம் ஆகிறது தூக்கத்தை விட்டு எழுந்து மும்முரமாக வீட்டு வேலைகளை முடித்து விட்டு ஸைனபுக்காக காத்திருந்த கண்கள் மிகவும் அழகாக இருந்தது. ஹ்ம்ம். ஸைனபும் ஏதோ ஒரு கலக்கத்துடனும் மிகவும் சோர்வாகவும் வீடு வந்தாள். மரியம் ஓடிச்சென்று தேனீர் கோப்பையுடன் வந்தாள். அதில் தேயிலை,சீனிஎன்பது சரியான அளவில் இருக்குமாஎன்பது கூட தெரியாது ஆனால் அந்த தருணத்தில் ஸைனப் மரியமின் செயல் கண்டு மனம் குளிர்ந்தாள்.

ஸைனபின் தாயும் அவ்விடத்திற்கு வருகிறாள். இப்பயா வந்தீங்க ஸைனப் என்று பேச்சை ஆரம்பித்தாள். ஹ்ம்ம் என்ற வார்த்தையில் ஆரம்பித்த ஸைனப் உம்மா நான் வெளிநாட்டுக்கு வேலைக்கு போகவா புள்ளஹுனேம் நீங்க பத்திரமா பாத்து கொள்வீர்களா என்ற கேள்வியை எழுப்பினாள். மரியமுக்கு அது ஒரு கணம் அதிர்ச்சியைக் கொடுத்தாலும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

வருடங்கள் சில உருண்டோடின ஸைனபும் வெளிநாடு செல்ல நாட்கள் நெருங்கியது. முஹம்மதை வீட்டுக்கு அழைத்து வர அனுமதி கேட்க வேண்டும் என்று கூறியவளாக மத்ரஸா நோக்கி நகர்ந்தாள். ஆம் அனுமதிகிடைக்கப்பெற்று வீடு வரும் போது அவனையும் அழைத்து வந்தாள். மரியமுக்கோ மட்டில்லா

தொடர் 11



# சிரிப்பால் மறைத்த சோகம்

நீங்கள் சற்றும் எதிர்பாராத ஓர் விடயம் என்னவென்றால் ஸைனப் வெளிநாடு செல்ல தன் குடும்ப சூழ்நிலை மாத்திரம் காரணமாக இருக்கவில்லை மாறாக மறைமுகமான ஓர் விடயம் காணப்பட்டது அது என்னவாக இருக்கும்?

ஹ்ம்ம். அது வேறு ஒன்றும் இல்லை தன் கணவன் பாரிஸின் மறைமுகமான சூழ்ச்சி. அவள்வெளிநாடு சென்றால்தான் நாம் நன்றாக இருக்க முடியும, பிள்ளைகளை சிறந்த முறையில் வளர்க்க முடியும், வீடு கட்டி சந்தோஷமாக வாழ முடியும் என்று அவள் மனம் மாறும் வரை அவளிடத்தில் தான் திருந்தி விட்டேன் இனி எந்த விதமான தவறும் செய்யமாட்டேன் என்று வாக்குறுதி அளித்து ஸைனபை நம்ப வைத்தான். நீ முதலில் வெளிநாட்டுக்கு சென்று எனக்கு ஒரு வேலை அங்க பாத்துட்டு என்ன அங்க எடு நான் வாறேன் என்ற ஆசை வார்த்தைகளையும் பிள்ளைகளை நன்றாக நான் பார்ப்பேன் என்ற உறுதியான நம்பிக்கை வார்த்தை களை கூறியதன் பிற்பாடே ஸைனப் தன் தாயிடம் அவ்வாறான ஒரு கேள்வியை எழுப்ப காரணமாக இருந்தது. அந்த நேரத்தில் கூட தாயிடம் பாரிஸ் கூறிய எதையும் அவள் கூறவில்லை..

ஆம். இன்று ஸைனப் வெளிநாடு செல்கிறாள் வீட்டில் அனைவரும் அவளது பிரயாணத்திற்கான வேலைகளை

மகிழ்ச்சி. இரவு நேரம் பாரிஸ் வீட்டுக்கு வருகிறான். முஹம்மதைப் பார்த்து ஆ.. சேர் வந்திருக்காரு என்று கூறி விட்டு அறைக்குள் சென்று தூங்க ஆயத்தமானான். சரிபோய் தூங்குங்க எல்லாரும் என்று ஸைனப் கூறினாள். விடிந்தால் ஸைனப் வெளிநாடு செல்ல வேண்டும்.

நடு இரவு ஸைனப் உறங்காமல் தன் பிள்ளைகளை நினைத்து வருந்தினாள். இன்னோர் பக்கம் மரியம் உறங்காமல் தன் தாய் தந்தை பற்றியும். தாய் வெளிநாட்டு சென்றாள் தன் நிலை குறித்தும் மிகவும் ஆழமான சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தாள். நிச்சயமாக ஒருவருக்கு ஒருவர் அறிந்திருக்கவில்லை இரவு முழுவதும் விழித்திருந்தது குறித்து.

காலையில் மரியம் கண்விழித்து பார்த்தாள் ஸைனப் அவள் பக்கத்தில் அமர்ந்திருந்தாள் தாவி அணைத்து முத்தமிட்டு விடாமல் அணைத்துக் கொண்டாள். நேரில் அன்பைப் பொழிவது இந்த நிமிடங்கள் மட்டும் தானே அழகான நினைவுகளுடன் அழகான நிமிடங்கள் அவை..

(பொறுப்பற்ற கணவன், ஒரு ஆண் பிள்ளை, இரண்டு பெண்பிள்ளை, பிள்ளைகளின் எதிர்காலம் கருதி தாய் வெளிநாட்டுக்கு வேலைக்கு செல்கிறாள் இவ்வாறான சூழ்நிலையில் அந்த தாயின் மனநிலையும், தனக்கும் ஆறுதலாக இருந்த தாயும் தன்னை விட்டு பிரிந்து வெளிநாடு செல்ல அந்த பிள்ளையின் மனநிலையும் எவ்வாறு இருக்கும் என நினைக்கின்றீர்கள்?....)

இனி வரும் காலங்களில் மரியம் தனக்கு வரும் சவால்களை எப்படி முகங்கொடுக்கப் போகின்றாள்..

தொடரும்....

மும்முரமாக செய்து கொண்டிருந்தார்கள். மரியம், முஹம்மது, சாரா மூவரும் அவளை விட்டுநகராமல்அணைத்தபடிநின்றார்கள். இருப்பினும் மரியம் சிந்தித்தாள். நாம் இப்படி அழுகையுடன் இருந்தால் தன் தாய் இன்னும் மன வேதனையடைவாள் என்று அந்த இடத்தில் தன்னைத் தானே ஆறுதல் படுத்திக் கொண்டாள். புறப்பட நேரம் நெருங்கி விட்டது. தன் தாயை விட்டுப்பிரிவதை ஏற்க முடியாதஅவள் தான்விளையாட செல்வதாக கூறி தாயுடன் போக மறுத்து விட்டாள். இதை பார்த்த முஹம்மதும்நானும் தங்கச்சி கூட இருக்கேன் நீங்க போய் வாங்க என்று கூறி சாராவை அழைத்து செல்லுமாறு கூறினார்கள். சரி நாங்க போய் வாரம் என்று கூறி இருவரையும் அணைத்து முத்தமிடுகிறாள். புத்திமதிகளைக் கூறுகிறாள் அவர்களும் அவளுக்கு ஆறுதல் கூறிக் கொள்கிறார்கள்.

சரி அப்படியே நிமிடங்கள் கடந்து செல்ல சிலர் ஸைனபுடன் விமானநிலையம் வரை செல்கிறார்கள். ஹ்ம்ம் அனைவரும் வீடு திரும்பும் போது நேரம் இரவு ஏழு மணி. தன் தந்தையையும் தங்கையையும் எதிர் பார்த்து காத்து நின்றார்கள். சற்று நேரத்தில் வேன் சத்தம் கேட்டது இருவரும் ஓடிச்சென்று பார்த்தார்கள் ஆம் வந்தது தங்கை தான் அங்கும் இங்குமாக பார்வை அலைமோதியது தந்தையை தேடி அப்போது ஒரு குரல், அவரைத் தேடாதே பாதிலே இறங்கி போய்டாரு உள்ளவா வந்து தூங்கு என்றது. முதல் நாளே ஏமாற்றம்.

உண்மையில் ஸைனப் வெளிநாடு சென்றது பாரிஸின் பேச்சை நம்பி. ஆனால் அவன் கூறியது எதுவும் உண்மையில்லை ஸைனபை எப்படியாவது வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்பதே பாரிஸினதும் கீதாவினதும் நோக்கமாக இருந்தது. இவர்களின் திட்டம் இனிதே நிறைவேறியது. இப்போது போல் அப்போது ஸைனபிடம் Android இருக்கவில்லை.

கடிதம் மட்டுமே பரிமாறிக் கொள்ளப் பட்டது. எப்போதாவது ஒரு நாள் ஸைனபிடமிருந்து அழைப்பு வரும். இப்படியே நாட்கள் ஓட ஒரு மாதம் கழிந்தது தன் முதல் மாத சம்பளத்தை வாங்கியில் பாரிஸிற்கு இடுகிறாள். அது மட்டுமில்லாது ஒவ்வொரு மாத சம்பளத்தையும் அவன் பெயரில் வைப்புச் செய்தாள் அந்த பணத்தை அவன் மிகவும் மோசமான காரியங்களுக்கு பயன் படுத்தி வந்தான். குடி பாவனை, சூதாட்டம், பெண் தொடர்பு என அத்தனையிலும் ஈடுபட்டான். ஸைனபை ஏமாற்றுவதற்காக வீட்டுக்கு அப்பப்போ வந்து போய் ஏதாவது பிள்ளைக்கு வழங்குவான்.

முஹம்மதுக்கும் விடுமுறை முடிந்து விட்டது அவனைஅழைத்து செல்லுமாறு தான் தாயிடம் ஸைனப் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளாள். ஹ்ம்ம் இன்று முஹம்மதும் மரியத்தைவிட்டு பிரிந்து செல்ல வேண்டும். அவளும் மரினாவுன் முஹம்மதின் மத்ரஸா நோக்கி சென்று அவனை பத்திரமாக அங்கு விட்டு வந்தார்கள். அவள் மனதில் மிகவும் ஆழமான யாரிடமும் கூறமுடியாத ரணங்கள் ஆட்கொண்டிருந்தது. யாரிடம் கூறுவாள் அந்த பிஞ்சு மனம்... இப்படியே பல மாதங்கள் உருண்டோடின. சாராவும் அப்பப்போது ஸைனபை தேடி அழுவதும் அவளைசமாளிப்பதுமாகவே நாட்கள் நகர்ந்தது. ஒரு கட்டத்தில் மரியத்தை சாரா அம்மா என்றும் அழைத்ததுண்டு அந்தளவு தன் தங்கையை பொறுப்பாக பார்த்துக் கொண்டாள். தன் தந்தை மேல் இருந்த நம்பிக்கையை முற்றாக இழந்து விட்டாள்.தன் தங்கைக்கு தாயினிடம்

வகித்தாள். பாரிஸ் வீடு நோக்கி வரும் போது எல்லாம் தன் தங்கையை மரீனா வீட்டிக்கு ஓடிச்சென்று வீட்டுக்கு அனுப்ப வேண்டாம் வாப்பா வந்து இருக்காரு என்று கூறி வைத்து விட்டு வருவாள். காரணம் அவன் குடிபோதையில் தண்டித்து விடுவான் என்ற பயத்திலே.

ஸைனப் வெளிநாடு சென்று இப்போது பதினோரு மாதங்கள் ஆகிவிட்டது. திடிரென்று ஸைனபின் தந்தை சுகயீனம் காரணமாக வபாத்தாகி விடுகிறார். இதை ஸைனபிட்கு அறிவித்து அவளைநாட்டுக்கு அழைக்கமிகவும் முயற்சி செய்தார்கள் ஆனால் முடியவில்லை ... அப்படியே நாட்கள் கழிந்தன. திடிரென்று ஒரு நாள் பாரிஸ் அதீத குடி போதையில் வீட்டுக்கு வந்து மரியமை ஒரு தடி கொண்டு சரமாரியாக தாக்கினான் உறவுகள் எவ்வளவோ தடுக்க முயற்சி செய்கிறார்கள் ஆனால் முடியவில்லை. அவன் அடித்ததில் ஏற்பட்ட காயத்தால் மரியமின் கையிலிருந்து குருதி பாய ஆரம்பித்து இதை பார்த்த உறவுகள். கோபத்தின் உச்சத்தில் அவனை எதிர்த் தார்கள். எதுவும் பயனளிக்கவில்லை அவன் குடிபோதையின் உச்சத்தில் இருந்தான். ஒரு பெரிய கத்தி கொண்டு அனைத்து வாழைமரங்களையும் வெட்டி சாய்த்தான் பின்னர் வீட்டினுள் நுழைந்து மரியமின் ஆடைகள் புத்தகங்கள் இன்னும் பல. பாடசாலைப் பொருட்கள் என அத்தனையையும் அவள் கண்முன்னே எரித்து சாம்பலாக்கி விடுகிறான் .

உயிர் இருந்தும் பிணமாக அந்த நொடிப்பொழுது அவளை அந்த நெருப்பு எரித்தது.. அவளது கல்விக்கனவு கேள்விக் குறியாக மாறிவிடுமா?....

தொடரும்..



# விழிநீரில் நனைந்து

**சுரங்கமாய்ச் சுகந்தம் வீசியவள்**
**சுடலை நோக்கும் விழிகளாக**
**குரங்கின் கரங்களின் பூமாலையாய்**
**குதறிய வலிகள் அவளோடு**
**வானமும் பூமியும் ஒழிந்தாலும்**
**வார்த்தைகளோ தேனின் சுவையெனக்**
**கானம் பாடியே நாளும்**
**களிப்பினில் ஆழ்த்திய தாரகை**
**கூவிடும் ஈனச் செயல்களால்**
**கூனிக் குறுகித் துவண்டு**
**மேவிய புன்னகை மேவிட**
**மேதினியில் அழகுநடை போட்டு**
**புணர்ந்திடத் துடிக்கும் மாக்கள்முன்**
**பூவினும் மெல்லிய ளாகி**
**கணமேனும் களித்திட முடியாக்**
**கண்ணீர் சிந்திப் புலம்பி**
**உரசியே உலகைக் காணும்**
**உலுத்துக் கெட்டோரின் தொடுகை**
**வரமென வந்தவள் வாழ்வின்**
**வழிவினைப் பிடுங்கியே வீசிட**
**மெல்லவும் விழுங்கவும் வழியின்றி**
**மெதுமெதுவாய் பாதங்கள் நகர**
**சொல்லிட வொண்ணாத் துயரில்**
**சோகம் நெஞ்சில் முடிசூட**
**விழிநீரில் நனைந்து தோய்ந்து**
**விடியல் காணாப் பேதையாய்**
**வழிநெடுக அழுது தீர்த்த**
**வனப்பினைச் சிதைக்கிறாள் வனிதை.**

தமிழோடு உடுவிலூர்க்கலா

# வெண்பா போட்டி (பயணம்) 36

## போட்டியின் காலம் : நவம்பர் 2024



மண்ணில் மழையும் மடுவில் விழுந்ததும்
கண்ணை உறங்க விடாமலே புண்ணாக்கும்
பண்ணிசைக்கும் காதல் தவளைகள் குட்டையில்
கண்டிக்க யாருமில்லை காண்.

குயில்.மு.இரசியா பேகம்

ஆத்தாடி இப்படி ஆகாது வெட்கையும்
கூத்தாடி யென்செய்யக் கூடுமோ மூத்தோர்கள்
சொன்னதெல்லாம் மூடமென்று சொல்லியே தீர்க்கமாய்
இன்னதென் றாய்தறிதல் இல்.

எழுத்தாளர் நாகா

.

பாய்ச்சலாய்ப் பாய்ந்து பரவும் மழையினால்
காய்ச்சலும் வந்து கடித்ததே – ஓய்ச்சலின்றி
கூனொடிக்கத் தான்துடிக்கும் கோவேறு வேசரியே
நானென்ன செய்தேன் நவில் !

பாவலர் கோவதன்

.

போர்த்திப் படுக்கவைத்த பொல்லாத காய்ச்சலோ
கார்த்திகையில் வந்த கடுமழை – சேர்ந்தடிக்க
யார்தான் வரச்சொல்லி யாகம் நடத்தினர்
ஊர்விட்டுப் போவாயா ஓய்ந்து

மலர்மைந்தன்

.

டெங்கு கொசுவந்து டக்கென்றே உட்கார்ந்தே
எங்கு கடித்ததோ ஏமாற்றித் – தங்கியது
தொற்றாகக் காய்ச்சலும் பற்றி உயிரணுவை
கற்றையாய்த் தாக்கிட காடு!

வா.சண்முகம்

தும்மல் மிகையால் துடித்திடும் நாசியும்
கம்மிய தொண்டையால் காய்ச்சலும் – இம்மிக்
கனிச்சாறும் மோரும் பனிக்கூழும் ஆகா
பனியே எனக்குச் சனி.

இரா.கவிதா, திண்டுக்கல்

.

புல்லில் பனித்துளி பூத்திருக்கும் காலத்தில்
சில்லென்றக் காற்றால் சிலிர்த்ததுடல் – தொல்லையாய்க்
கண்களில் நீர்கோர்த்து கண்டபடி தும்மினேன்
தொண்டை சளியால் துயர்

கோ. பழனிவேல்

.

அடங்காப் பனியில் அடங்கினேன் மெல்ல
முடங்கித்தான் போனேன் அசந்தேன் – அடடா
கொசுவும் கடிக்கநான் கொஞ்சம் சொறிய
சிசுவாய் வரைந்தேன் சிலை

பாண்டிச்செல்வி கருப்பசாமி, கோவை

.

கண்ணெரிச்சல் காதுவலி காணாச் சளித்தொல்லை
உண்ணுதற்கும் எண்ணமில்லா ஒவ்வாத – தொண்டைப்புண்
என்ன கொடுமை இடுப்புவலி கால்வலிகள்
என்னதான் சொல்வேன் இனி.

பாவலர் தாழை ந.இளவழகன், மணப்பாறை.

.

ஐப்பசி வந்தாலே ஐம்புலனும் குன்றிவிட
அப்பப்பா ஓயா அடைமழையே – இப்ப
வருடந் தவறாது  வந்துநீயும் வாட்ட
மருந்தில் கழியுது வாழ்வு....

ஜனனி

.

கொட்டும் பனியினில் கொஞ்சம் பழையதை
வெட்டினேன் யம்மா விழிகளிங்கு – மட்டின்றி
நீர்வழியத் தும்மி நிலமும் நனைந்தகதை
கார்காலம் அய்யோடா காண்

தென்றல் கவி

.

கார்வரும் போதெல்லாம் காய்ச்சல் சளியொடு
நேர்வரும் தும்மலும் நீளுமே! – வேர்விடும்
மூச்சுத் திணறலில் மூக்கொடு வாயதும்
நீச்சல் அடிக்குமே நேர்.

கவிஞர் இரா.ச.பத்மநாபன் தஞ்சாவூர்

.

மூச்சு விடவே முடியாத மூக்கடைப்பு
பேச்சு வராமல் பெருந்தொல்லை வீச்சாலே
கூச்சம் குறைந்து கொதிக்கும் சளியினால்
பீச்சுது தும்மலால் நீர்.

தங்கவேலு கந்தன்

.

ஐப்பசி மாதம் அனலாய்த்தீய்க் கும்வெயிலை
எப்பவும் பார்த்ததே இல்லையே – வெப்பம்
துளைக்கும் துயரைத் தொலைத்து மழையே
விளைப்பாய்க் குளிரை விரைந்து !

எம்.ஆர்.தனசேகரன், மலேசியா

.

நுரையீரல் தொற்றுகின்ற நோய்கிருமிக் காக
திரையிட்டேன் மூக்கில் தினமும் – திரையை
ஒருநாள் அணியாமல் ஊர்சுற்றி வந்தேன்
பெரும்பாடு பட்டேன் பிறகு.

கோ. பழனிவேல்..

.

மூக்கடைத்து சாய்ந்தாலும் மூச்சுவிடப் போராட்டம்
தூக்கமும் கெட்டுத் துயரம்தான் – ஆக்கியதை
போக்கத்துத் தின்னும் பொழப்பாச்சே செத்துச்சோ
நாக்கிலும் சீக்கால் நரம்பு?

ஆனந்த் சுந்தரராமன்

.

காச்மூச் செனவோங்கிக் கத்திய தொண்டையின்று
பேச்சுமூச் சற்றுப் பிதற்றிடவும் – கூச்சமுற்றுச்
சைகை மொழிதான் சளியடைப்பு நீங்கிடுமா ?
ஈகையே இல்லா இளைப்பு.

கு. கமலசரஸ்வதி

.

காலநிலை மாற்றம் கடுமை வெயிலதுவோ
கோலமிடும் மெய்யதனில் கொப்புளமாய் –  தோலும்
சுருங்கிட நோயுறும் சோர்வாய்த் தணலாய்
வருத்துமே கோடை வதம்.

ஓசூர் மணிமேகலை

.

கோடைவெயில் வந்துவிட்டால் கொட்டும் வியர்வையும்,
ஆடை நனைந்தே அரிப்பெடுக்கும் – வேடை
வறுத்தெடுத்து நம்மை வதஞ்செய்யும்! மேனி
கறுக்கும் வெயிலே கட!

கோவை லிங்கா

.

வருவதும் போவதுமாய் வந்துவந்து போகும்
கருமம் பிடிச்சயிந்தக் காய்ச்சல் – இருக்கிறதே
கார்த்திகையில் கைகோர்த்தால் கட்டாயம் தங்கிவிட்டு
மார்கழியின் பின்தான் விடும்!

செ. இராசா

.

குளிரின் கடுமையால் காய்ச்சலும் வந்து
சளியும் இருமலும் சேர்ந்து – களிப்பின்றி
மூச்சுத் திணறலோடு மூக்கும் அடைபட்டு
பேச்சது நிற்பதைப் பாரு

கவிஞர் கவி நிலா மோகன், தஞ்சாவூர்.

.

பொல்லாத வெக்கையும் போட்டுத்தான் தாக்கிட
அல்லலுறு மென்கெதி அப்பப்பா – சொல்லவோ
நல்லமனம் கொண்டநான் நெய்வேலி மண்ணிருந்தும்
சில்லென்ற தூவலெங்கே சொல்!

அ.வள்ளிபாபு இவள் இயற்கை விரும்பி

.

தனியாகச் செல்லத் தரணியில் தாங்காப்
பனிதான் நிறையும் படர்ந்தே – எனிநான்
குனிந்து நிமிராது கூனிக் குறுகி
இனிஇயங்கா நிற்கிறேன் இன்று

பா.இந்திரன்

.

வெய்யில் மிகுந்திட வெப்பம் உருக்கிட
மெய்நொந்து வேண்டினேன் மேகமழை! – தொய்வின்றிக்
கொட்டித் தெருநிற்கும் கோடைவெள்ளத் தால்சுகங்
கெட்டு வளருதே கேடு

தன்ராஜ் பாப்பணன்

.

காய்ச்சலிலே பேத்திதான் காய்ந்த சருகானாள்
பேய்மழையாய் ஏன்மாலை பெய்ததுவோ – சேய்நனைந்து
பள்ளிவிட்டு வந்தவள்தான் பாயில் சுருண்டிட்டாள்
கொல்லவந்த கூற்றுவனே போ !

பாவலர் கருமலைத்தமிழாழன், ஒசூர்.

.

மூச்சு விடவும் முடியல்ல காலையில்
ஆச்சாச்சு தும்மல்தான் அன்றாடம் – ஏச்சுதான்
பேச்செல்லாம் மாறிப்போய் பேய்க்குளிர்க் காலத்தில்
போச்சுடா நிம்மதியும் போய் .

சரஸ்வதி பாஸ்கரன்

.

நீரும் சுவைமிகு நீட்டரிசிச் சோறும்நல்
மோரும் அருந்தவில்லை மொண்டுநான் – சீருடை
வாய்தனில் செம்புண் வதைதந்த வெப்பமே
தேய்ந்துபோ நில்லாதே தெற்கு.

தமிழ்க்கீரன், ஈழநாடு.

.

என்ன வெயிலையும் ஏத்துக்கும் நாமெல்லாம்
சின்ன மழைக்கே சிலுத்துப்போம்! – இன்னுமிகச்
செம்மையாப் பேஞ்சா சிதையுமே நம்மூக்கு
தும்மலாய்த் தாக்கிவிடும் தொற்று

இர அழகர்சாமி

.

மூச்சுத் திணறலால் முற்றும் முடக்கிவிடும்!
பேச்சும் குறைத்துவிடும் பீடைதைலம்! – தேச்சும்
அடங்காத் தலைவலியுண் டாக்கும் குளிரை
விடமால் துரத்தி விரட்டு.

மாலதி. திரு

.

கீழ்காற்று வீச்சத்தால் கன்னமெல்லாம் வீங்கிவிட
சீழ்போல் சளியுமுடன் சீர்கெடுக்க – ஆழ்மூச்சு
வைத்தியம்தான் என்றுமினி வாதைக்கு! காற்றே...நீ!
வைதிடும்முன் வேற்றுதிசை வீசு.

வானதி சந்திரசேகரன்

.

வாட்டுங் குளிருடன் வந்த உறைபனியால்
மூட்டு முழங்கால் முறிவுகள் – காட்டிட
வீட்டில் முடங்கியே வெவ்வேறு நோய்கண்ட
பாட்டி வெறுக்கும் பனி

குலா கிருஷ்ணா

.

இருமலுடன் தும்மல் இரண்டும் இணைந்தே
வருத்திடும் நாளும் வரமாய் – விரும்பும்
மருந்தால் கசாயம் கொடுத்தால் விரைந்து
விரும்பாதத் தொல்லை விடும்.

இந்திராணி தங்கவேல்

.

தந்தத்துப் பற்கள் தகதிமி யென்றாட
அந்தமும் ஆதியாய் அங்கமும் – சிந்தியிங்கு
நொந்து தினம்தினம் நூலாகிப் போகவே
வந்ததே வாட்டிடவா டை !!

மணிமொழி லிங்கம்.

வாமழையே கோடையிலே வாடுகின்றோம் நாளுமிங்கே
தேமதுரம் தந்திடவே தேடுகின்றோம் – நாமிங்கே
கொட்டுகின்ற சூரியனின் சூர்கதிரில் வெம்புகின்றோம்
கொட்டிநீயும் வெம்மைத் தணி.

மணிக்கூ கவி நஸீரா எஸ் ஆப்தீன்

# பறந்து போகின்றேன் சிறகில்லாமல்..

எனது கைக்குட்டையின்
ஈரமெல்லாம்
பிழிந்தெடுத்த துளிகளாய்
சாரல் வீச
நனைந்துகொண்டே பறக்கிறது
மனக்குருவி...

நீலத்தைப் பிடித்து
வானம் அமைத்து
இரு விரல்களாய்
சிறு சிமிட்டியதும்
பறக்கிறது வாலில்லாத குருவி...

எனது முதுகெல்லாம்
நாளைய ஆசைகள்
புடைத்தெழுந்து பறக்கிறது
பல வண்ண சிறகுகளை பறந்தாடிய
வண்ணப் பறவையினைப் போல...

ஒரு காடு
ஒரு மரம்
விதையுண்டு
வனமாக்க முயல்கிறது
பழமுண்டு பறந்த குருவி

மலை சரிந்து
நீர் படர்ந்து
விதை கலந்து
கனி விளைந்து
இனிப்பு கலந்து
எடுத்த முடிவிது– நான்
பறந்து போகின்றேன்
சிறகில்லாமல்...

சே கார்கவி கார்த்திக்

# வெண்பா போட்டி (பயணம்)

## போட்டியின் கால அளவு : டிசம்பர் 01 முதல் 12 வரை 2024

இம்மாத போட்டி.....

.

விளைச்சலை மட்டுமே நம்பி வாழ்க்கை நடத்தும் ஒரு விவசாயி தன் மகளுக்குத் திருமணம் முடிக்க நினைக்கிறார்.

தன் மகளுக்கு சீர்வரிசை செய்யத் தேவையான பணம் வேண்டுமெனில் நல்ல மகசூல் இருந்தால்தான் செய்ய முடியும் என்ற. மன விரக்தியோடு புலம்பும் படி ஒரு வெண்பா எழுத வேண்டும்.

மகளுக்கு சீர்செய்ய வேண்டும். நல்ல மழையைக் கொடு வர்ணபகவானே என் வேண்டும் படி எழுதலாம். அல்லது மகளுக்கு சீர்செய்ய வேண்டுமே நல்ல மகசூல் வேண்டும் என்று புலம்பலாம் அல்லது மண்ணே உன்னைத்தான் நம்பி இருக்கிறேன் என்று அழும் படி எழுதலாம் அல்லது **வேறு காரணங்கள் சொல்லியும் புலம்பலாம்...**

இதோ எ-கா வெண்பா

மூத்த மகளுக்கு முக்கால் பவுன்வாங்கச்
சேத்துவச்சக் காசும் செலவழிச்சி - நாத்துநட்டேன்
அஞ்சாறு கோணி அதிகமா வந்தாத்தான்
செஞ்சி அனுப்பலாம் சீர்.



பொதுவான விதிகள் : -

ஒருவர் பயன்படுத்திய பாடுபொருளை இன்னொருவர் பயன்படுத்த வேண்டாம்.
வெண்பாவிற்குக் கீழ் எழுதியவர்கள் தங்கள் பெயரினை தமிழில் எழுதுதல் அவசியம்.

அசத்துங்கள் கவிஞர்களே....

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே... உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும். காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்....

தளர்வுகள் :-

தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

என்றும் தமிழுடன்....

தமிழ்நெஞ்சம் ஆசிரியர் மற்றும் தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு

https://www.facebook.com/profile.php?id=100030084520602

# இறால் சில்லி 65

தேவையான பொருள்கள்

இறால் - 20
உப்பு - தேவையான அளவு
மஞ்சள் தூள் - 1 டீஸ்பூன்
எண்ணெய் - பொரிப்பதற்கு தேவையான அளவு
ஊற வைப்பதற்கு
மிளகாய் தூள் - 2 டீஸ்பூன்
கரம் மசாலா - 2 டீஸ்பூன்
இஞ்சி பூண்டு பேஸ்ட் - 1 டேபிள் ஸ்பூன்
எலுமிச்சை சாறு - 2 டேபிள் ஸ்பூன்
சோள மாவு - 1/4 கப்
கொத்தமல்லி - சிறிது
கறிவேப்பிலை - சிறிது
உப்பு - தேவையான அளவு
தண்ணீர் - சிறிது

செய்முறை

முதலில் இறாலை நன்கு சுத்தமாக கழுவி, ஒரு பாத்திரத்தில் போட்டு, உப்பு மற்றும் மஞ்சள் தூள் சேர்த்து பிரட்டி 10 நிமிடம் ஊற வைத்துக் கொள்ள வேண்டும்.
பின்னர் ஒரு வாணலியில் இறாலை சேர்த்து 2-3 நிமிடம் பச்சை வாசனைப் போக பாதியாக வேக வைத்து இறக்கிக் கொள்ள வேண்டும்.
பின் அதனை ஒரு பௌலில் போட்டு, அத்துடன் ஊற வைப்பதற்கு கொடுத்துள்ள பொருட்களை சேர்த்து பிரட்டி 5 நிமிடம் ஊற வைக்க வேண்டும்.
பின்பு ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் பொரிப்பதற்கு தேவையான அளவு எண்ணெய் ஊற்றி சூடேற்ற வேண்டும்.
எண்ணெய் சூடானதும், இறால் துண்டுகளை எண்ணெயில் போட்டு பொன்னிறமாக பொரித்து எடுத்தால், இறால் சில்லி 65 ரெடி!!!

திண்டுக்கல்சமையல்



# கவி வாணியின் வாழ்வும் வளமும்



***தமிழ்வானப் பரிதி - இசை***
***தருமின்பச் சுருதி***
***தமிழ் உம்மை ஈன்றால் அவள்***
***அமிழ்தினை போன்றாள்***
***தமிழ் காப்போர் வாழ்வார் - தனித்***
***தமிழ் சாய்போர் வீழ்வார்***
***தமிழ் இன்பம் சேர்க்கும் - தூயத்***
***தமிழ் துன்பம் போக்கும்.***

*என்னும் கவி வாணியின் வரிகளோடு எனதருமை தமிழ்த்தாயை வணங்கி மகிழ்கிறேன்.*

*தமிழுக்கு அழகூட்டி அணிசேர்த்த விடுதலைக் குயில் பாரதி, புரட்சிக்குயில் பாரதிதாசன், புதுமைக்குயில் வாணிதாசன் இம்மூவரும் புதுவையின் புகழ்க்குயில்கள் அவர்களுள் புதுமை கவிஞர் வாணிதாசனாரின் வாழ்க்கை வரலாற்றை பகிர்ந்து கொள்வதில் பேரின்பம் அடைகிறேன்*

**"கோடி கொடுப்பினும் கொள்கையில் கோடேல்»**

*என்னும் கொள்கையில் இறுதிவரை நின்ற நேர்மையாளர்.*

**"எழுத்தாலே தாய்நாட்டை தான் பிறந்த நாட்டை**
**ஈடேற்ற முனைவது தான் படித்தவனின் செய்கை «**

*என்னும் பண்பின் அடித்தளத்தை உணர்த்திய உத்தமர்,*

*"திறமை! எளிமை! இனிமை இவை வாணிதாசனாரின் பெருமையின் அடித்தளங்கள். கல்வி! கவிதை! கொள்கை.! இவை கவிஞரேறு அவர்களின் மாண்பெனும் மாளிகையின் சுவர்கள் என்று கவிச்சித்தர் க.பொ. இளம்வழுதி போற்றி நெகிழ்கிறார்.*

*மேன்மை மிகுந்த இக்கவிஞர் ஜூலை திங்கள் 22 ஆம் நாள் 1915 ஆம் ஆண்டு புதுவையை அடுத்த வில்லியனூரில் அரங்க. திருக்காமுவுக்கும், துளசியம்மாளுக்கும் தலைமகனாய் தரணியிலே அவதரித்தார். ஆதிலட்சுமி என்னும் அற்புத பெண்ணை மணமுடித்தார். மாதிரி, ஐயை, எழிலி, முல்லை, இளவேயினி, நக்கீரன், நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, பெருங்கிள்ளி ஆகிய ஒன்பது மக்களை பெற்று சேலியமேட்டின் இயற்கை எழிலில் தனது வாழ்வை ரசித்து மகிழ்ந்தார்.*

*கவிஞர் வில்லியனூரில் உள்ள ஒரு திண்ணைப் பள்ளியில் சேர்க்கப்பட்டு கல்வி பயின்றார், இளம் வயதிலேயே (ஏழு வயதில்) தன் தாயை இழந்த கவிஞர் தன் பாட்டி அம்மாயியின் அரவணைப்பில் அன்பாய் வளர்ந்தார். தன் தாய் குறித்து கவிஞர் பாடிய பாடல்*

***“என் அன்னை சிற்றூராள்! எழுதாத பாடல்!***
***இல்லறத்தின் வழிகாட்டி புகழ்ச்சியில்லை உண்மை!***
***மின்னலிடைத் தேயாத வெண்மதியம்! நீங்கள்***
***விரும்புகின்ற என்பாட்டின் ஆதியவள்»***

தன்னை கண்ணும் கருத்துமாக வளர்த்த அம்மாயி பாட்டி குறித்து பாடிய பாடல்

***“இளவயதில் தாயற்றுத் தத்தளித்த போழ்து***
***யார்யாரோ எனைத்தூக்கி சிரிப்பூட்டப் பார்த்தார்,***
***தளதளத்த என்பாட்டி “அம்மாயி” என்றன்***
***தனிச்சொத்து! நானவளின் தணியாத காதல்!”***

இக்கவிதையை படிக்கும் போழ்தே அம்மாயி பாட்டிக்கும், கவிஞரேறு விற்கும் இழையோடிய அன்பு பரிமாற்றம் நம் கண் முன் தோன்றி காட்சியளிக்கின்றது.

நம் கவிஞரேறுவின் குழந்தைப் பருவம் குறும்புகளால் நிறைந்தது. அவர் திண்ணைப் பள்ளியில் தனது படிப்பை தொடங்கினார். நான்காம் வகுப்பு படிக்கும் போழ்தே அவருக்கு தமிழ் இனித்ததாம், அதற்கு காரணம் அவர்தம் ஆசான் பாவேந்தர் பாரதிதாசன்தான்.

***“எனதாசன் எனதாசான் எனதாசான் என்றே***
***இன்றுலகில் பலபேர்கள் மார்தட்டிச் சொல்வார்!***
***எனதாசான் எனதாசான் எனதாசான் என்றே***
***இன்றுலகில் மார்தட்ட இருவர்களே உள்ளோம்!***
***எனதாசான் எனப் புதுவைச் சிவம் சொல்லல் உண்மை!***
***எனதாசான் என உலகம் என்றென்றும் சொல்லும்***
***(வாணிதாசன் கவிதைத் தொகுதி - 3)***

தன்னுடைய கவிதைகளுக்கு அடித்தளமிட்டவரும், ஆணிவேராக விளங்கியவரும் புரட்சி கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனார் என்பதை குறிப்பிட்டு எடுத்தியம்புகிறார் கவிஞரேறு.

மேலும் தனது தமிழ் ஆர்வத்திற்கு வித்திட்டவர்கள் திரு. சி.சு. கிருட்டிணன், திரு. எல்லப்பவாத்தியார் மற்றும் முத்துகுமாரசாமிப்பிள்ளை, முத்தமிழொத்த இம் மூன்றாசிரியர்களும் அன்றூட்டிய தமிழ்ப்பால், தாய்ப்பாலையும் விட ஊட்டம் தந்தது. தகுந்தவர் உரையால் தமிழறிவு விரிந்தது தமிழின் மீது தணியாத காதல் பிறந்தது. அது வளர்ந்து கவிதை உள்ளமாக மலர்ந்தது என்கிறார் கவிஞரேறு வாணிதாசனார்.
பிரெஞ்சு மொழியிலும் புலமை பெற்றவர் நம் கவிஞர். தமிழகத்து வேட்ஸ்வோர்த்துக்கு வாய்த்த ஆசிரியர்களுள் பிரெஞ்சு மொழியாசிரியர் “சிமோனேல்” சிறப்பாகக் குறிக்கப்பட வேண்டியவர். பிரெஞ்சு இலக்கியப் ‘பற்று’ கவிஞரேறுவிற்கு இவர் மூலமாகத்தான் ஏற்பட்டது. கவிஞராக உருவாக ஆசிரியர் சிமோனேல் ஊன்றிய இலக்கிய வித்தும் குறிப்பிடத்தக்கது.

தன் ஆசிரியர் சிமோனேல் தன்னை நோக்கும் போதெல்லாம் “உன் மண்டையைப்

பார்த்தால் கவிஞர் எட்மன்ரோஸ்கன் *(Edman Roskan)* சாயலாக இருக்கிறது என்று கூறியதாகக் கவிஞரேறுவே குறிப்பிட்டிருக்கிறார். தன்னை ஒரு கவிஞனோடு ஒப்பு நோக்கித் தனதாசிரியர் அன்று கூறிய அந்தச் சொற்கள் தன் வாழ்நாள் முழுவதும் நெஞ்சில் நிலைப் பெற்றிருந்ததாகவும், ஆசிரியர் சிமோனேல் அவர்களால்தான் தானொரு தமிழ்க்கவிதைக் காதலனாக மாறியதாகவும் கூறுகிறார்.

ஆசிரியர் பணியாம் அறப்பணியேற்று அர்ப்பணிப்போடு பணியாற்றினார், புரட்சி விதையிட்டு பெண்ணுரிமைக்கு குரல்கொடுத்து 'தமிழச்சி' என்னும் காவியம் தீட்டிய உன்னத கவிஞர். இயற்கையின் அழகில் தோய்ந்து தொடுவானம், எழிலோவியம், சிரித்த நுணா போன்ற நூல்களை உலகுக்கு யாத்தளித்தவர். குழந்தைகளின் சிந்தனையை செம்மைப்படுத்தி தமிழ் உணர்வூட்ட குழந்தை இலக்கியம், இனிக்கும் பாட்டு, பாட்டரங்கப் பாடல்கள், பாட்டு பிறக்குமடா போன்ற நூல்களை இளைய சமூகத்தினருக்கு பரிசளித்தவர். மேலும் தீர்த்த யாத்திரை, பொங்கற் பரிசு, எழில் விருத்தம், இரவு வரவில்லை, வாணிதாசன் கவிதைகள் தொகுதி 1, 2, 3 என்பன அவர்தம் நூல்களாகும் இந்நூல்கள் படிப்போர்க்கும், சமூகத்திற்கும் பகுத்தறிவை பரிசளிப்பவை.

கத்தும் கடலையும், தொடுவானையும், மலையையும், மண்ணையும், தம் கவிதைகளில் எழிலோவியமாய் தீட்டிய தென்னாட்டு தாகூர் கவிஞரேறு வாணிதாசனார் 'தமிழன்' இதழுக்கு தனது முதல் கவிதையை பாரதியின் பிறந்த நாளுக்காக எழுதினார். 'தமிழன்' இதழில் வாணிதாசனாரின் படமும் இவர் பாடல் எளிமையும் இனிமையும் கருத்தாழம் மிகுந்தன என்றும்.

'ஏதோ ஓர் இலட்சிய வெறியில் பாடுகிறார்: இவருக்கு நல்ல எதிர்காலம் உள்ளது' என்று இதழாசிரியர் கோ.தா. சண்முகசுந்தரம் அவர்களின் பாராட்டும் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

இலட்சிய வெறி இல்லாவிட்டால் இலக்கியங்கள் பிறப்பதேது? பெரியார் காட்டிய பாதையும் பாவேந்தர் ஊட்டிய தமிழ் போதையுமே வாணிதாசனாரை இலட்சிய வேகம் பெறத் தூண்டியது எனலாம்.

பாவேந்தர் கற்பிக்கும் முறையே தனிச்சிறப்புடையது அவர் கற்பித்த முறையும் கருத்தளித்த முறையும் தமிழில் கவிஞரேறுவை ஈடுபடுத்திக்கொள்ளும் திருப்பு முனையாக இருந்தது என்று வாணிதாசனாரே பெருமையாக "நினைத்து பார்க்கின்" என்னும் தன் சுயசரிதைக் குறிப்பில் குறிப்பிட்டு நெகிழ்ந்திருப்பது நினைவு கூரத்தக்கது. கவிஞரேறுவின் முதல் பாடலே எளிமையும், கருத்துச் செழுமையும் நிறைந்ததாக சிறப்பாக அமைந்தது தனிச்சிறப்பு.

**பாரதி நாள் இன்றடா!**
**பாட்டிசைத்து ஆடடா!**
**கற்றகல்வி காட்ட வென்று**
**கவிபுனைந்த தமிழ்மொழி**
**கண்டுகேட்டுப் பொருள் விளங்காக்**
**கசப்புக் கொண்ட நாட்களில்**
**சொற்றொடரில் இனிமை தந்தான்.**
**சுப்ரமணிய பாரதி!**

**தூயன் வாழ்க! வாழ்க! வென்று**
**சொல்லி சொல்லி ஆடடா!..**

இப்பாடலின் கடைசி அடிகளையும் காண்போம்!

***கார்மயில் போல் தமிழர் இங்குக்***
***களித்திருந்த நாட்கள் போய்க்***
***கண்ணிருண்டு அடிமை வாழ்வில்***
***கதிகலங்கி நின்றிடத்***
***தார்மொழியால் உணர்வளித்துக்***
***தலைநிமிரச் செய்தவன்***
***தமிழ்க்கவிகள் வாழ்கவென்று.***
***தலை நிமிர்த்தி ஆடடா!***

முதல் பாடலே சீரும் சிறப்புமாக அமைந்தது. தொடர்ந்து தன் படைப்பு பயணத்தில் ஈடுபட்டார் கவிஞர். தனது கவிதைகளை அரங்கசாமி என்னும் தன் இயற்பெயரின் முதல் எழுத்தையும் கடைசி எழுத்தையும் இணைத்து 'ரமி' என்ற புனைப்பெயரில் எழுதிவந்தார். தமிழன் இதழாசிரியர் சண்முகசுந்தரத்தின் வேண்டுகோளிற்கிணங்க "வாணிதாசன்" என்னும் பெயரில் எழுத தொடங்கினார்

பொன்னி, காதல், திராவிட நாடு, முத்தாரம், முரசொலி, மன்றம், குயில் போன்ற பல இதழ்களுக்கு எழுதியுள்ளார்.

'விதவைக்கொரு செய்தி' என்ற தலைப்பில் நான்கு வெண்பாக்கள் எழுதி 'திராவிட நாடு' இதழுக்கு அனுப்பியிருந்தார். அனுப்பிய பாடல் 'திராவிட நாடு' முகப்பட்டையில் வெளிவந்திருந்தது. அண்ணாவின் பாராட்டும் தொடர்ந்து எழுதுமாறு கடிதமும் வந்தன. இந்நிகழ்வு கவிஞரேறுவிற்கு பெருமகிழ்வை பரிசளித்தது.

கவிஞரேறு வித்துவான் பட்டதாரி என்ற காரணத்தாலும் பிரெஞ்சு மொழி கற்றறிந்ததாலும் தான் பயின்ற கல்லூரிக்கே 1948 ஆம் ஆண்டு தமிழ்ப் பேராசிரியராக மாற்றப்பட்டார். அங்கு மூன்றாண்டு காலம் பணிபுரிந்தார். அந்த மூன்றாண்டுக் காலமே தன்னை கவிஞன் என்ற நிலைக்கு மேம்படுத்திய பொற்காலமாகும் என்று கூறி மகிழ்வார். 28.05.1950 இல் கோயமுத்தூரில், பெத்தாம்பாளையம் பழனிசாமி, பலர் கூட்டுறவோடு முத்தமிழ் மாநாடு மூன்று நாட்கள் நடைபெற ஏற்பாடு செய்திருந்தார். அந்நிகழ்ச்சியில் நாவலர் சோமசுந்தர பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன், அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், என். எஸ். கிருஷ்ணன், மதுரம், கே. ஆர் இராமசாமி போன்றோர் கலந்து கொண்டனர். இரவில் ஒவ்வொரு நாளும் நாடகம் நடைபெறும் கழகத் தோழர்களும் தலைவர்களும் பங்கேற்று நாடகம் நடத்தினர் ஒவ்வொரு நாடகத்திலும் அறிஞர் அண்ணா பங்கேற்று நடித்த வேடத்தை நினைத்தும் பெருமைக்கொள்வதோடு. அண்ணாவின் ஒப்பனையும், நடிப்பும் தன் மனதில் பசுமரத்தாணியெனப் பதிந்துவிட்டதாக கூறி நெகிழ்கிறார், நம் கவிஞரேறு.

மறுநாள் நிகழ்வும் கவிஞரின் நினைவில் நீங்கா இடம்பிடித்திருந்தது அது பாவேந்தரோடு கவிஞரேறுவும் துணையாக சென்றிருந்த மாநாடு. இருவரும் ஜி.டி.

நாயுடு இல்லத்தில் தங்கியிருந்தனர். அப்பொழுது எட்டயபுர அரச குடும்பத்தைச் சேர்ந்த பெருஞ்செல்வர் இருவர் பாவேந்தரை அழைத்துப்போக வந்திருந்தனர், அவர்கள் உரையாடிக் கொண்டிருந்தபோது பாரதியாரைப் பற்றிய பேச்சு வந்தது.

பாவேந்தர், பாரதியார் பாடலைப் பாரதியார் போலவே உணர்ச்சி மேலிடப் பாடிக் காட்டினார். பாரதியாரை தான் பார்த்ததில்லை. ஆனால் பாவேந்தர் பாடியபோது அவரது உணர்ச்சி மிகுந்த பாடலும் தோற்றமும் பாரதியாரைப் படம்பிடித்துக் காட்டியதாக கவிஞரேறு கூறி மகிழ்கிறார்.

முத்தமிழ் மாநாட்டின் கவியரங்கம் நடைபெற்றது கவியரங்கத் தலைவர் பாவேந்தர் பாரதிதாசன் ‘அழகின் சிரிப்பு’ என்ற தலைப்பில் பல கவிஞர்களும் பாட்டெழுதிக் கொடுத்தனர். அப்பாடல்களில் ஆய்வாளர்கள் சிறந்த பாடல்களைத் தேர்த்தெடுத்துப் பரிசு வழங்கினர். அதில் இரண்டாவது பரிசாக வெள்ளிக்கிண்ணம் பரிசு பெற்றார் வாணிதாசன். கவியரங்கக் கவிதைப் போட்டியின் முடிவு குறித்துப் பாவேந்தர் பேசியபோது ஒரு செய்தியைக் குறிப்பிட்டார்கள், பாரதிதாசன் தன்னோடு கூட்டிவந்த புதுவையைச் சேர்ந்த ஒருவனுக்கே முதற்பரிசைக் கொடுத்துவிட்டாரென்று மற்றவர்கள் எண்ண இடங்கொடுக்கக் கூடாடதென்பதாலேயே என்னோடு வந்த வாணிதாசனுக்கு இரண்டாம் பரிசைக் கொடுக்கத் தீர்மானித்தேன் என்று குறிப்பிட்டு வாணிதாசன்தான் முதற் பரிசுக்குரியவரென்பதை மறைமுகமாக மக்களுக்கு கூறிவிட்டார். அன்று முதற்பரிசு பெற்றவர் கவிஞரேறு அவர்களின் உற்ற நண்பர் கவியரசர் காரைக்குடி முடியரசன் அவர்கள்தாம்.

தென்னாற்காடு தமிழ்க்கவிஞர் மன்றம் 18.06.72 இல் புதுவை நகர மன்றத்தில் கவிஞரேறு வாணிதாசனாருக்கு பாராட்டு விழா எடுத்தது, விழாவை கவிஞர் க. பொ. இளம்வழுதி நடத்தினார். இவ்விழாவில் வாணிதாசருக்கு ‘கவிஞரேறு’ என்ற பட்டமும், வெள்ளிக் கேடயமும் வழங்கப்பட்டு பாராட்ட பெற்றார். விழாவில் தமிழக அறிஞர்களும் புதுவை அமைச்சர்களும் பங்கு பெற்றனர், புதுவைத் தமிழ்ச்சங்கம் 06.05.1973 இல் ‘பாவலர்மணி’ என்ற பட்டத்தையும், வெள்ளிக் கேடயத்தையும் வழங்கி கவிஞரின் புகழுக்கு மேலும் புகழ் சேர்த்தனர்.

வாணிதாசனார் ஒன்பது கவியரங்கட்குத் தலைமை ஏற்றதாகவும் அதிலும் சென்னையில் பூம்புகார்த் திடலில் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் நடைபெற்ற கவியரங்கிற்கு தான் தலைமையேற்று நடத்தியது குறிப்பிடத்தக்கது என்கிறார். மாபெரும் மக்கள் வெள்ளத்திடையே ‘தமிழன்’ என்ற தலைமைக் கவிதையை வாசித்தபோது, மக்கள் வெள்ளத்தின் மகிழ்ச்சி ஆரவாரமும் கைத்தட்டலும் மெய்சிலிர்க்க வைத்ததாகவும் நெகிழ்ந்து உருகுகிறார் கவிஞரேறு.

***“அறிவைத் துணைக்குப் பலநாள் அழைத்தான்***
***நெறியை உணர்த்தி நெடும்புகழ் நாட்டிக்***
***கடலினைத் தாண்டிக் கயல்புலி வில்லை.***
***இடமகல் அண்டையர் நாட்டின் இடையிலும்***
***நட்டான் தமிழன் மெய்ச்சீர்த்தியை நட்டானே!”***
***சங்கம் வளர்த்தான் தமிழ்வளர்த்தாசன் சான்றோர்க்கே***
***எங்கும் பொருளை இறைத்தளித்துக் காத்தவன் யார்?***
***மங்காப் பெரும்புகழ்சேர் மாத்தமிழன் கற்றளி***
***எங்கும் கிடைக்கிறதே என்ன இதன் பொருளாம்?”***

*உருசியர் (Russians) 1952ஆம் ஆண்டில் சிறந்த இலக்கியப் பணி ஒன்றைச் செய்தார்கள் "இந்திய இளங்கவிஞர்கள்" என்னும் தலைப்பில் ஒரு நூலைத் தங்கள் தாய் மொழியான உருசிய மொழியிலும், உலகமறிந்த ஆங்கில மொழியிலும் தயாரித்து வெளியிட்டார்கள். அந்த நூலில் கவிஞரேறு அவர்களின் பாடல்களும் இடம் பெற்றிருந்தன. அந்நூல் ஆசிரியர் குறிப்பில்.*

*"இந்தியக் கவிஞர் அவருடைய பாடல்களில் தமிழ் இயற்கைக் கவிஞர் வாணிதாசனுடைய 'அழியா நூல்' என்னும் தலைப்பில் அமைந்த பாடல்களுக்கு நிகரான பாடல்கள் வேறு எதுவும் இல்லை" என்று குறிப்பிட்டுக் கவிஞரேறு அவர்களின் திறமான புலமைக்கு வெளிநாட்டார் வணக்கம் செய்து போற்றினார்கள்.*

*நமது தென்னகத்து தாகூர் புகழுக்கோ பொருளுக்கோ விரும்பிக் கவிதைகள் எழுதியதில்லை வயல் வெளியைச் சுற்று வதும், குழந்தைகளுடன் விளையாடுவதும், கவிதை இயற்றுவதும், படிப்பதும் கவிஞருக்கு இன்பம் ஊட்டுவனவாகவே இருந்தது அந்த இன்பத்தின் வெளிபாடே அவர் இயற்றிய கவிதைகள். அவருக்கு விருப்பமானவை தனித் தமிழும் கவிதையும்.*

*மேலும் அவரவர் தாய்மொழி சீரும் சிறப்புமாக வாழ வேண்டும், சமுதாயம் சீர்திருந்த வேண்டும், ஏழை பணக்காரன் இல்லாத பொதுவுடைமை நாட்டில் நிலைபெற வேண்டும் என்பதே தனது குறிக்கோள் என்றும், அதன் பொருட்டே கவிதைகளை படைக்கிறேன் என்றும் உரைக்கிறார் கொள்கை உயர் கவிஞரேறு*

***"பழக்கத்தால் உயர்வு தாழ்வு***
***படைப்பினால் அல்ல தம்பி***
***விளைவினை மக்கள் எல்லாம்.***
***பொதுவாகத் துய்க்கும் மேன்மை***
***முளைத்திடில் தமிழர் நாட்டில்***
***முளைத்திடும் இன்ப வாழ்வு"***

*என்னும் பாடல் கவிஞரேறுவின் கொள்கையை எடுத்தியம்புகிறது.*

***"ஊருக்கே உழைப்பதுவும் ஊர்வாழும் மக்கள்***
***உயர்வுக்கே உழைப்பதுவும் நற்கவிஞன் வாழ்க்கை"***

*என்று கவிஞனின் வாழ்வுக்கே இலக்கணம் வகுத்தவர், தன் கவிதைகள் சமூகத்தில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே தனது வேட்கையாக இருந்தது என்பதை தம் பாடல்கள் மூலம் பிரதிபலிக்கிறார். மேலும் தனது படைப்புகள் அனைத்தும் நோக்கத்தோடு இயற்றப்பெற்றவை என்றும் நல்லதை ஊக்கப்படுத்தும் வண்ணமும், அல்லதைத் தாக்கும் வண்ணமும் அமைந்தவை என்றும், முழங்குகிறார் கவிஞர்.*

*இலங்கை ஏடு தினகரனுக்கு அளித்த நேர்காணலில் தம் எழுத்தின் நோக்கத்தை எடுத்தியம்பியதை பார்ப்போம்;*

*"நான் என் கவிதையின் வாயிலாகப் படிப்பவர்களுக்குச் சங்க கால இலக்கிய நினைவைத் தூண்ட ஆசைப்படுகிறேன் சங்க இலக்கியப் பொற்காலக் கவிதைகளைப் போல் மீண்டும் தரமான கவிதைகள் தோன்ற வழி செய்ய வேண்டும். அதற்கான*

எதிர்காலக் கவிஞர்களை உண்டாக்க வேண்டும் என்பதே என் ஆசை. சங்க கால இலக்கியத் தனித்தமிழ் சொற்களை எளிமையிலும் இடையிடையே ஒன்றிரண்டு புகுத்துவது இதன் காரணமேயாகும்.

'வானொலி' என்னும் சொல்லை நீக்கிவிட்டுத் தமிழ்நாட்டில் இயங்கும் வானொலி நிலையங்கள் 'ஆகாச வாணி' என்னும் சொல்லைக் கையாளத் தலைப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வாணிதாசன் திருச்சி வானொலி நிலையம் வழங்கிய நிகழ்ச்சியை புறக்கணித்துவிட்டார். இதனால் அந்த நிலையம் கவிஞரேறு அவர்களுக்கு நிகழ்ச்சி வாய்ப்பளிப்பதையே நிறுத்திக் கொண்டது. கவிஞரேறு வாணிதாசன் தனித்தமிழ் மீது கொண்ட பற்றும் தமிழ் மீது கொண்ட காதலும் இந்நிகழ்வில் இருந்து நமக்கு புலப்படுகிறது.

எனக்கு இயற்கையின் மீது ஈடுபாடு மிகுதி இயற்கைக் கவிதை அதிகம் எழுத ஆசைப்படுகிறேன், எழுதுகிறேன். என் பாடல் வாயிலாக வாசகர்களை நான் அடிக்கடி சிந்திக்கத் தூண்டுகிறேன். படித்தோரும் படிக்காதோரும் சுவைக்க வேண்டும் என்றே என்னி நான் எழுதுகிறேன்'' என்று தெள்ளத் தெளிவாகத், தான் எழுதுவதன் நோக்கத்தைக் கூறியுள்ளதிலிருந்தே எதிர்கால தலைமுறையினர் தமிழ்மொழியின் மேன்மையை உணர்ந்து, சிந்தனை எழுச்சிமிக்க கவிதைகளை படைக்க கவிஞரேறு தம் கவிதைகள் மூலம் வித்திட்டிருப்பது. புலப்படுகிறது.

கவிஞரேறுவிற்கு ஒரு பேராசை இருந்ததாம். அதனை தானேதன் பாடல் மூலம் உரைக்கிறார். இப்பாடல் மக்கள் எதிர்காலத்தில் எவ்வாறு இருக்க வேண்டும்? என்னும் கவிஞரின் கண்ணோட்டத்தையும், பொதுவுடைமை, பகுத்தறிவு கோட்பாடுகளையும் மிகத் தெளிவாக எடுத்தியம்புகிறது. பின்வரும் அந்த பாடலை படித்து ரசிப்போம் அவ்வழி நடக்க உறுதி எடுப்போம்.

***அந்தியிலே கோயிலெலாம் மணியடிக்கக் கேட்பேன்.***
***ஆனாலும் என துள்ளம் அமைதிகொள்வ தில்லை.***
***சந்தியிலே கூடுகின்ற கூட்டம்போல் இன்றித்***
***தமிழ்மக்கள் தாய்நாட்டின் நலம்பேண வேண்டும்***
***பந்தியிலே தலைவாழை இலையிட்டே உண்போர்***
***பசிமீறக் கையேந்திக் கெஞ்சுகின்ற ஏழை***
***புந்தியிலே நிழலாடக் காண்கின்றேன் இந்தப்***
***போக்கிற்கெலாம் என் பாடல் வழிவகுத்தால் போதும்***
***பாலுக்கே அழுங்குழவி பசிக்கேங்கு வோர்கள்***
***பாயின்றி இடமின்றி நிழலுறங்கும் கூட்டம்***
***நூலுக்கே வழியின்றிக் கைத்தறியால் வாழ்வோர்***
***நுணலைக் கூச்சலிட்டால் பசிநீங்கப் போமோ?***
***வேலுக்கே வேலெதிர்ப்பை விளைவிக்க வேண்டும்***
***விரைவினிலே மக்கட்கு நல்லுழைப்பைத் தூண்ட***
***தோலுக்கே உணர்வூட்டப் பகுத்தறிவை ஊட்ட***
***தூயதமிழ் என்பாடல் வழிவகுத்தால் போதும்!***

என்று உரக்கச் சொல்கிறார்.

"நினைத்துப் பார்க்கின்" என்னும் தன் சுயசரிதையில், 'என்னைப்பற்றி இனி அதிகம் நான் சொல்ல விரும்பவில்லை. என் கவிதைச் சுவைஞர்களும் ஆய்வுரையாளர்களும் சொல்ல வேண்டியவை பல இருக்கலாம் என நான் நம்புகிறேன். அப்பொறுப்பினை அவர்களுக்கே விட்டு விடுகிறேன்.' என்று முடித்திருப்பார்.

அவரின் இந்த கருத்தாழம் மிகுந்த வரிகள், இளைய சமூகத்திற்கான கவிஞரின் பார்வையை எடுத்தியம்புகின்றன. கவிஞரேறு இளைய சமூகத்திற்கு விடுத்த நம் புதுச்சேரியை சார்ந்த எழில்மிகு சிற்றூராம் சேலியமேட்டின் இயற்கை அழகை உவமைப்படுத்திய விதமும், ரசனையும், கவிநயமுமே கவிஞரேறுவை "தென்னாட்டு தாகூர்" என்ற உயரிய நிலைக்கு இட்டுச் சென்றது.

தன் சூழலில் உள்ள மரம், ஓடை சேவல், ஆடு, கிளி, வானம், மழை என்று செந்தமிழ் கொஞ்சும் இயற்கை எழிலை வேறு யாரால் பாட இயலும். இயற்கை எழிலை கண்டு, களித்து, ரசித்து, தொலைந்து, நெகிழ்ந்து துய்த்து, மகிழ்ந்த அந்த மாகவியின் மேன்மையை பட்டியலிட்டுக் கொண்டே இருக்கலாம். விருத்தப்பாவில் விந்தைகள் படைத்த விருத்தப்பா வித்தகர்.

"**செய்து காட்டி செய்யச் சொல்லு**"
என்று இறுதிவரை கொள்கைவழி நின்ற புனிதர்.

**வரலாறு படைத்தவர்கள் யாரும் தனக்காக வாழ்ந்ததில்லை**
**தனக்காக வாழ்ந்தவர்கள் யாரும் வரலாறு படைத்ததில்லை**

தமிழ்க் கவிஞர்களின் வரலாற்றில் நீங்கா இடம்பிடித்து வாழ்வாங்கு வாழ்ந்துக் கொண்டிருக்கும் கவிச்சித்தனின் கவித்துவத்தை போற்றுவோம்.

**"எல்லாரும் நல்லார் என்று எண்ணுவார் இன்றமிழ்**
**வல்ல கவி வாணிதாசனார் - அல்லும்**
**பகலும் தமிழ்ர்தம் பண்பாடு - பற்றிப்**
**புகலும் பாட்(டு) ஒவ்வொன்றும் பொன்"**
என்று பாவேந்தரால் புகழாரம் சூட்டப்பட்ட வாணிதாசரை படிப்போம், அவணி அறிய அறிமுகம் செய்வோம், வணங்கி நெகிழ்வோம்.



நல்லாசிரியர் வளர்மதி முருகன்,
குயவர் பாளையம்,
புதுச்சேரி.

# பாரதியின் உயிரொப்பு



1

துவண்டிடா மனத்தை துணையெனக் கொள்க
துரும்புமே உதவிடும் நன்றாய்
அவனியை நித்தம் ஆட்டிடும் மாயை
அனைத்தையும் வென்றுயர் இன்றே
கவலைகள் இல்லாக் கனிமொழி உண்டா?
கலங்கிடா நெஞ்சமே கொள்வாய்
தவமெனக் கிடைத்த வாழ்வினை வாழ்க
தவறிடும் உலகினை ஆள்க!

அருவியின் ஓசை சொல்லிடும் சான்று
அலைந்திடும் மனத்தினை அடக்கும்
குருவிகள் பேசும் பேச்சினில் இன்பம்
குயிலதன் பாடலின் சந்தம்
திருவருள் பெற்ற வாழ்வினில் காதல்
திரும்பிடும் பாதையில் சான்று
அரும்பிய வாழ்வில் கற்பனை தோன்ற
அணியெனப் பாடினான் பாட்டு

உயிர்களில் அன்பு காட்டிய வீரன்
ஒன்றியே பாடிய ஓசை
உயிர்த்துடிப் புடனே உலகினில் கேட்க
உன்னத வாழ்வியல் வேட்கை
குயிலுடன் கொண்ட இனியநல் உறவு
கூறிடும் உயர்ந்தநற் பண்பு
மயில்களின் நடனம் மனத்தினில் தந்த
மாபெரும் மகிழ்வினை வாழ்த்தி

தன்னிலை மறந்து தனதுயிர் என்றே
தரணியில் உயிர்களைக் கண்டான்
துன்புறும் வேளை துணையென நின்றான்
துணிவுடன் உதவிடும் மேன்மை
அன்றிலை ஒத்த மனத்துடன் வாழ்ந்தே
அஃறிணை உயிரையும் நோக்கி
தன்னுயர் காதல் பண்பினால் பாடித்
தனித்துவம் பேணிய சான்று

2

சோலையில் காணும் பறவைகள் அழகு
சோகமும் தூரமாய் போகும்
சாலையில் காணும் உயிரினம் யாவும்
சடுதியில் ஓடிடா வண்ணம்
காலையில் சென்றே காத்திடும் செய்கை
காலமும் வாழ்த்திடும் மாட்சி
மாலையில் வந்த பலநிறக் குருவி
மயக்கினான் பாரதி அன்றே

வழியினில் காணும் காட்சிகள் எல்லாம்
வருவதை யுணர்த்திடும் மாயம்
விழிகளில் நிறைந்த சொப்பனம் எல்லாம்
வியப்பினைக் கொடுத்திடும் தேடல்
பழகிய நட்பும் உயிர்களும் சொல்லும்
பாரினில் உணர்த்திடும் செய்கை
அழகிய தீவில் ஆழமாய் ஊன்றி
அன்பினைத் தேடிடும் ஏழ்மை

வானமும் பார்த்துப் பலகதை கூறும்
வான்மழை பெய்திட ஓங்கும்
கானமும் கேட்டு இடிமுழங் கிடுமே
காவியம் எழுதிடும் கரங்கள்
ஞானமும் நிறைந்த புலமையும் கொண்ட
ஞானியின் கற்பனை இங்கு
ஆனிரைக் கூட்டம் ஆற்றிடும் செய்கை
ஆவலாய் காத்திடும் பூமி

காக்கையும் பறக்கும் புள்ளினம் யாவும்
கனவிலே ஒன்றென எண்ணி
பாக்களில் பாடிய பாரதி உன்றன்
பாட்டினில் ஆர்வமும் கொள்ள
ஆக்கிடும் விருத்தம் அனைவரும் காண
அன்பனே காட்டுவாய் பாதை
நோக்கிடும் மாந்தர் உயிரினைப் பேணி
நுண்ணறி வுடனுயர் வாரே

வனத்தினில் வாழும் யாவையும் ஒன்றாய்
மகிழ்ந்திடக் கண்டவுன் கொள்கை
தினமுயர்ந் தோங்க மறுவிலா வாழ்வு
திங்களாய்த் தோன்றிடும் அன்றோ?
வினவிடும் என்றன் வினாவினை காண்போர்
விடைதரும் விடியலைக் காண
கனவுகள் காணும் காரிகை என்றன்
கனவினை மெய்ப்படச் செய்வாய்

உயிரினை ஒன்றாய்ப் பேணிடும் உன்றன்
உயர்ந்தநற் பண்பினைப் பேணி
பயிர்களை வளர்க்கப் பருவமும் நல்கும்
பலன்களைப் பெற்றிட எழுக
வயிற்றினை நிறைக்க நித்தமும் ஏங்கும்
வறியவர் வாழ்வினில் நன்மை
பயின்றிடும் நீயும் பகிர்வினை வளர்க்க
பாரினில் பாடுகள் படுவாய்!

பெண்மையைப் பாடி பேற்றினைத் தந்தான்
பிறந்தவை யாவையும் வாழ்க
கண்ணெனப் போற்றி கருத்தினைச் சொல்லி
காவியம் படைத்தவன் வாழ்க
அண்டிடும் தீமை அகன்றிட உதவி
அன்பினைச் சூட்டியோன் வாழ்க
பண்பினில் உயரப் பலகதை சொல்லும்
பாரதி உன்புகழ் ஓங்க

**ரூபா அன்ரன்**
சுவிற்சர்லாந்து





# ஆண் தாய் அவர்...

அந்த சலித்து வெறுக்கும் வெயிலில் இடையிடயே நிறுத்தி நிறுத்தி 'கரார்', 'கரார்' என சத்தமெழுப்பிப் பஞ்சாய்ப் பறக்கும் பேருந்து பயணத்தை வெறுத்தாலும் விதியின் வழியென சகித்து, ரசிக்கும் இயற்கையோடு ஒன்றி; எனக்கு ஓர் அலாதிப் பிரியம் அவருடன் பயணிப்பதென்பதில்...

ஜன்னலோர இருக்கையில் அமர்ந்து, தூங்கித் தொங்கும் என் தலைக்குத் தோள் கொடுத்து நீவித் தடவும் ஆண் தாய் அவர்...

சாதிக்கத் துடிக்கும் எனக்குக் கிடைத்த சலிக்காத அற்புதப் பரிசு அவர்-விரிந்த வானில் பறக்கும் என் அகலச் சிறகுகளை வெட்டிவிடாது பறக்கும் திசையெங்கிலும் வழி காட்டியவர்...

என் இளமையை மாயவலைக்குள் சிறைப்பிடித்தடைக்காமல் வெட்ட வெளியில் சட்டெனப் பறக்கும் பட்டாம்பூச்சியாய்ப் பறக்கவிட்டு இரசித்தவர்...

ஆசை என்று எண்ணம் என்னுள் தோன்றினால் அதை நிறைவேற்ற வென்றே பிறவியிலே வாகை சூடிப் பிறந்தாரோ என்னவோ?

தகப்பன் அந்தஸ்தையும் தாண்டி, தாய்மை உணர்வையும் தாண்டி நண்பனாய்த் தோள் கொடுத்த என்னைப் பெற்றெடுத்த தந்தை அவர்...

என்னை அரியணையில் வைத்து அழகு பார்க்கத் துடிக்கும் என் உயிரின் உயிர்நாடியானவர், அப்பா என்று நான் அழைக்க அகமகிழ்ந்து அள்ளிக் கொஞ்சும் இன்முகத்தான்...

-

'அரமிகாக்கவி'

**அதீனா அபூ உபைதா,**

ஓட்டமாவடி

# உயிரோடு விழுங்கும் பூமி

ஆண் வாரிசு பெறுவதில் தோல்வியுற்று...
நலிந்து கிடக்கிறாள் அடுத்தடுத்து
'பெண் குழந்தைகளை ஈன்றவள்'

ஆண்மை குறைந்தவனை மணந்து...
அரச மரத்தில் தொட்டில் கட்டுகிறாள்...
'மலடி'

மங்கல காரியங்களில் மேடையில்
நிற்கத் தயங்குகிறாள்...
'விதவை'

வயிற்றுப் பசிக்கு ஆண்களின் காமப்பசி தீர்த்து...
உணவைப் பெறுகிறாள்
'விபச்சாரி'

கருத்தடை அறுவைச் சிகிச்சைக்கு
கணவனை அனுமதிக்காமல்...
தன்னை உட்படுத்திக் கொள்கிறாள்...
'வம்ச தர்மம் காப்பவள்'



சீர் கேட்கும் புகுந்த வீட்டிற்கும்...
கொடுக்க மறுக்கும் தாய் வீட்டிற்கும்...
நடுவே திரிசங்கு நரகத்தில் விழுகிறாள்...
'வாழாவெட்டி'

குடிகாரக் கணவனிடம் அடிபட்டு மிதிபட்டாலும்...
தியாகத்தின் புனிதம் காக்கிறாள்...
'பத்தினி'

வீட்டின் அக்கினி மூலையில்
நாள் தோறும் தீக்குளிக்கிறாள்...
கல்வியில் தங்கம் வென்றிருந்த
'இல்லத்தரசி'

கணவன் வஞ்சித்து கை விட்ட பிறகு...
வேறு துணையோடு சேர்ந்து வாழுகிறாள்...
'நடத்தைக் கெட்டவள்'

தடைகளைத் தாண்டி வேற்று சாதிக்
காதலனை மணந்ததால்...
ஒதுக்கப்படுகிறாள்
'ஓடுகாலி'

எத்தனைப் புரட்சிகள் வெடித்தாலும்...

இத்தனைப் பெண்களையும்
உயிரோடு விழுங்கும் பூமி கொக்கரிக்கிறது...

'பெண் என்பவள் பூமாதேவி.

தமிழ்ச்செல்வி

# மண்ணைப் போற்றுதும்! மண்ணைப் போற்றுதும்!

## உலக மண்வள நாள் : டிசம்பர் - 5

**மண்ணின் தோற்றம் :**

மண் புவியின் மேற்பரப்பில் காணப் படுகிறது. புவியியல் மாற்றங்களினால் மலை, நீர், காற்று இவற்றின் உதவியால் பாறைகள் வேதியியல் மாற்றம் பெற்று புவியின் மேற்பரப்பில் பரவியுள்ளது.

**மண்வகைகள் :-**

களிமண், செம்மண் வண்டல்மண், உவர்மண், சரளை என பலவாறாக அதன் தன்மையைப் பொறுத்தும், நிறத்தைப் பொறுத்தும் வகைப்படும்.

தமிழ்நாட்டில் இவ்வாறான மண்வகைகள் பரவியுள்ளன.

**சங்க இலக்கியச் சான்றுகள் :**

செம்புலப் பெயர் நீர் போல - (குறுந்தொகை)

உறுமிடத் துதவா உவர் நிலம் (புறநானூறு)

பயவாக் களரனையர் கல்லாதார் - (வள்ளுவம்)

பல்வேறு இலக்கியங்கியங்களில் மண் வகைகள் பற்றிய சான்றுகள் காணப் படுகின்றன.

மணல். : மண்என்பது நீரைப்பிடித்து வைத்துக்கொள்ளும். ஆனால், மணல் அவ்வாறு செய்யாது என்பதால் அதன்



பெயர் மணல் என்றானது.

மண் + அல்=மணல்

**மண்ணின் பயன்பாடுகள் & பெருமைகள் :**

பயிர் விளைவதற்கு
உறுதுணை மண்ணே.
இந்திய நாடு விவசாயத்தை
நம்பியுள்ள நாடு.
நல்ல விளைச்சலுக்கு ஏற்ற
சமவெளிகள் காணப்படுவதும் சிறப்பு.-
விளைநிலம் - பயிர் விளைவதால்
மண்ணை விளைநிலம் என்கிறோம்.

வீரம் விளைந்த மண் : வீரர்கள் வாழ்ந்து உயிர்த்தியாகம் செய்த இடங்களை வீரம் விளைந்த மண் என்பர்.

கயத்தாறு பகுதியில் இன்றும் பிறந்த குழந்தைக்கு மண்ணை நெற்றியில் இட்டு வாழ்த்துவர் (வீரபாண்டி கட்டபொம்மன் வீரம் நினைவுகூர்ந்து)

மண்மணம் வீசும் சமையல் அந்த அந்த பகுதியின் பாரம்பரியம் நிறைந் சமையலை இவ்வாறு அழைப்பர்.

தாய்மண்ணே வணக்கம்:
தான் பிறந்த ஊரை தாய்மண் என்பர்.

**தைப்பொங்கல் :**

பானை செய்து பொங்கல் வைத்து சூரியனை வழிபடும் தமிழனுக்கு மண்தான் தேவை.

அந்தக் காலத்தில் 'மண்பாண்டங்கள்' உணவு தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டன. உணவும் கெடாது. குளிர்ந்தும் இருக்கும்.

பானைகளில் நீரைச் சேமிக்க,
உணவு சமைக்க, கீரை கடைய,
தயிர் பானை எனப்
பல வகைகள் உள்ளன.
மண் அடுப்புகள்:
தீயைத் தாங்கும் தன்மையால்
மண்அடுப்புகள்செய்து
உணவுசமைக்கின்றனர்.

கார்த்திகை விளக்குகள் :

மண்ணால் வகை வகையாக விளக்குகள் செய்து தீபம் ஏற்றும் பழக்கம் நம்மிடையே காணப்படுகிறது.

இறப்பிலும் மண் : முதுமக்கள் தாழி செய்து தொன்மைத் தமிழரின் உடல்கள் மண்ணுள் புதைக்கப்பட்டன.

கலம் செய் கோவே!
கலம் செய்கோவே!
(- புறநானூறு 256)

சங்கப்பாடல் இறந்தவர்களை இட்டுப் புதைக்கும் முதுமக்கள் தாழி செய்வோனை விளித்து பாடிய பாடல் சான்றும் உள்ளது.

இன்று அவை அகழ்வாராய்ச்சிகளில் தோன்றி பண்டைய தமிழரின் பண்பாட்டை விளக்குகின்றன.

**இடுகாடு :**

இன்றும் அவரவர் வழக்கப்படி, இறந்த உடல்கள் இடுகாட்டில் இடப்படுகின்றன.

**தெய்வச்சிலைகளாக மண் :**

பிள்ளையார் சதுர்த்தியில் மண்ணே கடவுளாக உருப்பெற்று பின்னர் நீரில் கரைப்பது இன்றும் நம்மிடையே நிலவும் ஆன்மீகச் செயலாக நடைபெறுகிறது.

ஐயனார் கோவிலில் சிறுதெய்வச்சிலைகள் செய்ய இன்றும் மண் தேவைப்படுகிறது.

**விளையாட்டு பொம்மைகள்:**

மண்ணைக் கொண்டே பொம்மைகள் செய்வதால் தீங்கு வராது. வண்ணம் தீட்டப்பட்டு இன்றும் கொலு பொம்மை களாக மண்ணே காட்சி தருகிறது.

**மண்ணின் பெயரால் வசை**

நீ மண்ணாகப்போயிடுவ!

என்பது இறந்து அழிந்து மண்ணோடு மண்ணாக உன் உடல் அழிந்துவிடும் என சபித்தல்.

மண்ணாங்கட்டி -
மண் + ஆம் + கட்டி

மண்ணால் ஆன கட்டிகள் விளை நிலத்தல் இடைஞ்சல் ஏற்படுத்தும். அவற்றை உடைத்து மண்ணாக்கி நிலத்தைப் பண்படுத்துவர்.

சேற்றை வாரி இறைத்தல் -
மண்ணை வாரித் தூற்றுதல்
பகைமையின் உச்சமாக அமைகிறது.

**பொறுமைக்கும் மண் சான்று.**

பொறுமையில் பூமாதேவி என்று இந்த நிலத்தைப் புகழ்வர்.

அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல - என்கிறார் வள்ளுவர்.

மண் என்றால் உலகம்

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் - என்கிறது தேவாரப்பாடல்

**நிறைவுரை:**

மண் என்பது நாம் வாழும் இடம்.

உலகம்,பூமி, நாடு, நம்பிறப்பிடம், நம்பண்பாடு, விளைநிலம் என்ற பல பொருள்களில் வருகிறது.

அது புனிதமானது,
நம்மை வாழ்விப்பது.
நம் பண்பாட்டை, வெற்றியைத்
தக்க வைத்திருப்பது.

நம் மண் அழிந்தால் நம் பெருமையும் அழிந்துவிடும்.

உயிர்களும் இவ்வுலகில் வாழ முடியா மல் போய்விடும்.

மண்ணைத் தேவையற்ற கழிவுகள், நெகிழ்ப் பைகள், வேதியியல் பொருட்கள் சேர்த்து பாழாக்கலாமா?

நமது மண் - நமது பெருமை,
நமதுமண் - நமது வளமை!

மண்வளம் காப்போம்!
நமது மண்ணைக் காப்போம்!

திருமதி.இரா. இராஜாமணி.
ச.த.இ.பூங்கா ஈரோடு



# லிமரைக்கூ – 10

வருமான வரி ஏய்ப்பு
சாமானியருக்கு வரும் தண்டிப்பின் அழைப்பு
பகுமானவர்க்கு அதே பிழைப்பு

தொண்டனின் வீட்டில்  அனல்
தானைத் தலைவன் வீட்டில்
தம்பட்ட  வெற்றியின் கனல்

பால் விலை
பாலகி அறிவாளா உயர்வை
பசியில் அயர்ந்தாள்

இன்னும்  பின்னும் போகுதே
மனம் மின்னும் பொன்னின் பின்
நப்பாசை மிகுந்து போகுதே

கருத்துக்கு மறுப்புண்டு
மாற்றம் இல்லை அதில்
வேற்றுமையில் ஈர்ப்புண்டு

திருத்தும் அவர் மேன்மையாளர்
திறமையாளர் மடிமை இன்றி
கற்பர் அவர் தன்மையர்


தடமாறா  யோகியர்
சத்தியர் சோதிடர் போதகர்
அவரே சோதியர்

திண்ணமாய் எண்ணம் கொள்வீர்
திறனோடும்  அறனோடும் உறவாடும்
நண்ணும் தண்ணியரே கேளீர்.

சில பேரிங்கு வாழ்கின்றனர்
பல பேர் உழைப்பில்
பல பேரிங்கு அழுகின்றனர்..

மழையில் விழுந்தது மண்சுவர்
அது அல்ல இன்றைய செய்தி
விழுந்தது கான்க்ரீட்  சுவர்

சகிகலா விஸ்வநாதன்



# தன்முனைக் கவிதைகள்

பருவத்திற்கு ஏற்றாற் போல்
பயிர்கள் செய்தார்கள்
காலநிலை மாற்றம்
இயற்கை அழிவுகள்

இயற்கையாய் சமைத்து
இயல்பான வாழ்வு
வீதியில் உணவுகள்
வீட்டின் அடுப்பெங்கே

துன்புறுத்தியது எல்லாம்
துயரமான நினைவுகளில்
அவலமான நாட்களை
மறத்தல் முடியுமோ

எந்த வித்தியாசமுமின்றி
சமத்துவம் பேணப்படும்
சீரான குடும்பங்களை
சீரழிக்கும் மதுச்சாலை

தெருக்களில் பிணங்கள்
அடையாளம் தேடப்படுகிறது
உயிர்களின் மதிப்பை
மதிக்காத போர்ச் சூழல்

அப்புத்துரை ஜெகன்
சுவிஸ்

# பேரழகு

## வஃபீரா வஃபி

அலாவுதீனின் அற்புத விளக்கைத் தேய்த்ததும்
கைகட்டி முன் தோன்றும் பூதங்களாய்

திறக்கப் பட்ட அணையொன்றிலிருந்து
அதீத வேகத்துடன் பாயும் நீரின் அடர்த்தியாய்

காற்றுழுத வயல்களின் சாயலாய்
வரலாற்றுச் சின்னங்களின் சாயல்களாய்

சீகிரியா, அஜந்தா சுவரோவியங்கள் சட்டென மாறும்
கஜுரஹா சிற்பங்களின் வடிவங்களாய்

மனிதக் குரங்கொன்று  சட்டெனக் கண்
இமைப்பதற்குள் தும்பிக்கையுடன்
யானையாய் உருமாற்றங் கொள்ள
கண்ணிமைக்கும் நேரத்தில்
காட்டு விலங்குகள் அணிவகுத்துக்
கலைந்தோடும் மாயம் நிகழும்

கழுதை தேய்ந்து கட்டெறும்பான
கதையாய் டைனோசரொன்று
மறுகணம் கரைந்து ஊரும் பாம்பாய்

பாசப்பிணைப்பில் மகவொன்றின்
தலை கோதும்,  பாலூட்டுந் தாயாய்,

நெருங்கி முத்தமிடும் காதலன் காதலியாய்
மார்பில் சாய்ந்து இளைப்பாறும் தம்பதியாய்

வளைந்தோடும் சிற்றோடையாய்
கிளர்ந்தெழும் புகை மண்டலமாய்

உயரம் தொட்டு விழும் நீர்வீழ்ச்சியாய்
பெருக்கெடுத்தோடும் பெருநதியாய்

வெடித்துச் சிதறி வழிந்தோடும்
[illegible]

காலைப் பொழுதொன்றில் நீர் தேங்கிய
வயல்களில் விழும் கதிரவனின் கிரணங்களாய்

அலகு கோதும் சிறு பறவையாய்-
அதுவே நொடியில் இராட்சதப் பருந்தாய்,

பல்லக்காய், பவனி வரும் தேராய்,
புகை கக்கி விரையும் தொடரூந்தாய்

பதுங்கும் பூனைக்குட்டிகளாய்,
கரடிப் பொம்மைகளாய் இன்னுமின்னும்
மென் விளையாட்டுப் பொருட்களாய்

மழைநீரின் சொட்டும் திவலைகளாய்
வயல் வரப்புகளில் முளைத்த
காளான் கூட்டங்களாய்

கட்டித்தழுவி உருளும் மல்யுத்த
வீரர்கள் வாற்போரின் விற்பன்னர்களாய்
சில நொடிகளில்

படரும் கொடியாய் . சில நொடிகள்
மரமாய் திரண்டெழும்    மறுநொடி

குளமாய்த் தெரியும் சில நொடி.
அதுவே கூளமாகப் பிரியும் மறுநொடி

வாய் திறந்து சுவாசிக்கும் மீனாய் இருந்து,
காற்றின் கவரியில் மானாய் மாறும் அற்புதம்

நீந்தும் கடல் குதிரையாய்
காட்சியளிக்கும் ஒரு நொடி
அதன் பக்கவாட்டில் சட்டென
முளைக்குமிரு சிறகுகள் மறுநொடி

இப்படி பல உருக் கொண்டலையும் மேகங்கள்
கணத்தில் கூடிக் கலைவதும்  பேரழகே!

## வறுமையும் பசியும்.

பசிக் கொடுமை பொறுக்க முடியாதது
வசிக்க இடமில்லை எனினும் புசித்திடணும்
நிசியிலும் உறக்கம் வராது வருத்திடுமது
ருசியும் அதற்கு ஒரு பொருட்டில்லையே

வறுமையின் முதற்படி பசிப் பிணியே
உறுதியும் உருக் குலையும் அதனாலே
குருதி குறையும் பணமில்லா நிலையாலே
சுருதியும் குறையும் உடலும் தளர்ந்திடுமே

ஒட்டிய வயிறு ஓலமிடும் வறுமையாலே
கட்டிய அரைஞாணும் கீழிறங்கிப் போகுமே
தட்டிய கைகளும் வலுவிழந்து நிற்குமே
பட்டி தொட்டிகளையும் பசியால் தேடுமே

விழிகள் பஞ்சடையும் நிலை குத்திடும்
இழிநிலை பற்றிய கவலையும் ஓடிடும்
கழிவிரக்கம் கண்களிலே நின்று தங்கிடும்
பொழியும் கண்ணீரும் வற்றி நின்றிடுமே

கொடுமை கொடுமை வறுமை நிலைமை
இடுகாடு போவது எப்போதென ஏங்கிடும்
தடுக்க முடியாத தன்னிரக்கம் சூழ்ந்திடும்
படுக்க முடியாது உறக்கமும் வந்திடாதே

உழைப்பு பிழைப்புக்கு உதவாத போது
அழைத்திட கருணை காட்ட யாரிருப்பார்
குழைந்து குனிந்து நின்றாலும் பாரார்
உழைத்து வாழ வழியில்லா நிலையானதே

ஒழுங்கற்ற உடை கிழிசல் பல்லிளிக்கும்
புழுங்கும் மனதின் பற்றற்ற நிலையில்
மழுங்கும் அறிவும் பரிதவிக்கும் பார்வையும்
எழுத இயலா வறுமையின் சித்திரம்

ஏற்பது இகழ்ச்சி என்பதெல்லாம் மறையும்
காற்றிலும் வியர்க்கும் கருத்திலும் தோற்கும்
மாற்றிடும் வல்லமை வேண்டும் பரம்பொருளிடம்
தோற்றிடும் பண்புகள் வறுமையின் முன்னே,

**கவிஞர் புல்லாங்குழலன்**

## தவம்

அன்னையுமில்லை!.
அப்பனுமில்லை!..
அண்டிவாழ ஆத்தாளுமில்லை!.. ஆனால்
அனைவரிடமும் அன்பை பரிமாற..
தவமாய் தவமிருந்து....

உண்ண உணவில்லை!..
உடுக்க உடையில்லை!..
உறைவிட முமில்லை!..
ஆனால்
உலகத்தோடு ஒத்துவாழ..
தவமாய் தவமிருந்து...

குந்த குச்சிவீடும் இல்லை!..
கொழு குத்த நிலமுமில்லை!..
கூறுவாருமில்லை.. ஆனால்
குறிக்கோளுக்காக...
தவமாய் தவமிருந்து...

அனைத்தையும் கற்றுக்கொண்டேன்...
ஆண்டுகள் பல ஆயினும் பணமுமில்லை...
பரிவுகாட்ட ஆளுமில்லை... ஆனால்
லட்சியத்தை நிச்சயமாக்க...
தவமாய் தவமிருந்து...

இல்லறமில்லை!..
நல்லறமாக்க!.. ஆனால்
துறவறத்தை காக்க துணிந்தேன்...
தவமாய் தவமிருந்து...

பார்போற்றும் பரம்பொருளே!..
பல்லுயிரை காக்கும் கடவுளே!...
உன்னுள்ளே உறைய நான்...
தவம்... தவமாய் தவமிருந்து...

புலவர்/முனைவர்,
சி.சிவானந்தம்.
தமிழாசிரியர்,

# சிறுவர் சங்கமம்



# வாங்க விளையாடலாம்

**ஜீ.மைத்ரேயி**
வந்தவாசி

குழலி என்ற பெண் குழந்தை சிலம்பம் சுற்றுவதில், போட்டிகளில் கலந்து கொள்வதில் அதிக விருப்பம் கொண்டு இருந்தாள். ஆனால் அவள் வசித்து வந்த அழகிய கிராமம் தண்டலம்.

தண்டலம் கிராமம் கண்களுக்கு குளிர்ச்சியாகப் பசுமை நிறைந்தவையாக எப்பொழுதும் காணப்படும். மக்கள், குழந்தைகள் அனைவரும் ஒற்றுமையாக இருப்பார்கள்.

குழலி மற்றும் தேன்மொழி இருவரும் மூன்றாம் வகுப்பு முதல் தோழியராக இருந்தனர். இப்பொழுது பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டு இருக்கின்றனர்.

தேன்மொழி பெண் குழந்தைகளுக்கு ஏற்றவாறு வாய்ப்பாட்டு, பரதநாட்டியம் முறையாக கற்றுக் கொண்டிருந்தாள். குழலியும் வாய்ப்பாட்டு, பரதநாட்டியம், மேலும் விளையாட்டு துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டு இருந்தாள்.

குழலி படிப்பிலும் சிறந்து விளங்கினாள். இருந்தாலும் அதிக அளவு ஆர்வம் விளையாட்டுத் துறையில் அவளுக்குத் தோன்றியது. சிலம்பம் சுற்ற தொடங்கினால் நாள் முழுவதும் விளையாடிக் கொண்டே இருப்பாள்.

அவளது சிலம்பக் கம்பை யாராவது தொட்டாலே பெரிய அளவில் கோபப் படுவாள். அவளது தோழி கூட போவாள்,



வருவாள் ஆனால் அவள் விளையாட மாட்டாள். தேன்மொழி, குழலி சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி கோப்பை பெற்றால். அவளை விட பெரும் மகிழ்ச்சி அடைவாள். அதை அனைவரிடம் சொல்லிக் கொண்டே இருப்பாள்.

ஆனால் இந்தச் செயல் அவர்களின் குடும்பத்தில் உள்ள பெற்றோர்களுக்கும், தாத்தாவுக்கும் பிடிக்காது. எப்பொழுதும் திட்டிக் கொண்டே இருப்பார்கள். நமது குடும்பம் பாரம்பரிய குடும்பம். நமக்கு என தனி மரியாதை உள்ளது என சொல்லிக் கொண்டே இருப்பார்கள். எப்பொழுதும் தாத்தாவும், பாட்டியும் நடனமாட வைத்தும். பாட்டு பாடச் சொல்லியும் கேட்டு மகிழ்வார்கள். இவைகளையும் சிறப்பாக செய்தாலும், குழலிக்கு விருப்பமாக வீட்டில் உள்ள மத்து, உலக்கை, கோலாட்டக் குச்சி போன்றவற்றைப் பார்த்தாலே அவளை மறந்த நிலையில் சிலம்பம் சுற்றுவது போல சுற்றிக் கொண்டே இருப்பாள்.

இதைப் பார்த்த தேன்மொழி அம்மா, தேன்மொழி அப்பாவிடம் சொல்லிக் கொண்டே இருந்தார். "நாம் என்னதான் சொல்லிக் கொண்டே இருந்தாலும் பரம்பரை வழக்கம் என்றாலும். இந்தக் குழலி சிலம்பம் சுற்றுவதை விடவில்லை, எங்கே போய் தான் முடியுமோ தெரியவில்லை" என்றார்.

"ஆமாம்... நமக்குப் பிடித்த செயலைச் செய்ய நமக்குத்தான் தைரியம் இல்லை... குழந்தையாவது செய்யட்டும் விடு. தொலைக்காட்சியில் பெண் குழந்தை வெற்றி பெற்றால் பெருமையாகப் பேசும் அப்பாவும், மாமாவும் நம் குழந்தைகள் முன்னேறுவதைத் தடுப்பார்கள். அதுவும் பேரக்குழந்தைகள் அளவுக்கு அதிகமாக பாசம் வைத்திருப்பார்கள். ஆனால் வெளியே காண்பிக்க மாட்டார்கள்'' என்று பேசிக் கொண்டிருக்கும் போது... குழலியின் அப்பாவும் அம்மாவும் வந்தார்கள். ''ஆமாம்... ஆமாம் பெற்ற பிள்ளைகளை விட பேரக் குழந்தைகள் மீது பாசம் அதிகம்" என்று பேசிக்கொண்டே இருக்கும் போது...தேனும் குழலியும் பள்ளி முடிந்து வேகமாக "அப்பா, அம்மா..." என அழைத்துக்கொண்டே வந்தார்கள்.

''என்ன.. என்ன சொல்லுங்கள்...'' அனைவரும் ஒன்றாக மாமரத்தடியில் இருந்தார்கள். "நான்தான் சொல்வேன்... நான்தான் சொல்வேன்" என இருவரும் போட்டி போட்டுக் கொண்டே இருந்தார்கள். ''நீங்கள் இருவருமே சொல்ல வேண்டாம், நான் சொல்கிறேன்" என்று குழந்தையின் அப்பா சொன்னார். "நீங்களா...'' என அனைவரும்

## கால் கொலுசு ஓசையிலே

பெ.வெங்கட லட்சுமி காந்தன்.
விருதுநகர்

குறுநகை புரிந்தே
உள்ளத்தில் உறவானவளே
களிப்பானேன் உனது
காதலால் அன்பே
என்னுள் நிறைந்தே
ஏகாந்தம் போக்கினாயே
பனித்துளியாய் உருகியே
இதயத்தை குளிர்வித்தாயே
விழிகளின் சந்திப்பில்
ஆனந்தம் கொண்டேனே
கன்னக் கதுப்பில்
முத்திரை பதித்திடவா
இதழமுதம் பருகிட
முகம் சிவந்திடுவாயே
உனது கால்
கொலுசு ஓசையிலே
குதூகலம் பிறக்குது
என்னவளே எனதானவளே
வசந்தமும் வந்தது
வாழ்வில் இணைந்ததே

ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்தார்கள்.

''ஆமாம், நான் தான்'' என்றார் குழலியின் அப்பா. ''இப்பொழுதுதான் ஃபோன் வந்தது சிலம்பம் சுற்றுவதில் மாவட்ட அளவில் முதலிடம் பெறுவாள்... கட்டாயமாக குழலியை அழைத்துச் செல்ல வேண்டும். என்றார்கள். எனக்கு மகிழ்ச்சி தான் ஆனால் அப்பாவிடம் யார் சொல்வது எனத் தெரியாமல் யோசித்துக் கொண்டு இருந்தேன்"என்றார் குழலியின் அப்பா.

குழலி "நான் போய் பாட்டியிடம் கேட்கிறேன். பாட்டி தாத்தாவிடம் அனுமதி பெற்றுத் தருவார்'' எனச் சொன்னாள். பாட்டியிடம் சொல்லவும் ''சரி, நீ போய் பயிற்சி எடுத்துக் கொள். அடுத்த வாரம் தானே. நான் தாத்தாவிடம் கூறி அவரை போட்டிக்கு அழைத்துச் செல்ல சொல்லுகிறேன். போதுமா... இதற்குப் போய் என் தங்கம் அழலாமா?" என்றார் பாட்டி.

இப்படியே நான்கு நாட்கள் கழிந்தன. தாத்தா ''மாலை நேரமாகியும் இந்தக் குழந்தைகள் காணவில்லையே... எங்கே?" என்றார். அதற்கு பாட்டி "எப்பொழுதும் வீட்டில் தான் இருப்பார்கள். இங்கே இல்லை என்றால், தேன் வீட்டில் இருப்பார்கள். வேறு என்ன தெரியும் உங்க பேத்திக்கு?" எனச் சொல்லிக்கொண்டே பெண் சாதனையாளர் நிகழ்வுகளை தொலைக்காட்சியில் வைத்து விட்டார் பாட்டி.

"இதைப் பார்த்த தாத்தா, இங்கே பார் நமது பேத்தியும் ஒரு நாள் இப்படிச் சாதித்துக் காட்டுவாள்" எனச் சொன்னார். அதற்கு "முதலில் உங்க பேத்தியை இந்தக் கிராமத்தை விட்டு வெளியே அழைத்துச் செல்லுங்கள்" எனப் பாட்டி தாத்தாவிடம் பேச ஆரம்பித்தார்கள்.

"எனக்குத் தெரியும்" என்ற தாத்தா விடம் ''சும்மா வாய் வார்த்தைக்கு மட்டும் கூறாதீங்க. நமது குடும்ப வழக்கு எனக் கூறிக்கொண்டு முட்டுக்கட்டை போடுவீங்க" என்றார் பாட்டி.

தாத்தா என்ன சொல்வது எனத் தெரியாமல் அமைதியாக இருந்தார். அப்பொழுது குழலி அழுது கொண்டே வந்தாள். தாத்தா ஏன் எனக் கேட்கவும் "மாவட்ட அளவில் சிலம்பம் போட்டி நடக்க இருக்கிறது. நான் கலந்து கொள்ள வேண்டும்" எனக் கூறினாள்.

தாத்தா என்ன சொல்லுவது என தெரியாமல் இருந்தார். உடனே பாட்டி ''உங்க தாத்தாவும், நானும் உன்னை மாவட்ட அளவில் நடக்கும் போட்டிக்கு அழைத்துச் செல்கிறோம்'' என்றார். இதைக் கேட்ட தாத்தா "என்ன... நானா?" என்றார். "ஆமாம் நம் பேரக் குழந்தையின் திறமையை நாம் தான் போற்ற வேண்டும்" என்றார் பாட்டி.

மாவட்ட போட்டியில் சிலம்பம் சுற்றுவதில் முதலிடத்தில் வந்து அனைவரையும் பெருமைப்படுத்தினாள் குழலி. அடுத்ததாக மாநில அளவில் விளையாட தகுதி பெற்றாள்.

அன்று முதல் தாத்தாவும், பாட்டியும் "ஊரில் உள்ள அனைத்து குழந்தைகளும் சாதிக்க வேண்டும். அப்பொழுதுதான் வெற்றியும் தோல்வியும் சமமாக பார்க்கும் குணம் வளரும்" என்று எண்ணினர்.

கிராமத்தில் உள்ள குழந்தைகள் அவர்களுக்குப் பிடித்த விளையாட்டை விளையாட அழைத்தார்கள். அதற்கு என ஒரு விளையாட்டு மைதானத்தை ஏற்படுத்தினார்கள். அனைவரும் விளையாடலாம் வாங்க...

# மண்ணாக மாறிய பொன்!

காணாவூர் நாட்டில் திருடர்களே கிடையாது. ஏனென்றால் அந்த நாட்டு மக்களிடம் பணமே கிடையாது. பணம் இருந்தால்தானே திருடர்கள் திருட முடியும்! அந்த நாட்டு ராஜாவும், மந்திரிகளுமே அந்த வேலையைப் பார்த்துக் கொண்டார்கள். மக்களிடம் இருந்து வரி, வட்டியை வசூல் செய்து நாட்டு கஜானாவைப் பொற் காசுகளால் நிரப்பி விட்டார்கள். ஆனாலும் பேராசை விடவில்லை. மேலும் மேலும் மக்களி டமிருந்து பிடுங்கிக் கொண்டி ருந்தார்கள்.

வீட்டு வரி, வாசல் வரி, சன்னல் வரி, கதவு வரி, உணவு வரி, தோட்ட வரி, காய்கறி வரி, பழங்கள் வரி, உட்காரும் வரி, நிற்கும் வரி, நடை வரி, படுக்கும் வரி, தூங்கும் வரி, இரவு வரி, பகல் வரி என்று ஏராளமான வரிகளைப் போட்டார்கள். அப்புறம் இந்த வரிகள் எல்லாம் தினசரி மாறிக்கொண்டேயிருக்கும். ஒரு நாள் பத்து வெள்ளி குறையும். மக்கள் கொஞ்சம் ஆறுதல் அடைவார்கள். ஆனால், மறுநாள் முப்பது வெள்ளி கூடிவிடும். ஒவ்வொரு நாளும் டி.வி.யைப் பார்த்துவிட்டுத்தான் வேலைக்குப் போவார்கள்.

அரண்மனை கஜானாவில் நிரம்பும் தங்கத்தை ராஜா என்ன செய்வார் தெரியுமா? தங்க இழைகளால் ஆன ஆடைகளில் வைரங்களைப் பதித்துக் காலை, மாலை, இரவு, என்று விதம் விதமாக உடுத்துவார். மக்கள் ஒரிரு கைத்தறி ஆடைகளை தினமும் துவைத்து உடுத்திக்கொண்டிருந்தார்கள். ஆனால், ராஜாவோ ஒரு முறை உடுத்திய உடையைத் திரும்பவும் உடுத்த மாட்டார். மந்திரிகள் உள்ளாடைகளைக்கூடத் தங்கத்தால் போட்டார்கள். அது மட்டுமல்ல. அரண் மனையில் 24 மணிநேரமும் விழாக்கள் நடந்துகொண்டிருந்தன.

இதுக்குத்தான் விழான்னு இல்லை. ராஜா உறங்கி எழுந்ததுக்கு விழா. பல் தேய்ப்பதற்கு விழா. குளித்தால் விழா. சாப்பிட்டால் விழா, பிறந்த நாள் விழா, பள்ளி சென்ற நாள் விழா, படிப்பு முடித்த நாள் விழா, அரண்மனை விழா, அந்தப்புர விழா, என்று கேட்கவே வேண்டாம். எப்போதும் விழாக்கள்தான். இப்படிக் காரணம் இல்லாமல் அரண்மனையில் விழாக்கள் நடத்தி மக்களிடமிருந்து வசூலித்த வரிகளை ஆடம்பரமாய்ச் செலவு செய்தார்.

இவ்வளவு இருந்தும் ஒரு நாள் தோலிருக்கச் சுளைமுழுங்கி ராஜா நகர்வலம் வரும்போது ஒரு வீட்டில் திருமண விழா நடந்துகொண்டிருந்தது. அந்த விழாவுக்கு வந்தவர்கள் மணமக்களுக்குப் பரிசுப் பணம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்த ராஜா இவ்வளவு வரிகளைப் போட்டும் இவ்வளவு பணம் மக்களிடம் இருக்கிறதே என்று பொறாமைப்பட்டார். உடனே மந்திரிப் பிரதானிகளைக் கூப்பிட்டார். இரண்டு பகல், இரண்டு இரவு ஆலோசனை செய்தார். ஏன் தெரியுமா? மக்களிடம் இருக்கும் அத்தனை தங்கம், வெள்ளிக் காசுகளைப் பறிக்க வேண்டும் என்பதற்காக.

கடைசியில் ஒரு மந்திரிதான் புதிய

யோசனையைச் சொன்னார். "பேசாமல் அத்தனை தங்க, வெள்ளிக் காசுகளை அரசு கஜானாவில் கொடுக்கச் சொல்லிருவோம். ஒரு வாரம் கழித்து எல்லோருக்கும் தங்கம், வெள்ளிக்குப் பதிலாகப் பானை, ஓட்டுச்சில்லுகளைக் கொடுத்துருவோம். அதுதான் இனி காசுன்னு சொல்லிருவோம், எப்பூடி?" என்றார்.

இதைக் கேட்ட ராஜாவுக்கு சந்தோஷமாகிவிட்டது. உடனே அதற்கு ஒரு விழா எடுத்துக் கொண்டாடினார். "தங்கம், வெள்ளி, காசுகளைத் தெருவுக்குத் தெரு வைத்திருக்கும் அண்டாக்களில் போட்டுவிட்டு, ஒரு வாரம் கழித்து ஓட்டுச் சில்லுகளை வாங்கிக்கொண்டு போக வேண்டும்" என்று முரசு கொட்டி ஊர் முழுவதும் சொல்லப்பட்டது.

இதைக் கேட்டு மக்கள் அதிர்ச்சி யடைந்தனர். கால் காசு, அரைக் காசு என்று சேர்த்து வைத்திருந்த தங்கம், வெள்ளிக் காசுகளைக் கொண்டுபோய் அண்டாக்களில் போட்டார்கள். அதற்குப் பதிலாக ஒரு வாரம் கழித்து எல்லோருக்கும் ஓட்டுச்சில்லுகள் வழங்கப்பட்டன. சிறுகச் சிறுகச் சேர்த்து வைத்த காசு போகிறதே என்று மக்கள் அழுதார்கள்.

காணாலூர் அருகிலுள்ள காட்டில் குபேர மாளிகை கட்டி வாழ்ந்து வந்த குபேரனின் தேவதைகளுக்கு



மக்களின் அழுகைச் சத்தம் கேட்டது. தேவதைகள் காணாவூர் நாட்டின் மீது பறந்து மக்களின் நிலைமையைப் பார்த்து வருந்தினார்கள். அவர்களுக்குத் தோலிருக்கச் சுளைமுழுங்கி ராஜாவின் மீது கோபம் வந்தது. அவருக்குப் பாடம் கற்பிக்க வேண்டும் என்று நினைத்தார்கள். அரண்மனைக்குப் பறந்து சென்றார்கள். அங்கே ராஜாவும் மந்திரிகளும் தங்க நாணயக் குவியல்களின் மீது படுத்து உருண்டு புரண்டுகொண்டிருந்தார்கள்.

"எல்லாத் தங்கமும் என்னிடம் வந்து விட்டது. நான் தங்கராஜா" என்று சிரித்துக்கொண்டிருந்தார். இதைப் பார்த்த குபேரத் தேவதைகளுக்குக் கோபம் வராமல் இருக்குமா? அவர்கள் தங்களுடைய சேலையிலிருந்து ஒரு நூலை உருவிப்போட்டார்கள். அவ்வளவு தான். அத்தனை தங்கமும் மண்ணாக மாறிவிட்டது. ராஜாவும், மந்திரிகளும் மணல் குவியல்களில் புரண்டு கொண்டிருந்தார்கள்.

அதிர்ச்சி அடைந்த ராஜா எழுந்து அரண்மனைக்குள் ஓடினார்.

அவருடைய சேர்த்து வைத்திருந்த ஆபரணங்களைத் தொட்டார். அவை மண்ணாகிவிட்டது. வயிறு பசிக்கிறது என்று சாப்பாட்டு மேசைக்குப் போனார். உணவைத் தொட்டார். அதுவும் மண்ணாகிவிட்டது. அந்தப்புரத்துக்குப் போனார். ராணியைத் தொட்டார். ராணி மண் சிலையாகிவிட்டார். ஆசையோடு ஓடி வந்த குழந்தையைத் தூக்கினார். குழந்தையும் மண்ணாகிப் பொல பொல வென உதிர்ந்துவிட்டது.

ராஜா ஆசைப்பட்டுத் தொட்டதெல் லாம் மண்ணாகிவிட்டது. மந்திரிகள் தொட்டவை எல்லாம் மண்ணாகி உதிர்ந்தன. எல்லோரும் அழுதுகொண்டே அரண்மனைக்கு ஓடி வந்தனர். அரண்மனை கொலுமண்டபத்தில் ராஜாவும் அழுது கொண்டே சிம்மாசனத்தில் உட்கார்ந்தார். அதுவும் மண்ணாகி உதிரத் தரையில் விழுந்தார். எல்லோரும் தரையில் உட்கார்ந்து ஆலோசித்தனர்.

மக்களிடம் வாங்கிய தங்கம், வெள்ளிக் காசுகளைத் திரும்பக் கொடுக்கச் சொல்லி உடனே ஆணையிட்டார். மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். குபேரத் தேவதைகளும் அரண்மனை மீது உருவிப் போட்ட அவர்களுடைய சேலை நூலைத் திரும்ப எடுத்துக்கொண்டனர். மண்ணானது எல்லாம் மீண்டும் உயிர் பெற்றன.

அதன் பிறகென்ன? காணாவூரில் ஆனந்தம் அலையடித்துக்கொண்டிருந்தது.

**தமிழ் இலக்கியா**

## ஒற்றுமையே பலம்

சின்னச் சிறு வயதிலே
மனசெல்லாம் மகிழ்ச்சியாக பேசியே
நாளும் சேர்ந்து சுவைத்திடவே
ஒற்றுமை நிலைத்திடவே
ஒவ்வொன்றாய் கற்றிட
நம் பலவீனம்
பலமாக மாறியதே



**ஆண்டாள் ரங்கநாயகி**
கோயம்புத்தூர்

# தன்முனையியைபுக் கவிதைகள்!

1, காட்டில் இருக்கும்
அழகிய சோலை
அதனை அழிப்பது தான்
மனிதனின் வேலை

2. மரத்தில் இருக்குது குயில்
மழையில் ஆடுது மயில்
தடதடவென வருகிறது ரயில்
இரண்டும் பறப்பது ஒயில்

3. பள்ளிக்குச் செல்வான்
தினமும் சிறுவன்
படித்துப் பட்டம் பெற்றால்
மட்டுமே உண்மையில் பெரியவன்

4. அம்மா சுடுவார்
சுவையான தோசை
மணி அடிக்காமலே தோன்றும்
வயிற்றில் ஓசை


**ச.கோகிலா,**
எட்டாம் வகுப்பு,
ஊ.ஒ.நடுநிலைப்பள்ளி,
தொட்டணம்பட்டி,
வேடசந்தூர் ஒன்றியம்,
திண்டுக்கல் மாவட்டம்.







**ஸுபீக்ஷா ஜெயாகரன்**
தரம் - 03
கல்மடு, வாழைச்சேனை,
மட்டக்களப்பு, இலங்கை




# சுனாமி தினம்

இயல்பான நாளொன்று
பேரலையாய் வந்து
அலைக்கழித்து சென்றதே
வாழ்ந்த இடத்தின்
தடயங்கள் அழித்து
வரலாற்றில் தடம் பதித்ததே…

பாய்ந்து வந்த கடலலையில்
ஆளுக்கொரு திசையானோம்
உறவுகளைத் தொலைத்து
உடமைகள் இழந்து
வீதிகளில் தஞ்சமானோம்…

திசைகள் மாறிய உறவுகளை
தேடி அலைந்தே களைத்தோம்
உயிரற்ற உடல்கள் கண்டு
கதறி அழுது துடித்தோம்
இறுதி சடங்கு முறைகளின்றி
எங்கோ குழியில் பு(வி)தைத்தோம்…

ஒப்பாரி கூக்குரலும்
ஊரெங்கும் ஒலிக்க
நாவறண்டு மயங்கியே
முகாம்களில் தஞ்சம்
பசியைப் போக்க உணவளித்த
கருணையுள்ள நெஞ்சம்…

இளைப்பாற நிழலுமில்லை
உடைமாற்ற இடமுமில்லை
நிவாரணப் பொருட்கள் மட்டும்
வரிசையாய் வந்து சேர்ந்ததே…

சொல்லி மாளாது
எங்கள் அவலங்கள்
நித்தமும் குமுறல்களின்
மரண ஓலங்கள்…

கூடார வாழ்க்கையிலே
கூடி நாங்கள் வாழ்ந்தோம்
நிச்சயமில்லா நிமிடங்களை
நடைப்பிணமாய் கடந்தோம்…

பூர்வீகம் தொலைத்து
போக்கிடங்களில் வாழ்ந்து
ஆண்டுகள் கடந்தும்
அழியாத துயரில்
பிரளயங்கள் நடுவே
பேரமைதியாய்…

**தா. உமா**
பூம்புகார

## தன்முனையியைபக் கவிதைகள்!

1. நீதிமன்றத்துக்குத் தேவை
   நேரடி சாட்சி
   காலம் காலமாக நடக்கும்
   தர்மத்தின் ஆட்சி

2. நாம் நட்டு நீரூற்ற
   வளரும் பூச்செடி
   யாரும் நீர் ஊற்றாமலே
   பறக்கும் கட்சிக் கொடி

3. காக்கை கட்டுவது
   அழகிய வீடு
   அதைப் பார்த்து
   ஆதிமனிதன் கட்டினான் வீடு

4. அடையாள அட்டை
   எங்களின் ஆதாரம்
   புயல் வெள்ளத்தில்
   அது ஆனது சேதாரம

**வ.ஐஸ்வர்யா,**
எட்டாம் வகுப்பு,
ஊ.ஒ.நடுநிலைப்பள்ளி,
தொட்டணம்பட்டி,
வேடசந்தூர் ஒன்றியம்,
திண்டுக்கல் மாவட்டம்.





**ஆ.ஆத்யா**





ஷ்.அனன்யா,
சத்யா சிறப்பு பள்ளி,
புதுச்சேரி..







**செ.பெரியபாண்டி,**
எட்டாம் வகுப்பு, ஊ.ஒ.நடுநிலைப்பள்ளி,
தொட்டணம்பட்டி, வேடசந்தூர் ஒன்றியம்,
திண்டுக்கல் மாவட்டம்

**நா.தில்ஷன், ஓசூர்**







# அம்மாவின் செயல்

“பாப்பா, கீரை வாங்கலையா பிரஷ்ஷா இருக்கு“ என்றக் குரல் கேட்டு எட்டிப் பார்த்தாள் நித்யா. “கீரை இருக்கே மா. முருங்கை கீரை வச்சிருக்கேன், இன்னைக்கு அதைத்தான் சமைக்க போறேன்” என்று சொன்னாள் .

“இளங்கீரை, வாங்கி பிரிட்ஜில் போடு நாளைக்கு சமைச்சுக்கலாம். குழந்தைகளுக்கு கடைந்து கொடுக்கலாம். நாளைக்கு வரமாட்டேன்டா அதான் இன்னைக்கே கொடுக்கிறேன்” என்றும சொன்னாள் கீரை விற்கும் பொன்னம்மா.

“சரி கொடுங்க” என்று வாங்கி விட்டு மகன் அபினேஷ் அழைத்து “இருபது ரூபாய் எடுத்து வந்து கொடுப்பா ” என்று நித்யா சொல்ல “அப்படியே கொஞ்சம் தண்ணி கொண்டு வரச் சொல்லுமா ” என்று கேட்டு தண்ணீர் வாங்கி குடித்துவிட்டு சென்றாள் பொன்னம்மா.



பொன்னம்மா சென்ற பிறகு அபினேஷ் கேட்டான் “அம்மா வாடி போய் இருக்கு இந்த கீரையை போய் வாங்கி வச்சிருக்கீங்க? உங்களை நல்லா ஏமாத்துறாங்க”

அவன் கேள்விக்கு சிரித்துக் கொண்டே “தெரியுதுப்பா எல்லா கீரையும் வித்திட்டு கடைசியா விக்காத கீரையைத் தான் நமக்கு கொடுக்கிறாங்க. இருந்தாலும் பாவம், வயசான காலத்துல பசங்க தனியா விட்டுட்டாங்க. அவங்களே கீரை வித்து உழைத்து சம்பாதிக்கிறாங்க. ஏதோ நம்மால் ஆன உதவி” அப்படின்னு சொல்லிட்டு இருக்கும்போதே வாசலில் மாடு சத்தம் கேட்டது.

“மாடு நிக்குது பாரு, இந்த கீரையை கொடுத்துட்டு வா அப்புறம் பொன்னம்மா போய்ட்டாங்களான்னு பார்த்துட்டு கொடு” என்று அம்மா சொன்னதைக் கேட்டு வாசலில் நின்ற மாட்டிற்கு கீரையைக் கொடுத்துவிட்டு வந்தான்.

“கீரையும் நல்லா இல்ல வாடிப் போய் இருக்கு அதை காசு கொடுத்து வாங்கினீங்க. அதோட இல்லாம அதை மாட்டுக்கு சாப்பிட போடச் சொல்றீங்க இருபது ரூபாய் தண்ட செலவு. ஏம்மா இப்படி பண்றீங்க? உங்களை புரிஞ்சுக்கவே முடியல”

“எத்தனையோ நாள் காய் கறிகள் கீரையெல்லாம் வாங்கி ஃப்ரிட்ஜில் வைத்து வீணாய் போய் தூக்கி எறிகிறோம். இது அப்படி இல்ல வாடிப் போன கீரையை வாங்கி மாட்டுக்கு கொடுக்கிறோம். இதனால அந்த அம்மாவுக்கும் வருமானம் ஒரு மாட்டுக்கும் உணவு” என்று சொல்லி விட்டு சமையல் வேலையை பார்க்க சென்றாள் நித்யா .

அம்மாவின் செயலை புரிந்து கொள்ள முடியாமல் வாசலை பார்த்துக் கொண்டிருந்தான். வாசலில் போட்ட கீரையை ஒன்று கூட விடாமல் சாப்பிட்டு சென்ற மாட்டை பார்த்ததும் அம்மா சொன்னதின் அர்த்தம் புரிந்தது.

**ஜனனி குமார்**
நாகப்பட்டினம்

# எதற்கு எடை அதிகம்?

பணத்திற்கு கனம் அதிகமென அதன் பின்னால் ஓடியே பணமதை சேர்த்திட ஓடாய்த் தேய்ந்து உழைக்கின்றோம் நாம். பணமுள்ளவனின் வெளித்தோற்றம் கண்டு, அவனிடம் இருக்கும் ஆடம்பரப் பொருட்களைப் பார்த்து ஆசை கொண்டு ஏங்கிக் கிடக்கின்றன நம் மனங்கள். அவனைப் போலே அத்தனை வசதிகள் பெற்று சொகுசாய் வாழ்ந்திட வேண்டுமென எண்ணி எண்ணியே அழுத்தத்தைக் கொடுத்துக்கொண்டே தேங்கியே கிடக்கின்றோம்.

பணமுள்ளவனின் ஆடம்பரத்தை மட்டுமே பார்த்திடும் கண்களோ அவர்களது குணங்களைப் பார்க்கவோ, அவர்களது நடத்தைக் கோலங்களைப் பார்க்கவோ முற்படுவதே இல்லை என்பது தானே மறுபக்க நிதர்சனம். பணம் என்பது நம் வாழும் வாழ்க்கைக்குத் தேவையான ஒன்று தான். அதனை நாம் யாருமே மறுத்திட முடியாது. பணமென்பது பெருகினாலுமே ஒரு கட்டத்தின் பின் அதனைப் பெருக்கத் தெரியாது போகும் போது அது அழிந்துவிடும் ஆனால் நம் குணங்களோ, அது நல்ல குணங்களென்றாலும் சரி, கெட்ட குணங்களென்றாலும் சரி நாம் இறந்த பின்னும் நாம் இப்படிப்பட்டவர்கள், அப்படிப்பட்டவர்களென எம் குணத்தினை வைத்து எடை போட்டுக் கதைப்பதோ அழியாது என்பதும் உண்மை தானே?

பணத்தின் கனத்தினை விட நம் நடத்தைகளுக்கும் குணங்களுக்கும் தான் கனம் அதிகம். பணமும் நல்ல குணங்களும் சேரும் போது அம் மனிதர்கள் மீதான நல் அபிப்பிராயங்களோ பல்கிப் பெருகிவிடுகின்றன. அதே போல் பணம் இருந்து நல் குணங்ககளோ இல்லாது காணப் படும் போது அவர்கள் மீதான கண்ணோட்டம் கீழிறங்கி விடுகின்றன அல்லவா?. வெளித் தோற்றத்தின் ஆடம்பரங்களிலே நம் விழிகளை செலுத்தி ஆராய்வதனை விட அவர்களின் பண்புகள், குணங்கள், நடத்தைகள், அவர்களது உயரத்தினை தொட்டிட எடுத்த அவர்களின் முயற்சிகள் போன்ற விழிகளுக்கு வெளிப் படையாய் புலப்படாத விடயங்கள் தொடர்பாக நம் கவனங்களை செலுத்தி நம்மை நாம் நல்ல முறையிலே வளப்படுத்திக்கொள்ள வேண்டும். கனமதிகமென வெளிப் பார்வைக்குத் தோன்றும் பணத்தினை சேர்த்திட ஓடாய்த் தேய்ந்து மாய்வதை விட கனமதிகமான குணங்களிலே கவனங்களை செலுத்துவது நன்றல்லவா?

**அறூபா அஹ்லா**
கல்முனை - இலங்கை

## ஆசைத்தீர பேசி அன்பாக வாழ்வோம்!

அரும்பு மீசைக்கார மச்சானே மயக்குறியே
ஆசையாச்சு ஒம்மேல மனசும் கேட்குதே
மகிழம்பூ வாசம்ஒம்மேல வீசிடுதே
ஒன்னோட குணம் எனக்கு பிடிச்சிருக்கு

சிரிச்சிப் பேசியே சின்னவளைக் கவர்ந்தாயே
காளை அடக்கி வீரம் காட்டினமச்சானே
வட்டக்கல்தூக்கி சாதனை செய்தாயே
தக்காளிச் சிவப்பழகியாய் நானிருக்கிறேனே

அரவணைத்து அணைச்சிடத்தான் துடிக்கிறியே
கன்னிப்பொண்ணு நெஞ்சுக்குள்ளநீயிருக்கிறாய்
ஒம்மனசு புரியுதய்யா பரிசம் போடவருவாயா
தங்கம் வைரம் வெள்ளிபாத்திரமும் தருவாயா

நல்லநாளும் பார்க்கலாமே ஊரைஅழைக்கலாமே
கெட்டிமேளம் கொட்ட கல்யாணமும்செய்துக்கலாம்
ஊருசனம் சொந்தபந்தம்நட்பும் திரட்டிடலாம்
ஆசதீரப் பேசித்தான்அன்பாகவே வாழ்ந்திடலாம்...

## ஒத்தைக் கல்லு மூக்குத்தி ஒளிருதே !

கன்னிப்பெண்ணில்தொடங்கும் மூக்குத்தி
பேரிளம் பெண்கள் வரையில் அணிகிறார்கள்
மூக்குத்திப் போடுவது நலம்வளமுமே தரும்
தங்கம் வெள்ளி ப்ளா ட்டினம் உலோகங்களாகும்.

முகத்துக்கு தனிஅழகும் கூடிடவே செய்யும்
புதுப்பாணியில் கவரிங் மூக்குத்தியும் உண்டு
மூக்குத்தி அணிவது சம்பிரதாயமானதுஇங்கு
வைரத்தில் ஒரு கல் மூக்குத்தி அணிவதுமுண்டு.

இந்தியப்பெண்கள் அனைவரும்விரும்புவதுண்டு
குறைந்தவிலை செயற்கை ரகத்திலுமுண்டு
இளசுகளும் வாங்கி அணிவது வழக்கமாகும்
திருமணத்தில் மணமகள்மூக்கில் மிளிர்கிறது.

வாழ்வினில் வசந்தம் தேடி வரச்செய்வோம்
சாஸ்திரச் சம்பிரதாயங்களைபின்பற்றிடுவோம்
பொலிவுடன் தோற்றமளிப்பது இன்றையபெண்கள்
சுமங்கலித்தோற்றம் பெற மூக்குத்தி அணியலாம் .

# துளிப்பாக்கள்

கவிஞர் இரா.சீ.பாலகுமார் M. A .

தூங்கிடும் குழந்தை
மின் வெட்டு திடிரென வந்ததால்
கண்விழித்தது .

பலூன் காரன்
பெரிசாக ஊதிகையில் தருகிறான்
சிறுவனின்மகிழ்ச்சி .

யாருமில்லாதவீடு
சுவற்றில் இரண்டு பல்லிகளும் சந்திப்பு
இரைத் தேடல் .

மாமியார் வீடு
நின்றபடியே உணவுப் பரிமாறுகிறாள்
மாமனார் மகிழ்ச்சி .

நூறு சவரன்
தங்கத்துடன் புது மருமகள்வந்தாள்
மாமியார் வரவேற்கிறாள் .

பக்கத்து வீட்டில்
மணக்கும் கோழிக்குழம்பு வாசனை.
புழக்கடையில் கோழியில்லை

கோலம் முதல்
கட்டுசாதம் வரையில் சேவை
தரகர்பணியானது.

கோழிக்கறி
வாங்கிவீட்டிற்குத் திரும்புகிறேன்
தொடர்ந்திடும்நாய்கள் .

மீன் சுத்தம்
எதிரில் உட்கார்ந்து வேடிக்கை
பார்க்கும் பூனைகள் .

திருடன்போட்டான்
ஆட்டுக்கறி தொடைப் பகுதி
தின்றபடிகாவல் நாய் .

# சூழலும் அகதிகள்

வீரர்களை சிறையிலடைத்தார்கள்
தேசத்திற்காய் உழைத்ததற்காய்
நாங்கள் ஆட்டு மந்தைகளைப்போல்
தரங்கபாடி,நாகூர் கடற்கரையில் தலைமூழ்கி
பாலைவன பிரதேசத்தில் பரதேசியாக
கோட்டு சூட்டோடு குடும்பத்தலைவனென்ற
போலி முகாந்திரத்தோடு
கக்கூஸ் தான் கழுவுகிறோமென சொல்லமாட்டோம்
அதற்குமேலும் உள்ளது தெரிந்துக்கொள்வீர்கள்
அறைக்குள் அடைந்தப்பின்
வரண்ட குப்பூஸீம் ஊறுக்காய் இருந்தாலே மோட்சம்
பித்துப்பிடித்தவனைப்போல் கண்டபடத்தைப்பார்த்துவிட்டு
ஓடி ஒளிய இடமில்லாமல் பலவந்தமாய் கற்பழிப்பதுப்போல்
பூர்வீக பழைய நட்பூக்களுக்கு தேவையில்லாததை நிறையப்பேசி
வசிக்கின்ற பகுதி வெட்டவெளி பொட்டலென்றாலும்
கடற்கரையோரம் அழகிய செல்பி எடுத்து
புருஜ் கலீஃபா அருகில் புத்தாண்டு கொண்டாடி
அழகு சாதன சொற்களை மனனமிட்டதுப்போல்
பெருநாள் தோறும் ஒப்பித்து
இல்லாதது ஒன்று இருக்கென அவர்களும் நம்பி
மனைவியிடம் கைவலி மூச்சுப்பிடிப்பு
மேலோட்டமாய் சொல்லி
நரைத்தப்பின் ஆயுளை உறிஞ்சி
அணுக்கள் நீர்த்தப்பின்
துரத்தியடிக்கும் அரேபிய தீபகற்பம்
வந்தடைந்த ரெண்டே நாளில்
நீங்க என்னத்த செய்து கிழித்தீர்களென
வசை மாரி மூளைநரம்புகளில் ஊசலாடிக்கொண்டிருக்க
அடுத்த லக்கேஜ் பேக்கிங்
செய்யப்பட்டிருக்கும் மகனாக

- த.இர்ஃபான்

# எளிமை

எளிமையான வாழ்க்கை என்பது எளிதானதும் இல்லை. கடினமானதும் இல்லை. எளிமையை வாழ்வியல் பண்பு என்று அறிந்துள்ளோம். எளிமை பல வழிகளில் தன் தரவுகளைத் தருகிறது.

பொருள் எளிமை, நடத்தையில் எளிமை, செயல் எளிமை, உணவில் எளிமை,

மொழியில் எளிமை என பல வகைபாடு களைக் கொண்டுள்ளது. ‘எளிமை என்றால் ஏழ்மை என்றோ, எளிய வாழ்க்கை யென்றோ பொருள் கொண்டு இருப்பதை அறிய முடிகிறது.‘ எளிமை என்றால் எது தேவையோ எதற்குத் தேவையோ எப்படித் தேவையோ அப்படி வாழ்வது என்றே பொருள் கொள்ள வேண்டும். ஆடம்பரம், அத்தியாவசியம் இவைகளுக்குரிய புரிதல் வேண்டும். ஒருவரிடம் காசு பணம் அளவுக்கும் அதிகமாகவே இருக்க லாம். அவர் தங்கத் தட்டிலோ வெள்ளித் தட்டிலோ உண்ண முடியும் என்ற நிலையிருந்தாலும் சாதாரணமாக. அவர் எல்லோரையும் போல் உண்ணுவதை விரும்புகிறார் என்றால் அவர் எளிமையை விரும்புகிறார் என்றே அர்த்தம். செல்வ பகட்டைக் காண்பிக்க வில்லை.



எளிமையாக பழகக்கூடிய இயல்பு ஏற்றம் தரும் நடத்தை, உடலை மறைக்கவே ஆடை, என்ற கோட்பாடு இவைகளோடு வாழ்பவரை நடத்தையில் எளிமையானவர் என்று பார்க்கின்றோம். தான் பெரியவன், செல்வந்தன், அதிகம் படித்தவன், பெரிய பதவியில் இருப்பவன் என்ற பகட்டு இல்லாமல்

மனிதனை மனிதனாகப் பார்க்கும் இந்த நிலைதான் மனிதத்தைப் போற்றும் எளிமையான நிலையாகும். தன்னைக் கண்டு யாரும் வெறுக்காமல், ஒதுக்காமல், பயப்படாமல் மரியாதையோடு அனைவ ருக்கும் ஏற்ற வகையில் இணைந்து இசைந்து வாழ்வதே எளிமையாகும். எளிமை சொல்லும் பாடமும் இதுவே ஆகும்.

ஒருசெயலைசெய்யவேண்டுமென்றால் அதற்கான திட்டமிடலும், அந்த செயலின் நம்பகத் தன்மை குறித்த தகவலும், எளிமையாக மற்றவர்களுக்கு தெரிய வேண்டும். அப்படியான நடைமுறைதான் எளிமை.

பசிக்காகத்தான் உணவு. காசு பணம் கொட்டிக் கிடந்தாலும் நாவின் சுவைக்கு அடிமையாகாமல் உடலின் நலனை கணக்கில் வைத்து தேவையானதை, தேவையான நேரத்தில், திட்டமிட்டு உண்ணுதலும், எளிமை காட்டும் வழிதான். கணினியில் அல்லது அலைபேசியில் விருப்ப உணவை பட்டியலிட்டு வெளியிலிருந்து வாங்கி உண்பது எளிமையல்ல. என்பதை உணர வேண்டும். தேவையெதுவோ அதில் கவனம் வேண்டும். உழைத்தவனுக்கு பசி அதிகமிருக்கும். பசியுள்ளவனுக்கு வயிறு நிறைய வேண்டுமே தவிர, சுவை பற்றிய கவலையில்லை. இதற்காக உண்ணும் உணவில் சுவை இல்லை என்று பொருளில்லை. வீட்டு உணவை எளிமை பொருளாக்குகிறது. காரணம் உடல்நலன் காக்கப்பட வேண்டும் என்ற உணர்வு எளிமைக்குள் ஒளிந்துள்ளது.

மொழியில் எளிமையை தான் உணர்தலும் மற்றவர்களுக்கு உணர்த்து தலும் அவசியம். யாரால் காரியம் ஆக வேண்டுமோ, யாருக்கு உன் தகவல்கள் தெரிய வேண்டுமோ, அதற்கேற்ப மொழியிருப்பதே மொழியில் எளிமை




ஆகும். உனக்கு பத்து மொழிகள் தெரிந்திருக்கலாம். ஆனால் உன்னிடம் வேலை செய்பவனுக்கு எந்த மொழி தெரியுமோ அதில் பேசினால் தான் வேலை சரியாக நடக்கும். இதன் எதிரொலியாகத்தான் மொழித்திணிப்பு பற்றி பேசுகின்றோம். தேவையான ஒன்றை தெரிந்து கொண்டு தேவைக் கேற்ப உரையாடுவது மொழியில் எளிமை ஆகும். ஆக எளிமை என்பது ஏழ்மையல்ல. புரிந்து கொள்ள வேண்டும்.

நோயில்லா உடம்பு, நிறைவான மனது, ஆடம்பரம் இல்லாத வாழ்க்கை அவசிய மானதாகும். புரிதல் எளிமையின் முக்கியமான பண்பாகும். புரிதல் இல்லா விட்டால் செயலும் இல்லை, நட்பும் இல்லை, உறவும் இல்லை. புரிதல் தான் வாழ்க்கை. மகிழ்வு என்பது மனம் தொடர்பானது. உனக்குத் தேவை யானதை நீ அடைந்தால் மகிழ்வு உண்டாகும். கல்வியாகட்டும், திருமணம் ஆகட்டும், வியாபாரம் ஆகட்டும் சுய தேவையே முக்கியம். அடுத்தவர் மதிக்க வேண்டும் என்பதற்காக எதையும் யார் மீதும் திணிக்கக் கூடாது என்பது எளிமை உணர்த்தும் பாடமாகும். மற்றவர்களைப்

பார்த்து பொறாமைப்படக் கூடாது.

மனதை அலைய விட்டால் அது போதும் என்று எப்போதும் சொல்வது கிடையாது. தேவையான பொருட்களை வாங்கலாம் தவறில்லை. தேவையில்லாததை யெல்லாம் வாங்கி ஓரிரு நாட்கள் மட்டுமே உபயோகித்து பின் அதனை வீட்டின் மூலையில் வைத்து வீட்டைக் குப்பை மேடாக்குவது எளிமை இல்லை. அடுத்தவனைப் பார்த்ததால் வந்த வினையிது. பார்க்கின்ற எல்லாவற்றையும் வாங்கி அதை வைப்பதற்கு வீட்டின் மொத்தத்தையும் ஒதுக்கி விட்டால் தெருவில்தான் நிற்க வேண்டும்.

தவணையில் எல்லாப் பொருட்களும் கிடைக்கிறதே என்று பகட்டுக்கு வீடு, வாகனம், பொருள், என வாங்கி குவித்துவிட்டு மாதத் தவணைக்கு ஊதியம் முழுவதையும் கொடுத்து விட்டு கடன் அட்டையில் குடும்பம் நடத்துவது எளிமையாகாது. நவீனம் என்பது இனிப்புக்கு உள்ளிருக்கும் ஆபத்து என உணர வேண்டும். உன்னை கடனாக்கும் வரை தேனொழுகப் பேசுவார்கள். ஒரு தவணை கட்டாது இருந்துபார். கடினமான வாய்கூசும் வார்த்தைகள் வரும். 'எளிமை சொல்வதெல்லாம் எதையும் வாங்காதே என்றல்ல. சேமித்து அதில் வாங்கு. தவணைக்கு வாங்கி தலை குனியாதே என்றுதான்'. கார் பங்களா மற்றும் இதரப் பொருட்களைப் பார்க்கும் மற்றவர்களின் கண்களுக்கு உன் மன வலியைப் பார்க்க முடியாது என்று உணரவேண்டும்.

தேவைகள் எதுவாயினும் ஒன்றுக்கு பல முறை அது தேவையா அது இல்லாமல் இருக்க வழியில்லையா, காசு வரும் வரை தள்ளிப் போட முடியாதா என்றெல்லாம் எளிமை கேள்வி கேட்கும். பொன்னிலும் பூமியிலும் போடும் காசைத் தவிர மற்றவையெல்லாமும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் ஒன்றுமே இல்லாதது தான். இதைத்தான் எளிமை கோடிட்டுக் காட்டுகிறது. பட்டினி கிட என்றோ, பரதேசியாய் திரியென்றோ, எளிமை எப்போதும் பொருள் சொல்ல வில்லை. எது அவசியமோ அதைச் செய்து கொள் என்பதில் என்ன தவறு.

எளிமையை பின்பற்றுவது மிகக் கடினம் இல்லை. பெரியவர்களுக்கு மட்டும் இல்லாமல் குழந்தைகளுக்கு எளிமையை விளக்க வேண்டும். விரும்பும் படிப்பை தொடர அனுமதிக்க வேண்டும். வேறு வழியே இல்லை என்ற அளவில் பொருட்களை வாங்க வேண்டும். நல்லதோர் நட்பில் நிலைக்க வேண்டும். நல்லதையே எண்ண வேண்டும். மனம் நிறைவாக தேவையான பயிற்சி கொள்ள வேண்டும். வாசிப்பதற்கும் விசாரிப்பதற்கும் நேரம் ஒதுக்க வேண்டும். அனுபவத்தில் யார் எதைச் சொன்னாலும் புறந்தள்ளாமல் அதை ஒன்றுக்கு இரண்டு முறை யோசித்து நல்லதாகப் பட்டால் நம்பிக்கையோடு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

எளிமைக்கு உதாரணமாய் இருப்பவர்களை போற்றிட வேண்டும். எளிமை என்பது உன்னை கடனாளி யாக்காது. தலை நிமிர்ந்து நடக்கலாம். வாழ்க்கையை வென்றெடுக்க வேண்டுமானால் எளிமையாய் நீ வாழ வேண்டும்.

**இதயமலர்**
மேற்கு தாம்பரம்
சென்னை 45



# அண்ணாமலைக்கு அரோஹரா

**மைதிலி சம்பத்**, செகந்திராபாத்

நம் நாட்டில் மிக முக்கியமான சிவஸ்தலங்களில் ஒன்று திருவண்ணாமலை. இது தமிழ்நாட்டில் அமைந்துள்ளது. மிகப்பெரிய கோவில். இங்குள்ள மலைக்கு திருவண்ணாமலைஎன்றுபெயர்.கடவுளின் பெயர் அருணாசலேஸ்வரர் மற்றும் அண்ணாமலையார். அம்மனின் பெயர் அபீத குசாம்பாள் மற்றும் உண்ணாமுலை அம்மன். அண்ணாமலை என்றால் நெருங்க முடியாத பெரியவன் என்று அர்த்தம். அரோகரா என்றால் குனிந்து வணக்கம் செலுத்துவது. முருகனை விளிக்கும் சொல்லும் கூட. எனவே தான் பக்தர்கள் அண்ணாமலைக்கு அரோகரா என்று சொல்கிறார்கள். பிள்ளையார், முருகன் என்று இரண்டு குழந்தைகள் இருந்தாலும் பார்வதி தேவி தன் முலைப்பால் கொடுத்து வளர்க்கவில்லை என்பதால் இந்தப் பெயர். திருவண்ணாமலை ஷேத்திரம் நினைத்தாலே முக்தி தரக்கூடியது.

அந்த மலை 260 கோடி வருடங்கள் முன்னால் ஏற்பட்டது என்று புவியியலாளர்கள் கணக்கிடுகிறார்கள். 2668 அடி உயரம் கொண்ட இந்த மலை கிருத யுகத்தில் அக்னி மலையாகவும், திரேதா யுகத்தில் மாணிக்க மலையாகவும், த்வாபர யுகத்தில் பொன்மலையாகவும், இப்பொழுது கலி யுகத்தில் கல் மலையாகவும் விளங்குகிறது என்பது ஐதீகம்.

கோவில் கட்டப்பட்டு 12 நூற்றாண்டுகளுக்கு மேல் இருக்கும். இந்த கோவில் 24 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ளது. ஆறு பிரகாரங்களும், ஒன்பது ராஜகோபுரங்களும், 142 சன்னிதிகளும், 36 மண்டபங்களும், ஆயிரங்கால் மண்டபமும், பாதாள லிங்கமும், நூற்றுக்கணக்கான கல்வெட்டுகளும் கொண்டது. இங்கு பிரசித்தமானவை கோவிலின் பிரம்மாண்டம், கார்த்திகை தீபம், கிரிவலம், மற்றும் ரமண மகரிஷியின் ஆஸ்ரமம். இந்த ஸ்தலம் அக்னி ஸ்தலம். எனவே செவ்வாயில் பூஜை செய்வது மிகவும் விசேஷம். 51 சக்தி பீடங்களில் இதுவும் ஒன்று. சைவ சமயக்குரவர் நால்வரும் இந்த ஈசனை பாடியுள்ளார்கள். இந்த கோவிலில் ஆறு கால, பஞ்ச பருவ



பூசைகள் நடைபெறுகின்றது. வருடத்திற்கு நான்கு நாட்கள் பிள்ளையாருக்கு செந்தூரம் பூசப்படுகிறது. இந்த கோவிலில் மட்டும் நான்கு பிரம்மோற்சவங்கள் நடைபெறுகின்றன. இந்த கோவிலின் தீர்த்தம் சிவகங்கை தீர்த்தம், பிரம்ம தீர்த்தம். தல விருட்சம் மகிழ மரம்.

பார்வதி தேவி தவமிருந்து சிவனின் இடப்பாகத்தை விரும்பிப் பெற்ற ஸ்தலம் இது. சுயம்புலிங்கத் திருமேனி, நாககிரீடம், வெண்ணிற ஆடை ஆகியவை அர்த்தநாரீஸ்வரருக்கு விசேஷமாகச் சொல்லப்படுகிறது.

ராஜகோபுரம் கிருஷ்ணதேவராயர் காலத்தில் கட்டப்பட்டது. ராஜ ராஜ சோழன் கட்டிய தஞ்சை பெரிய கோவிலை விட ஒரு அடி பெரியதாக கட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் 217 அடி உயரமாகக் கட்டப்பட்ட கோபுரம் அது. இந்தக் கோவிலுக்கு ஹொய்சல, பல்லவ, சோழ மன்னர்களும் திருப்பணி செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு கோபுரத்தை பற்றியும் பல சுவையான செய்திகள் உள்ளன. ராஜ கோபுரத்தின் பக்க சுவர்களில் 108 நடன நிலைகள் மிக அழகாக செதுக்கப்பட்டுள்ளன. திருப்புகழ் இயற்றிய அருணகிரிநாதர் கிளி வடிவில் வசித்த கோபுரம் கிளி கோபுரம் என்று வழங்கப்படுகிறது. வல்லாள மன்னர் இந்த அருணாசலேஸ்வரர் மீது மிகுந்த பக்தி கொண்டு ‘தனக்கு குழந்தை



இல்லையே, நாளை தனக்கு யார் திதி கொடுப்பார்கள்? என்று வருந்திய போது, ஈசன் “நான் இருக்கிறேன் உனக்கு” என்று சொன்னாராம். அதனால், இன்றைக்கும் வல்லாள மகாராஜாவின் திதி அன்று சுவாமியே அங்கு சென்று சென்று திதி கொடுக்கிறார்.

அம்மிணி கோபுரம் என்பது ஒரு பெண் சித்தர் கட்டிய கோபுரம். கட்ட ஆரம்பித்து முழுவதும் கட்ட பொருள் இன்றி சுவாமியை வேண்டினாராம். அப்போது சுவாமி “நீ கூலியாட்கள் அனைவருக்கும் விபூதியை கூலியாக கொடு. மற்றவற்றை நான் பார்த்துக் கொள்கிறேன்” என்றாராம். ஆட்கள் விபூதியை எடுத்துக் கொண்டு போய் வீட்டில் சென்று பார்த்தால், அனைவருக்கும் சேர வேண்டிய பணம். இருந்ததாம். அதே போலவே முழு கோபுரத்தையும் கட்டி முடித்ததால் அந்த கோபுரத்திற்கு “அம்மிணி கோபுரம்” என்று பெயர்.

பஞ்சபூத ஸ்தலங்களில் இது அக்னி ஸ்தலம். ஆகையால் இங்கு கார்த்திகை தீபம் விசேஷமாக கொண்டாடப்படுகிறது. 7 அடி உயர செப்புக் கொப்பரையில், மூன்று டன் பசு நெய் விட்டு, ஆயிரம் மீட்டர் காடா துணி போட்டு, 2 கிலோ கற்பூரத்துடன் கார்த்திகை விளக்கு ஏற்றப்படுகிறது. 30 கிலோமீட்டர் தூரம் வரை இந்த தீபத்தின் ஒளி தெரியும். இந்த தீபத்தை ஏற்றுவதற்கு என்று ஒரு சிறப்பான முறை வைத்திருக்கிறார்கள். தீப தரிசன மண்டபத்தில் தேரோட்டத்திற்கு பின்னால் பஞ்சமூர்த்திகள் எழுந்தருளுகிறார்கள். இவற்றில் துர்க்கையின் தேர் பெண்களால் மட்டுமே இழுத்து வரப்படும். அதன் பிறகு அர்த்தநாரீஸ்வரர் முன் தீபம் ஏற்றப்பட்டு அதிலிருந்து ஐந்து தீபங்கள் ஏற்றப்பட்டு, மீண்டும் அதை ஒரு தீபமாக்கி மலை மேல் தீபம்



ஏற்றுவதற்கு சைகை செய்கிறார்கள். ஏகன், அனேகன் என்ற தத்துவம் அன்றுதான் விளக்கப்படுகிறது. அர்த்தநாரீஸ்வரர் அன்று மட்டும்தான் பக்தர்களுக்கு தரிசனம் தருவார். கரும்புத் தொட்டில் வழிபாடும் உண்டு. இங்கு ஆடிப்பூரத்தில் தீமிதி திருவிழாவும், இன்னும் காமதகனமும் நடக்கும்.

கிரிவலப் பாதையை, 1240 ல் ஜடாவர்மா விக்ரம பாண்டியன் திருப்பணி செய்தான். கிரிவலம் வரும் பாதையில் இந்திர, அக்னி, எம, நிறுதி, வாயு, குபேர, ஈசான லிங்கங்கள் உள்ளன. பௌர்ணமியில் கிரிவலம் செய்வதுதான் மிகவும் சிறப்பு கிரிவலத்தில் மாணிக்கவாசகர் சமாதியை காணலாம். இங்கு இப்பொழுதும் சித்தர்கள் நடமாடுவதாகவும் ஒரு சிலர் கண்களுக்குத் தெரிவதாகவும் சொல்கிறார்கள்.

இத்தலம் பற்றிய நூல்கள் அருணாசல அஷ்டகம், திருஅருமை கலம்பகம், அருணாசல அட்சர மாலை ஆகியவையும் இன்னும் பலவும். இங்கு ரமணர் செய்த அற்புதங்கள், விளக்கிய தத்துவங்கள் ஏராளம். சேஷாத்ரி சுவாமிகள், விசிறி சுவாமிகள் ஆகியோரும் கூட இங்கிருந்து தான் ஆன்மிக உண்மைகளை எடுத்துச்சொன்னார்கள்.

இந்த மலைக்கு காந்த மலை, சோணாசலம் என்ற பெயர்களும் உண்டு.

## இறைவனின் எச்சரிக்கை

நெகிழியால் நிலமதை
நிதம் சிதைக்கிறாய்
நெகிழாத உன்மனம்
நீரையும் வதைக்கிறாய்
தூய்மையில்லாக் குணம்
தூயக்காற்றைக் கெடுக்கிறாய்
தூயவான் படலத்தின்
தன்மை மாற்றுகிறாய்

வரங்கள் தருகின்ற
விருட்சங்கள் வெட்டினாய்
அறமின்றி வானாளவ
அடுக்குமாடி கட்டினாய்
நீருக்கான இடங்களை
நிர்மூல மாக்கினாய்
ஊருக்கான இடமாக்கி
எங்கும் வீடாக்கினாய்

இயற்கையை அழித்து
செயற்கையோடு வாழ்கிறாய்
செயற்கையின் விடத்தால்
செயலிழந்து வீழ்கிறாய்
கடுகளவும் மாறாது
கனியாத உன்னுள்ளம்
தொடரும் நிலையானால்
தாளாத பெருவெள்ளம்

அதிர்கின்ற புவியாலே
உதிர்வது உயிராகும்
சதிராடி வந்திடும்
சண்ட மாருதம்தானே
ஐம்பூதம் எல்லாம்
ஆவேசமானால் உன்கதி?
இதுதான் உனக்கான
இறுதி எச்சரிக்கை

**செ. இலட்சுமணக்குமார்**
ஈரோடு

# சிநேகம்

அவ்வளவு சீக்கிரத்தில் கழட்டி வைக்க முடியுமா
சிநேகத்தின் நூல்களை இழுத்து இனணத்து கட்டப்பட்ட தாம்பு  கயிறல்ல
மனதின் மடியில் கட்டிய மெல்லிய தந்தி அது

காத்திருத்தல்  துன்பம் மகிழ்ச்சி ஆவல் என
மெல்லிய உணர்வுகளை மெல்ல நூற்று  நுண்ணியஇழைகளை
நினைவுகளால் பிணைத்து நெசவு செய்து பின்னிய பாசத்தின் ஆடை
அதை ஒரே மூச்சில் கிழித்து எறிய முடியுமா

ஒரு பார்வையோ ஒரு சிரிப்போ நெஞ்சில் நீங்கா நினைவாய்
இடம் பிடித்து வேரூன்றி விட்ட போது அது வேலியாகிறது.
சினேகத்தின் நூல் ஒரு அடர்ந்த வலைப்பின்னல்போல
இதயத்தின் அருகில் இடம் பிடிக்கையில் அதன் நெருக்கத்தை
நம்மை அறியாமலே சுமந்து செல்கிறோம்.

ஒன்றாக கடந்து வந்த பாதைகள் புரிந்துகொண்ட கணங்கள்
பகிர்ந்து கொண்ட சிரிப்புகள்
அடக்கி வைத்த கண்ணீர்துளிகள்
அசைபோடும் நிகழ்வுகள்
ஓர் அழியாத சுவடாக
நினைவுகளில் ஒளிந்திருக்கும்

சின்ன சின்ன வார்த்தைகளில் வெளிப்படாத உணர்வுகளில்
வளர்ந்து மரமாக  நம்முள் வேரூன்றி விடும்

ஒரு முறை அந்த வேர்கள்  தழுவி  வெப்பத்தை தந்தவுடன்
அதை இழந்து விடுவது எளிதல்ல
சில உறவுகள் அவ்விதமே எளிதில் கழற்றி வைக்க முடிவதில்லை
ஏனெனில் அதில் நம் சுவாசமும்
ஆன்மாவின் அசைவும் நிறைந்திருக்கிறது

கட்டித்தழுவிக்கொண்ட இச்சுகங்கள்
பிரிந்தாலும் மாறாத சுவடுகளாக
நெஞ்சின் கனவுகளில் பயணிக்கும்
அப்படிப் பின்னிய உறவை
அழிக்க முயன்றால் நம் உயிரின் ஒரு பகுதியை
துண்டித்து குருதி வழிய விடும் வேதனைக்கே சமம்.

மனோஹரி
சென்னை



# பிரார்த்தனை...

இருகரம் ஏந்தி
இறையின்பம் நாடி
ஏகனைத்துதி பாடி
ஏற்றமாம் கிப்லா நோக்கி...

வல்லோனின் தூதர்
வழிகாட்டி ஆனவர் மேல்
சொல்லிடும் ஸலவாத்தோடு
தொடங்கிடுமின்ப ஏந்துதல்...

கல்லாய் இருந்த
கல்புக்குள் இருந்து
ஊற்றொன்று பாயும்
உடலெங்கும் ஈரம் கசியும்...

தேவை நாட்டங்கள்
கோர்வையாய் மேலெழும்
திறந்துவிட்ட அணைபோல்
விரைவாய்க் கொட்டும்...

இடையிடையே இறையோன் நாமம்
இதயத்தோடு பேசும்
இறுக்கத்தைக் குறைத்து
இளகுவாக்கியமைதி தரும்...

பிடரி நரம்பிருப்பதைவிடவும்
அருகிலிருக்கும் அவனிடம்
இடறி விழுந்திடாமல்
இணைவதிலிருக்குமா தயக்கம்...

சோணை அறைகள்
சோலைகளாக மாற
மூளை நரம்பிற்குள்
முத்துக்கள் ஜொலிக்க


உணர்வெல்லாம் ஓரிறைவனில்
ஊறி உருகுதலில்
உள்ளத்தின் அழுக்குகள்
வெள்ளமாக வடிகையில்...

கனதிக லெல்லாம்
கடுகாகி மறையும்
திரையில்லா கதவுகள்
திறந்திருக்கும் என்றென்றும்...


அல்ஹம்து லில்லாஹ்
எல்லாப் புகழும்
இணை யில்லா
உனக்கே அல்லாஹ்...

**என்.நூர்**
தர்கா நகர்





# சிநேகம்



அருண்மதி

இன்றும் வங்கிக்குச் சென்றபோது, வங்கியை ஒட்டிய அந்த ஏ.டி.எம் வாசல் ஓரத்தில் ஒடுங்கியபடி என்னை அடையாளம் கண்டு கொண்ட உற்சாகத்தில் கண்களை மூடிமூடித் திறந்தது. கடந்த ஒரு மாதமாக எனக்கும் ஒரு வழியாக இந்த வழக்கம் பழகிவிட்டிருந்தது. அதனால் நானும் அதை தினமும் பார்க்க ஆரம்பித்தேன். நின்று, குசலம் விசாரிப்பது போல நிதானித்து அதன் கண்களைப் பார்த்து, பிறகு என் கண்களாலேயே டாட்டா சொல்வது போல சமிக்ஞை கொடுத்து விட்டு நகர்வது தொடர்கதையானது.

வங்கியில் எனது ஆபீஸ் சம்பந்தமான அன்றாடப் பணியை முடித்துவிட்டு மீண்டும் அதை (சிலநேரங்களில் அங்கு மிங்கும் இரைக்காக உலவியபடி இருக்கும்) நோட்டம் விடுவதும் அதுவும் என்னை நோட்டமிடுவதும் தவிர்க்கவியலா தினசரிக் கடமையாக மாறிப்போனது.

ஒருமுறை என் ஸ்கூட்டரிலும் உரிமையோடு அமர்ந்து, ஸ்டைல் காட்டி தன் உரிமையை நாட்டிக் கொண்டது.

ஏன் எப்படி? என் மீது ஏன் இந்த பார்வை, ஏன் இந்த ஏக்கம், ஏன் இந்த பரிவு? நான் என்ன செய்து விட்டேன்?.

அது, கொரோனா பயத்திலிருந்து மெல்ல மெல்ல இயல்பை நோக்கி மீளத் தொடங்கிய ஒரு நாள். அன்றும் வழக்கம் போலவே வங்கிக்கு சென்றேன். கராச்சி பேக்கரிக்கு அடுத்த பில்டிங் தான் வங்கி. பேக்கரிக்கும் வங்கிக்கும் இடைப்பட்ட பகுதியில் வங்கியின் ஏ.டி.எம். அதன் முன்பு நடைபாதையில் வாயைச் சுற்றி ஈக்கள் மொய்த்தவாறு கிடந்த அந்த ஜீவன் கண்ணில் பட, எல்லோரையும் போல நமக்கென்ன என்று கடந்து செல்ல எனக்கு ஏனோ, மனம் ஒப்பவில்லை. தயங்கி நின்று பார்த்தேன். ‘இறந்து விட்டது போல் தெரிகிறது, பாதசாரிகள் காலில் மிதி பட்டால் என்னாவது‘ என்று எண்ணி, சுற்றும் முற்றும் கண்களை ஓட விட்டேன். அருகே ஸ்கேல் அளவுக்கு ஒரு குச்சி தென்பட கையில் எடுத்து அதை லாவகமாக மெது மெதுவாக நகர்த்தி யார் காலிலும் படாத வண்ணம் சுவரோரமாக் கிடத்தினேன்.

அப்போது தான், அதன் எலும்பும் தோலுமாக ஒட்டிக்கிடந்தவயிறு மெலிதாக ஏறி இறங்குவதை நான் உணர்ந்தேன். ஆஹா நல்ல வேளை, இன்னும் உயிர் இருக்கிறது என்பதை புரிந்து கொண்டு,



பேக்கரி பணிப்பெண்ணை அழைத்து, ‘இங்கே பால் பாக்கெட் கிடைக்குமா‘ எனக் கேட்க, அவள் பக்கத்து சந்தில் ஒரு டிபன் கடை இருப்பதாகச் சொன்னாள். பணம் கொடுத்து ஒரு பாக்கெட் வாங்கி வரச்சொல்லி

அவளை அனுப்பி வைத்து, பேக்கரியில் ஒரு பிஸ்கட் பாக்கெட் வாங்கிக்கொண்டு காத்திருந்தேன். அந்த பெண் கொண்டு வந்த பாலை கொஞ்சம் கொஞ்சமாக வாய்க்கு அருகில் விட்டு விட்டு ஊற்றி மெல்ல மெல்ல அது குடிக்க, பிஸ்கட் துண்டுகளை போட்டோம். அந்த ஜீவனால் அதை உண்ண முடியவில்லை. ஆயினும் வெகு சிரமப்பட்டு உண்ண முயற்சித்து துளித்துளியாய் இயல்புக்கு மாறத் தொடங்கி இருந்தது. சில நிமிடங்களில் அந்த ஆச்சரியம் நிகழ்ந்தது. வயிற்றுக்குள் பால் சென்ற தெம்பில் தட்டுத் தடுமாறி அதனால் நடுக்கத்தோடு நிற்க முடிந்தது. சுற்றிலும் பார்க்க ஆரம்பித்தது. திருப்தியும் மகிழ்ச்சியும் ஒன்று சேர மன நிறைவுடன் நானும் அலுவலகம் திரும்பி விட்டேன். வெகு பரபரப்பாக வாகனங்கள் விரையும் அந்த நான்கு முனைச் சாலை அருகே நடைமேடையில் எந்த பரபரப்புமின்றி நடந்தவற்றை, இன்று மீண்டும் நினைத்துப் பார்க்கிறேன். மியாவ் என்று தனது குரல் மூலம் நினைவுகளை கலைத்த படி தலையைத் தூக்கி, கண்களைச் சுருக்கி ஒரு பார்வை பார்த்து விட்டு தரையில் கால்களை பாதியாய் மடித்து அதன் மேல் தலையை கவிழ்த்து உறங்க ஆரம்பித்தது.

பந்த பாசத்தை விட சொத்து சுகம் தான் முக்கியம் என்று கருதும் ஆறறிவு ஜீவன்கள் பெருகிவரும் இந்த உலகில், உயிர் மீண்ட அந்த கபடமில்லா ஐந்தறிவு ஜீவனின் பார்வையில் நிறைந்திருந்தது நன்றியைத் தவிர வேறென்னவாக இருக்கும்?



# கவிதை வேண்டும்!!

எண்ணம் சொல்லிட ஏடுகள் நிரப்பி
எழுதும் கவிதையில் நேர்மை வேண்டும்
எல்லோர் உள்ளமும் ஏற்றிட வேண்டும்
எழுதிய சிறப்பைப் போற்றிட வேண்டும்!
இகத்தில் உள்ள நலங்கள் காட்டி
இடறும் இழிவின் பாதைகள் சுட்டி
இன்பப் பெருக்கில் மகிழ்ந்து கிடக்க
இருப்போர் தம்மை அழைத்தல் வேண்டும்!
உழைப்பின் மகிமை உணரச் செய்து
உண்மை பேசுதல் கடமை யென்று
உரைக்கும் விழிப்பின் கருத்துகள் சுமந்து
உதிக்க வேண்டும் உயர்ந்த கவிதை!
பிழைக்கும் வழிகள் இவைதா னென்று
பெருமை தொடரும் முறைதா னென்று
படரும் அறிவின் கூறுகள் பொதிந்து
படைக்க வேண்டும் இனிய கவிதை!
சோம்பிக் கிடப்போர் விழித்து எழுந்து
சோதனை தன்னை சாதனை யாக்கிட
சத்தெனும் வரிகளில் முத்தெனும் கவிதை
சாற்றும் வழியின் நல்லோர் வேண்டும்!
இலக்கியம் மட்டும் பேசுதல் கடந்து
இருப்போர் உயர வலிகள் சுமந்து
இலக்கணம் மீறா வாழ்வியல் தம்மை
இனிதென உரைத்தால் கவிதை நலமே!

**கவிஞர். கொழப்பலூர். ம.பாபு...**

## நூல் விமர்சனம்

*நூல் பெயர் : நினைவுகளின் நதி*
*ஆசிரியர் பெயர் :மீ.யூசுப் ஜாகிர்*
*பக்கங்கள் : 100*
*விலை :100*
*வெளியீடு : படைப்பு பதிப்பகம்*

*நூல் வாங்க : 7338897788 / 9790821981*




இந்திய விடுதலைப் போராட்டத்தில் முக்கியப் பங்கு வகித்த வந்தவாசியில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வரும் இளங் கவிஞர் மீ. யூசுப் ஜாகிர் தமது முதல் கவிதை நூலை வெளியிட்டுள்ளார். அந்நூலே 'நினைவுகளின் நதி'.

கவிஞர்கள் காதல் வயப்பட்டு கவிதை எழுதாமல் இருந்ததில்லை. அதுவும் இளைஞர்கள் எனில் சொல்ல வேண்டியதே இல்லை. இளைஞர் யூசுப் ஜாகிர் காதல் வயப்பட்டு காதல் நினைவுகளை நதியாக்கி ஓடவிட்டுள்ளார் தம் கவிதைகளில்.

'உன் நினைவுகளின் வைரஸை
அழிக்க முடியாமல் குருதியோடு
கலந்து விட்டிருந்தது'

காதல் நினைவுகளை வைரஸோடு ஒப்பிட்டு அது குருதியில் கலந்துவிட்டதைத் தமது கவிதையால் அறியச் செய்யும் கவிஞர் அந்த வைரஸின் விளைவுகள் என்னவாக இருக்குமோ என்று அஞ்சும் வேளையில் அடுத்த பத்தியாக,

**'இன்று என்னையே நான்**
**பலப்படுத்திக் கொண்டேன்**
**எதற்கெல்லாம் உடைந்து அழுதேனோ**
**அதற்கெல்லாம் இப்போது**
**சிரித்துக் கொண்டு**
**இருக்கிறேன்'**

எனக் குறிப்பிட்டிருப்பது சற்று ஆறுதலைத் தருகிறது.

காதலனுக்கும் காதலிக்குமான இடைவெளி பிரிவால் அதிகரிக்கும். ஆனால் இருவருமே காதல் நினைவுகளில் நீந்தும்போது இடைவெளி பெரிதாக பாதிப்பை ஏற்படுத்தாது. எனவேதான்,

**'உனக்கும் எனக்குமான**
**இடைவெளியை**
**நினைவுகளால் நிரப்பு,**
**பிரிவுகளால் அல்ல!'**
என்கிறார்.

நேசத்தின் வெளிப்பாடு

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக இருக்கும். கவிஞர் யூசுப் ஜாகிருக்கு,

**‘சில சமயம் புன்னகை**
**சில சமயம் கோபம்**
**சில சமயம் சண்டை**
**சில சமயம் வெறுப்பு**
**சில சமயம் யாருக்கும்**
**பாரமில்லாத தொலைந்து**
**போதல் கூட நேசத்தின்**
**வெளிப்பாடு‘**தான்
என்று தோன்றுகிறது.

அனேக கவிதைகளில் காதல் தோல்வி அல்லது பிரிவால் துயருறும் உணர்வுகளைத் தமது கவிதைகளால் நெக்குருக வைக்கிறார். பாருங்கள் இதோ:-

**‘இறுதியில்**
**வாழ்ந்து கொண்டே செத்துக்**
**கொண்டிருக்கிறேன்**
**செத்துக் கொண்டே வாழ்ந்து**
**கொள்கிறேன்**
**உன் நினைவுகளால் மட்டும்.‘**

**‘என் மனதில் இருந்து வேரோடு**
**உன்னைப் பிடுங்கி எறிந்தேன்**
**ஆனாலும் இன்னும்**
**அப்புறப்படுத்தாமல் விழுந்து**
**கிடக்கிறது உன் நினைவுகள்‘**

கவிதைகளில் இயற்கையைக் கரம் பிடித்து அழைத்துத் தனக்குத் துணையாக்கிக் கொள்வது கவிஞர்களின் வழக்கம். கவிஞர் யூசுப் ஜாகிரும் அப்படித்தான்.

**‘என்னைக் காயப்படுத்தி**
**தனிமையாக்கிவிட்ட**
**உன்னை எதிர்த்து**
**கருப்புக் கொடி ஏந்தி வருகிறது**
**மேககக் கூட்டம்**
**என்னுடைய கண்ணீரைப்**
**பங்கிட்டுக் கொள்கிறது**
**வானம்‘**

மேகக் கூட்டத்தையும் வானத்தையும் தன்னோடு சேர்த்துக் கொண்ட கவிஞர்,

**‘கொட்டித் தீர்க்கிறது மழை**
**தேங்கிக் கிடக்கிறது**
**அடி மனதில் கடந்து போன**
**நாட்கள்**
**கப்பல் விடுகிறது**
**உன் நினைவுகள்‘**

**‘அழ நினைக்கும் போதெல்லாம்**
**ஆறுதலாய்**
**அழுது விடுகிறது மழை‘**

என்கிறார் மழையைத் துணையாக்கிக் கொண்டு.

காதல் கவிதைகளையே நூல் நெடுக தந்து கொண்டிருந்த கவிஞர் வேறு சில குறிப்பிடத்தக்க கவிதைகளையும் வழங்கியுள்ளது சிறப்பு.

அம்மா குறித்து எழுதாத கவிஞர்கள் சொற்பமே. அந்த வரிசையில் இடம் பெறவில்லை யூசுப் ஜாகிர். அவரது அம்மா குறித்த கவிதை அனுபவக் கவிதை.

**‘நெய் வார்த்து சுட்ட**
**தோசை பிள்ளைக்கு**
**நல்லெண்ணெய் வார்த்து சுட்ட**
**தோசை கணவருக்கு**
**நெய்யும் எண்ணெயும் தீர்ந்து**
**மாவும் தீர்ந்து கடைசியாய் இருக்கும்**
**ஒரு கரண்டி மாவில் ஊற்றப்பட்டு**
**தோசைக்கரண்டியில் ஒட்டிக்கொண்டு**
**கிழிந்து போன தோசைதான்**
**அம்மாவின் காலை உணவு‘**

*அடுத்து அவரது பாட்டி குறித்த வித்தியாசமான கவிதைகளில் ஒன்றைப் பாருங்கள்.*

***'நான் நேசித்த முதல் பெண்***
***நான் காதலித்த முதல் காதலி***
***நான் நேரில் பார்த்த முதல் தேவதை***
***என் பாட்டி...'*** *என்கிறார் கவிஞர்.*

*அம்மாவாக அக்காவைக் கருதுபவர்கள் வெகு சிலரே. அவர்களுள் கவிஞர் யூசுப் ஜாகிரும் ஒருவர். அவரது கீழ்க்கண்ட கவிதை மூலமாக அதை உணரலாம்.*

**'வழக்கமாகச் சாப்பிடும்**
**நான்கு தோசையோடு**
**கடைசி தோசை என்று**
**இன்னொரு தோசையை**
**வைக்கும் அக்காவை**
**அம்மாவாக நினைவூட்டுகிறார்'**
*யூசுப் ஜாகிர்.*

*தேர் குறித்த சில கவிதைகளை எழுதியுள்ள கவிஞரின் ஒரு கவிதையின் சில வரிகளைப் பார்ப்போம்.*

**'தேரடி என்று காரணவாகு பெயராக**
**காணாமல் போயிருந்தது**
**கம்பீரமாய் ஓங்கி நின்ற தேர்'**

*இந்தக் காட்சி கவிஞரைப் போல பலரின் அனுபவ வார்த்தைகள்.*

*காதலின் தோல்வியில் தத்துவங்கள் பிறப்பது இயல்பு. அதுவும் கவிஞர்களுக்குச் சொல்ல வேண்டியதே இல்லை. இவர் மட்டும் விதிவிலக்கா என்ன?*

**'கோவிலுக்கு வெளியே**
**கடவுளை உணராதவர்கள்**
**கோவில் உள்ளே**
**கடவுளை வணங்குவதால்**
**எந்தப் பலனும்**
**கிடைக்கப் போவதில்லை'**
*என தத்துவம் பேசுகிறார் தமது கவிதையில்*

**'மனிதர்களின்**
**வாழ்க்கைப் புத்தகத்தில்**
**இறுதி அத்தியாயம்**
**மரணம்**
**சிலருக்கு ரகசியமாகவும்**
**சிலருக்கு இலகுவாகவும்**
**சிலருக்கு சிக்கலாகும்**
**சிலருக்குக் கொடுமையாகவும்**
**முடிந்து விடுகிறது'**

**'ஒவ்வொருவரின் மரணத்திலும்**
**என்னுடைய மரணத்திற்கு என்னை**
**தயார்ப் படுத்திக் கொள்கிறேன்**
**ஏனெனில் நாளை மரணத்தின்**
**உணவு நானாகவும் இருக்கலாம்'**

*என மரணத்தின் தத்துவம் குறித்துக் கவிதைகள் தரும்போது, இவரென்ன வயதான அனுபவசாலியா? என்று கேட்கத் தோன்றுகிறது.*

*நூல் நெடுக ஓடும் கவிதை நதியைச் சிறப்பாக ஓடவிட்டுள்ள படைப்பு பதிப்பகம் பாராட்டுக்குரியது.*

*தமது முதல் தொகுப்பிலேயே குறிப்பிடும்படியான அனேக கவிதைகளைப் படைத்துள்ள இளங் கவிஞர் யூசுப் ஜாகிரின் கவிதைகளை அனுபவிக்க நூலை வாங்கிப் படியுங்கள்.*

*என்றும் அன்புடன்,*

**பெரணமல்லூர் சேகரன்.**

# நேர மேலாண்மை

ஒரு நாளைக்கு 24 மணி நேரம். நேரத்தை யாரும் காசு கொடுத்து வாங்குவதில்லை. எப்படி செலவானால் என்ன? என்பவர் களுக்கான பதிலுமில்லை இது. காலத்தையும் நேரத்தையும் கணக்கிட்டு அதற்கேற்ப வாழ்வியலை வகுத்துக் கொள்ள நினைப்போருக்கான பதிவு தான். நேரத்தின் அருமையை உணர்ந்த வர்கள் என்றுமே சாதனையாளர்கள் தான், சந்தேகம் இல்லை. நாம் தினமும் பயணிக்கும் போது, நம்மைக் கடந்து செல்லும் அவசர ஊர்தியின் ஓட்டுனருக்குத் தான் நேரத்தின் அருமை தெரியும். நேரத்தின் அருமையை, தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கும் போது, அதை அணைப்பதற்காக விரையும் தீயணைப்பு வண்டியின் ஓட்டுனரே அறிவார்.

காலத்தின் அருமையைப் பணிக்கு செல்லும் ஊழியர்களின் பயணத்திற்கு தடையாக, போக்குவரத்து நெருக்கடி வரும்போதும், நேரத்திற்கு பணிக்கு செல்ல முடியவில்லையே என்று வருந்தும் போது உணர முடியும். 'மருத்துவமனைக்கு அவசர அவசரமாய் ஒருவரைத் தூக்கிக் கொண்டு போனதும், மருத்துவர் சொல்லும் வார்த்தைகள், 'சரியான நேரத்திற்கு வந்தீர்கள் என்றோ, அல்லது சிறிது நேரத்திற்கு முன் வந்திருக்கக் கூடாதா? என்பது தான்.' இவையெல்லாம் நேரத்தை உணர்த்தும் 'வலியான வார்த்தைகள்'.

காலம் யாருக்காகவும் எப்போதும் காத்திருப்பதில்லை. காலத்தின் போக்கில் நாம் தான் செல்ல வேண்டும். நேர விரயம் என்பது சாதாரண விசய மில்லை. 'அறிவார்ந்த பெரியவர்களின் ஒவ்வொரு நிமிடமும் பொன்னானவை'. காலத்தின் கணக்கு என்றும் தப்புவது கிடையாது. உனது நேரத்தை நீ உருப்படி யாக ஆக்கிக் கொள்ள வில்லை யென்றால் நட்டம் மற்றவருக்கு இல்லை. அதே நேரம் 'மற்றவர்களின் நேரத்தை வீணடிக்கும் உரிமை யாருக்கும் இல்லை'. காலத்தின் கணிப்புகள் கூட நேரத்தை வைத்து தான். நேரம் நன்றாக இருந்தால் வாழ்வும் நன்றாக இருக்கும் என்பது, நீ நேரத்தைப் பயன்படுத்துவதைப் பொறுத்து தான். நேரவிரயம் எங்கும் கூடாது. அப்படி தாமதம் உருவானால் யார் பொறுப்பாக முடியும் . ஆனால் நீயே அதற்கு காரணம் ஆனால் என்ன செய்வது.?

பேருந்து ஓட்டுனர் நேரத்திற்கு வண்டி எடுத்து இடையே எதாவது காரணத்தால் பழுது ஏற்பட்டு நேரம் விரயமானால் அதை தவிர்க்க இயலாது. ஆனால் ஓட்டுனரின் தவறாலோ, அல்லது வேறு தனிப்பட்டக் காரணத்தாலோ வண்டியை எடுக்கத் தாமதமாகி அதனால் நேரம் விரயமானால் எத்தனை பேருக்கு பாதிப்பு. இதைத்தான் யோசிக்க வேண்டும். மருத்துவத்திலும் போக்கு வரத்திலும் மட்டும் என்றில்லை வாழ்க்கையின் அனைத்து வழியிலும் நேரத்தின் மதிப்பு உண்டு.

ஒரு பணிக்காக ஒரு அலுவலகத்துக்கோ வங்கிக்கோ செல்கின்றோம். அதற்கான இடத்தில் உனது பணியை முடித்துக் கொடுக்க யாராவது பணியிடத்தில் இருக்க வேண்டும். அப்படியில்லாமல் நீ காத்துக் கிடந்தால் நீ காத்திருந்த நேரக்கணக்குக்கு யார் பொறுப்பு? பணியில் இருப்போர் தன் மனதுக்கு பயந்து வேலை செய்ய வேண்டும். வெட்டிக்கதை பேசிக் கொண்டு யாரையும் காக்க வைக்கக் கூடாது. இது கணினி யின் காலம். ஒவ்வொரு வேலைக்கும் இவ்வளவு நேரம் என,வரையறுத்துச் சொல்லிவிடும். அலுவலகப்பணியாக ஒருவர் வந்தால் அவர் வந்த காரணத்திற் குரிய பணி இவ்வளவு நேரத்தில் முடியும் என அனைவருக்கும் தெரியும்படி சில நிறுவனங்கள் நேரத்தை அறிவிப்புப் பலகையிலும் விளம்பரப் படுத்தி யிருப்பார்கள். ஒரு மணி நேரத்தில் முடிய வேண்டிய வேலையை உனது தவறான செய்கையால் ஒரு நாளைக்கு கொண்டு போகக்கூடாது.

கணினியால் தாமதமானால் கூட அன்பாக நிலைமையை எடுத்துச் சொன் னால் நிற்கும் நேரத்தில் அவர் வேறொரு வேலையையாவது முடிக்க முடியும் என்ற எண்ணம் வரவேண்டும். காலம் என்பது திரும்ப வராதது. காலையில் எழுந்ததில் இருந்து இந்தந்த வேலையை யெல்லாம் இன்றைக்கு முடிக்க வேண்டும் என்று விடுப்பு எடுத்து வந்தவரை மறுநாளும் விடுப்பு எடுக்க வைக்கக்கூடாது.





காலம் எப்போதும் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. கடிகாரம் பழுதடைந் தாலும், காலம் நகர்ந்து கொண்டே தான் இருக்கும். கடந்து போன நேரம் கை விட்டு போனதுதான். திரும்பி வாங்க முடியாது. ‘கவனச்சிதறல்களில் விழாமல் இருந்தால் காலம் தப்பிய கடமைகள் இல்லை‘. அதிகார வர்க்கம் அன்றாடம் உபயோகிக்கும் ஒரு வார்த்தை ‘டார்கெட்‘. நேர மேலாண்மைக்கு நெருக்கடியாகும் வார்த்தை தான் இது. பொது வீதியிலிருந்து பார்க்கும் போது நன்றாகவே தெரியும். உள்ளே நுழைந்து பார்த்தால் தான் உண்மைகள் புரியும்.

வேலை செய்ய மாட்டேன் என்பவனை வேலை வாங்க ஆயிரம் வழிகள் உண்டு. ஆனால் வேலை செய்பவனை வேலை வாங்க சில முறைகளும் உண்டு. மனம் ஒப்பி, செய்யும் வேலை மறுபதிப்புக்கு ஆளாவதில்லை. மனமின்றி செய்யும் வேலை மகிழ்வைத் தருவதில்லை. ஒருவ னுக்கு பிடித்தமான வேலையை அவனிடம் செய்யச் சொன்னால் சிறப்பாகவே செய்வான். பிடிக்காமல் இருப்பவனுக்கு புரிய வைத்து, பின் வேலை தர வேண்டும். அதிகாரிகள் பலர் இங்கே மட்டும் மனதை விற்று விடுகிறார்கள். எல்லோரும் ஒன்றில்லை என்ற நினைப்பு மட்டும் வருவதில்லை. காலம் தான் இதனைச் சொல்லித் தர வேண்டும்

இன்றைக்கு சமூக ஊடகங்கள் தான் நம்மை இயக்குகின்றன. ‘நாம் இயக்கிய அலைபேசி, நம்மை இயக்குவதை நாம்

உணர்வதில்லை'. தேடல்கள் தெளிவாக இருந்தால் தேவையான அனைத்தும் தேடலில் உனக்கு கிடைக்கும். நேரமும் தன் மதிப்பை உணர்த்தும். தேடல் தீதாகி மோசமான வழியென்றால், 'வாழ்வே கரைந்து போயிருக்கும் வாழ்க்கை அதில் தொலைந்திருக்கும்'. காலமோ நேரமோ, கருத்தோடு உபயோகப் படுத்தும் முறை யில் தான் வெற்றியோ தோல்வியோ வந்து சேரும். நல்ல மனதோடு தான் அனைவரும் பிறக்கின்றோம். பயண வழியைப் பொறுத்து கறையாகிறது.

காலம் கண்போன்றது. கடமை அதில் உனைக் காட்டுகிறது. நேரம் தவறிய எதுவும் நிலைப்பதில்லை. Expiry date என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். தாமதமான நீதிக்கும், மறுக்கப் பட்ட நீதிக்கும் பெரிய வேறுபாடில்லை. தாகம் ஏற்படும் போது தான் தண்ணீர் குடிக்க வேண்டும். காலம் கடந்து வரும் எதுவும் பயன் தந்து விடாது. எதற்கும் ஒரு வழி முறை நமக்குண்டு. எழுவது முதல் படுக்கையில் விழுவது வரை. நேரம் தவறாது எதுவும் நடந்தால் நெருக்கடிகள் வாழ்வில் இல்லை. 'நேரம் தவறினால் நீ உன் பிடியில் இல்லை. உணர வேண்டும்'.



நேரத்தை நிர்வகிப்பது எப்படி? நியாய மான கேள்விதான். விருப்பமான ஒன்றில் மனம் ஒன்றும் போது நேரம் போவது தெரியாது, நேர விரயமே ஆனாலும் நிறைவான செயல் முடிந்திருக்கும். நேரம் தேவையான ஒன்றுக்காக செலவாக வேண்டும். காலத்தையும் கரைத்து கடமை யும் செய்ய வில்லை அல்லது முடிக்கவில்லை யென்றால்? ஆக அத்த னைக்கும் காரணம் மனம் என்றும் சொல்லிவிடவும் முடியாது. 'பணியில் தாமதம் உண்டாவது இயற்கை. இத் தாமதம் இயற்கையா செயற்கையா. செயற்கையெனில் காரணம் என்ன? கண்டுபிடித்தால் காலத்தை நம்பிடிக்குள் வைத்துக் கொள்ளலாம்'.

நாம் போட்டி போட முடியாத ஒன்று தான் இயற்கை. காலத்தையும் இங்கே இதனோடு வைக்கலாம். காலத்தை உணர்த்தும் கதையொன்று படித்தேன். பிடித்து இருந்ததால் படித்ததைத் தருகின்றேன். ஒருவன் கால நேரம் பார்க்காது 24 மணி நேரமும் காசு காசு என்ற நினைப்புடனே வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தான். (தொழில் செய்து கொண்டிருந்தான்.) நேரத்திற்கு உண்ணாமல், நேரத்திற்கு உறங்காமல், காசு சேர்ப்பதையே கடமையெனக் கொண்டு நிறைய சம்பாதிக்கவும் செய்தான். ஒரு நாள் நள்ளிரவு நேரத்தில் வீடு திரும்பிய போது அவனது சிறு வயது குழந்தை உறங்காது விளையாடுவதைக் கண்டு உறங்கவில்லையா என்று கேட்டான்.

குழந்தையும் தனது தந்தையிடம், அப்பா உங்களை நான் என்றுமே பார்க்க முடிய வில்லை. உங்களோடு நான் பேச

முடிய வில்லை. நான் தூங்கிய பின் நீங்கள் வருவதும், நான் எழுமுன் நீங்கள் போவதும் தொடர்கிறது. உங்கள் அப்பா இன்று என்ன சொன்னார் என்ற எனது நண்பர்கள் கேள்விக்கு பதில் சொல்ல முடியவில்லை. இதை அம்மாவும் உங்களிடம் கேட்கப் பயப்படுகிறார்கள். அதான் நானே கேட்க லாம் என்று முடிவெடுத்து காலம் தவறி உங்களை எதிர்பார்த்து விழித்துள்ளேன். கேட்கலாமா? என்றான்.

குழந்தையின் கேள்வியில் என்ன இருக்கப் போகிறது என்ற தைரியத்தில் கேள் என்கிறான். குழந்தை கேட்டது அப்பா ஒரு மணி நேரத்துக்கு நீங்க எவ்வளவு சம்பாதிப்பீர்கள் எனக் கேட்க, தந்தையும் பெருமையாக 10000/- வரை சம்பாதிப்பேன் என்று சொல்ல, அப்படி யானால் எனக்கு 5000/- கடனாகத் தரமுடியுமா? பெரியவன் ஆனதும் தந்து விடுகின்றேன் என்று குழந்தை சொல்ல, எதற்கிந்த பணம், என்ன செலவு உனக்கு எனக்கேட்ட போது, குழந்தை அமைதியாக சொன்னதாம் 'அப்பாவாக அரைமணி நேரம் இருப்பதற்கு 5000/- தருகிறேன் என்றதாம்'. இதனை எதிர்பார்க்காத தந்தைக்கு என்ன சொல்வது என்று தெரியாததால் பேச்சு வரவில்லை.

நேர விரயம் செய்ய வில்லை யென்ற போதிலும் கடமை தவறியவர்கள் ஆகக் கூடாது. சம்பாதித்த காசு அன்பைத் தர வேண்டும். புரிதல் இல்லாத கடமை எதற்காக? எதற்காக யாருக்காக சம்பாதிக் கின்றோம் என்பதை உணர வேண்டும். நேரம் காசு சம்பாதிக்க மட்டுமில்லை. அன்பு செலுத்த, ஆரோக்கியம் பேண நான்கு இடங்களைச் சுற்றிப்பார்க்க, மற்றவர்களுக்கு உதவ என இருக்க வேண்டும். இப்படி வாழ்க்கையையும், நேரத்தையும் தொலைத்துக் கொண்டு அன்பை மறந்தவர்களாக வாழ்கிறார்கள் பலர். வாழ்வுத்தடத்தின் ஒவ்வொரு பக்கத்தையும் உணர்ந்து வாழ்ந்தால் மட்டுமே வாழ்க்கை. எதிலும் ஒரு பிடிப்பு வேண்டும்.

தேவையானதை தேவையான நேரத்தில் தெளிவாக செய்ய வேண்டும். 'கால விரயம் என்று காசு பார்ப்பதில் மட்டும் நின்றால் காணாமல் போனது வாழ்க்கை யாகவே இருக்கும்'. கண்ணீர் விட்டாலும் காலம் திரும்பி வராது. நேர மேலாண்மை என்பதும் அப்படித் தான். காலமறிந்து எதையும் செய்தாக வேண்டும். பணி செய்யும் வயதில் சோம்பேறியாக இருந்தால் ஓய்வு பெறும் வயதில்உழைக்க வேண்டியிருக்கும். 'காலத்தையும் நேரத் தையும் கணக்குப் பார்க்காமல் இருந்தால் கடைசியில் துன்பமே மிஞ்சும். விலை மதிப்பில்லாத நேரத்தை வீண் விரயம் செய்யாமல் பயன்படுத்துவதில் தான் வாழ்க்கையே இருக்கிறது'. உணர வேண்டும்.

படிப்பின் நேரத்தை தேர்வு முடிவு வரும் நாளே சொல்லும். நல்லமுறையில் பயன்படுத்தினால் வெற்றியே பரிசு. 'காலத்தை உணர்ந்தவன் கடமையில் தவறுவதில்லை. நேரத்தை உணராதவன் நிலைமை உணர்வதில்லை'. காலத்திற்கு விலையிருக்கிறது என்று உணர்ந்தவனே உருப்படியாகிறான். உணராதவன் உருக் குலைகின்றான். எதற்கும் நேரம் வர வேண்டும் என்பார்கள். இனியாவது நேரத்தை, பார்த்து பயன் படுத்துங்கள். காலத்தை மிச்சப் படுத்த முடியாது. காலத்தில் செய்த வொன்றே கணக்காக வந்து நிற்கும். நட்டக் கணக்கு வராமல் பார்த்துக் கொண்டால் நம் வாழ்க்கை நலமாகும்.

**பரணி சுப சேகர்**
*மதுரை 17*




நூல் விமர்சனம்

*நூலின் பெயர் :*
*சரக்கொன்றை நிழற்சாலை*
*வகைமை : ஹைக்கூ*
*நூலாசிரியர் :*
*ஷர்ஜிலா பர்வீன் யாகூப்*
*பக்கம் : 110*
*வெளியீடு : படைப்பு பதிப்பகம்*
*விலை : 100.*
*நூலை பெற :*
*8825868689, 7338897788.*

ஒரு கோடை மழைக்கு ஏங்குவது போல. ஒரு மொட்டவிழும் மலரின் வாசத்திற்கு ஏங்குவது போல, ஒரு நல்ல ஹைக்கூ கவிதைகள் படிக்க ஏங்குவதும் காத்திருத்தலும் ஒரு சுகம்தானே ..

அப்படியான கவிதை தொகுப்புதான் இந்த 'சரக்கொன்றை நிழற்சாலை' யும்.

ஒரு பூஞ்சோலையில் பல தேனீக்கள் ஒன்று கூடுவது போல ஒரு புத்தகத்தில் பல ஹைக்கூ கவிதைகளை நிரப்பி இருக்கிறார் கவிஞர்.

ஈக்களும் தேனீக்களும் பூச்சி வகையை சேர்ந்தது தான் எல்லா ஈக்களுமே தேனீக்கள் ஆகிவிடுவதில்லை

ஈக்கள் வெறும் இனிப்பை உண்ணும் அதனால் எந்த பயனுமில்லை. ஆனால் தேனீக்கள் அப்படியில்லை தேனீயினால் தான் மலரில் மகரந்த சேர்க்கையே நடைபெறுகிறது.. தேனீக்கள் இல்லையேல் இந்த உலகமே இல்லை

கவிதைகள் இல்லையேல் மொழிகள் அழிந்துவிடும்.. ஒவ்வொரு புத்தகத்தை வாசிக்கும் போதும் ஒரு மனஅமைதியும் நிறைவும் கிடைக்குமென்றால் புத்தகத்தை வாசிப்பதில் எந்த தவறும் இல்லை ..

தேன் சுவையான கவிதைகளை நாமும் சுவைப்போம்..

யாருமற்ற படகில் காற்று ஆழ்ந்திருப்பதும், படகை அசைத்து அசைத்து விளையாடுவதும் காற்றுக்கு என்ன புதிதா

காட்சியை விரிவுபடுத்தி பார்த்தால் அது மழைக் காற்றாக இருக்கிறது என்ன ஒரு மனதை குளிர்விக்கின்ற கவிதையிது ..

**'வெற்றுப்படகை**
**அசைத்துவிட்டு அக்கரையேறியது**
**மழைக் காற்று '...**

விபத்தில் காயமடைந்ததற்கு தானே முதலுதவி சிகிச்சை. அதென்ன நதிக்கு

*முதலுதவி சிகிச்சை வாருங்கள் பார்ப்போம்..*

***அடுக்கிய மணல் மூட்டை***
***வெள்ளத்தில் தொலைந்த நதிக்கு***
***முதலுதவி சிகிச்சை ...***

*காட்டின் சமணத்துறவி யாரென்று உங்களுக்கு தெரியுமா? காட்டை வளர்ப்பவர்களா இல்லை அழிப்பவர்களா மரங்களை நடுபவர்களா?*

*கவிதையில் அருமையாக சொல்கிறார் கவிஞர் ..*

***'சருகுகளை கூட்டியபடி நடக்கும்***
***காட்டின் சமணத்துறவி***
***மயில் ' ...***

***'வெள்ளம் வடிந்த வீதி***
***வீட்டுக் கூரையின் மேல்***
***தரைதட்டி நிற்கும் படகு' ...***

*படகை நிறுத்தி வைக்க வேறு இடமில்லை அதனால் தான் வீட்டுக்கூரையில் நிறுத்தி சென்றது புயல் ஓய்ந்த மழை ..*

*கடற்கரையில் வழக்கறிஞர்கள் ஒன்று கூடினால் கும்மாளம் தான் ..*

*இவர்கள் யாரிடமும் வாதாடுவதில்லை லஞ்சம் வாங்குவதில்லை நீதிக்கு புறம்பாக எதையும் செய்வதில்லை ஆனாலும் கருப்பு மேலங்கியை கழட்டுவதில்லை ..*

***'கருப்பு மேலங்கி***
***கழட்டாத வழக்கறிஞர்களா?***
***கடற்கரை பென்குவின்கள் ...***

*நமகெல்லாம் ஐந்தறிவா? ஆறறிவா? நான் கேட்கவில்லை கவிஞர் கேட்கிறார்..*

***'ஐந்தறிவா? ஆறறிவா?***
***பிஸ்கட்டை தண்ணீரில் நனைத்து***
***முழுங்கும் காக்கை' ...***

*பூமியில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நேரமா காட்டுகிறது இந்த கடிகாரம் சிலர் நேரத்தை கடத்துகிறார்கள் சிலர் நேரத்தை கடக்கமுடியாமல் தவிக்கிறார்கள் ...*

***'பள்ளி சென்ற பிள்ளைகள்***
***தனித்து கேட்கும்***
***நகரும் கடிகார முட்கள் '...***

*மழை வேண்டும். மண்ணில் ஈரம் வேண்டும் என்பதை தவிர, வேறென்ன வேண்டுதலாக இருக்கும் மரத்திற்கு ..*

***'வேண்டுதல் மரம்***
***தொட்டிலில் ஊஞ்சலாடுகிறது***
***வேப்பம்பூக்கள் '...***

*பணத்தாள் நிரப்பமுடியாததை மனத்தால் நிரப்ப முடியும் ..*

***'ஒற்றைப் பணத்தாள்***
***யாசகனின் தட்டில் விழுகிறது***
***கடவுளின் நிழல் '..***

*வானம் ஒரு போதிமரம் நாளும் எனக்கது சேதி தரும் என்ற பாடல் வரிகளை போல கவிஞருக்கும் வானம் ஞானம் தந்திருக்கிறது ..*

***'மரக்கன்று நடுகிறேன்***
***தூறத் தொடங்கியது***
***வானம் '...***

*சிறகுகள் இல்லை அதானால் என்ன காற்றை பிடித்துக்கொண்டு நானும் பறப்பேன் என்று கவிதைகள் மூலம் கவிஞர் நமக்கு நம்பிக்கையை விதைக்கிறார் ..*

'சிறகுகள் இல்லை
காற்றடிக்கும் போதெல்லாம்
மெல்ல மேலெழும் சருகு '...

பூக்களை உதிர்க்கும் ஒரு கோடையில் மரத்தின் நிழலில் நீங்கள் அமர்ந்ததுண்டா ... ஒரு நத்தையை போல பூக்களின் வாசம் பிடித்து நகர்ந்ததுண்டா... உதிர்ந்த பூக்களின் மென்மையான இதழின் மீது ஒரு எறும்பை போல உறங்கியதுண்டா ... இந்த கவிதையை வாசித்துவிட்டால் இனி நீங்களும் அந்த சரக்கொன்றை நிழற்சாலையில் பயணிப்பீர்கள் ...

'நத்தையாகிறேன்
நிழலெல்லாம் பூக்களுடன்
சரக்கொன்றை நிழற்சாலை' ...

கவிஞரின் நிழற்சாலையில் நானும் சிறிது நேரம் ஓய்வெடுத்தது போல நீங்களும் நூலை வாங்கி வாசித்து சிறிது ஓய்வெடுத்து செல்லவும் ...

இனிய வாழ்த்துகளுடன்
நூல் விமர்சகர், எழுத்தாளர்,
**கவிஞர் ச. இராஜ்குமார்**
திருப்பத்தூர் மாவட்டம்

---

## நிழல் ஆகி போன நிஜமானவள் !!!



எனக்கு பிடித்த கலர் கோலம்
எனக்கு பிடித்த கம்பளி தூக்கம்
எனக்கு பிடித்த மல்லிகையின் மனம்
எனக்கு பிடித்த அம்மாவின் பூண்டு குழம்பு
எனக்கு பிடித்த  மஞ்சள் நிற ஆடைகள்
எனக்கு பிடித்த நட்பு வட்டம்
எனக்கு பிடித்த பொம்மைகள்
எனக்கு பிடித்த கவிஞர்கள்
வீட்டு பாடம் போல் எழுதி வைத்து மனனம் செய்த பாடல் வரிகள்
இசையில் மிதந்து தேர்வை மறந்த  நாட்கள்
உறவுகளோடு ரசித்து கொண்டாடிய பண்டிகைகள்
குதூகலமாய் சிங்காரித்து போன கோவில் திருவிழாக்கள்
கூட்ட நெரிசலுக்கு பயந்த பேருந்து பயணம்
பெருமையுடன் வகுப்பறையில் கிறுக்கிய கவிதைகள்
மழையில் நனைந்து ஆட்டம் போட்டு அடி வாங்கிய  தருணங்கள்
மருதாணி சிவக்கவில்லை என்று தேம்பி தேம்பி அழுத நாட்கள்
அம்மாவின் சேலையை சுற்றி கொண்டு வலம் வந்த பருவங்கள்
பிடிவாதமாய் கடையின் பொம்மை அணிந்த ஆடையை வாங்கிய திமிர்
பிடித்த பொம்மை வாங்க செய்த உண்ணாவிரத போராட்டம்
திரையரங்கு செல்ல செய்த (கொ)கெஞ்சல்கள்
பெரும் கனவுடன் சேர்த்த உண்டியல்
கதாநாயகி போல் உணரும் பிறந்த நாள் கொண்டாட்டங்கள்
எல்லாம் இழ (மற) ந்து நிற்கின்றேன்
'இல்லத்தரசி' என்ற பட்டத்துடன் ..!
நிஜம் மறந்து நிழல் ஆகி போன இவள் . . .

– சூர்யா பாலகிருஷ்ணன்

# கிளைமாக்ஸ்

டே பிரசாத் நீ எப்பவுமே நீ எழுதுற கதைக்கு ஹாப்பி எண்டிங் கொடுக்க மாட்டியா ?

எப்ப பாரு ஒரே சோகமா தான் எழுதுற?

உன் கதையெல்லாம் நல்லா தான் இருக்கு ஆனா இருக்குற டென்ஷன்ல்ல உன் கதையெல்லாம் படிச்சா ரொம்ப மூட் ஆஃப் ஆவுதுடா

இங்க பாரு சௌமியா வாழ்க்கை ஒண்ணும் சினிமா இல்லை ஹாப்பி எண்டிங் கொடுப்பதற்கு. நிஜ வாழ்க்கை யில் வாழுற நாமெல்லாம் கதாநாயகன், கதாநாயகி இல்லை ஜெயித்து மட்டும் கொண்டிருப்பதற்கு. இங்க இன்பமும் ,துன்பமும் கலந்து தான் இருக்கு சில நேரங்களில் சில பேருக்கு துன்பம் மட்டுமே நிகழ்வதற்கும் வாய்ப்புண்டு. ஒரு படைப்பு நிஜமா உண்மைக்கு பக்கத்துல இருக்கணும்னு நினைக்குறேன்.

இது தப்பா ?

அய்ய அய்யயே கொஞ்சம் ரிலாக்ஸ்ஸா படிக்கிற மாதிரி கதை எழுதுடான்னு சொன்னா ஓவரா பிலாஸபி பேசுறியே, உனக்கென்ன மனசுல டைரக்டர் பாலான்னு நினைப்பா ?

உன் சௌமியா சொல்றேன் எனக்காக ஹாப்பி எண்டிங் வர்ற மாதிரி கதை எழுதுவியா? மாட்டீயா ?

ஒகே கூல் சௌமியா உனக்காக எழுதுறேன்னு சொன்னான் பிரசாத்.

சின்ன வயசுல இருந்து பழகுற தோழி அது மட்டுமில்லாம சௌமியான்னா அவனுக்கு ரொம்ப உசுரு

இதுவரைக்கும் மனசுல உள்ள காதல சொன்னதே இல்லை. தன் காதல மனசுல வச்சுக்கிட்டு ஒரு கதை எழுதுனான் வாழ்வில் முதன் முதலாக ஹாப்பி எண்டிங் வைத்து கதை எழுதுவது இதுதான் முதல்முறை .

தன் சொல்லாத பொல்லாத காதலை சொல்வதற்காக கோயிலுக்கு அவளை கூப்பிட்டு இருந்தான்.

டே பிரசாத் நானே உன்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் சர்பிரைஸா சொல்லணும்னு நினைச்சேன் ஆனா அதுக்குள்ள நீயே கூப்பிட்டுடே ?

சொல்லுடா என்ன விஷயம் ?


நீயும் ஏதோ முக்கியமான விஷயம் சொல்லணும்னு சொல்றே லேடீஸ் பர்ஸ்ட் நீயே சொல்லு ?

வீட்ல நிச்சயதார்த்தம் பண்ணிட்டாங் கடா, வர்ற ஆடி கழிச்சு கல்யாணம் தான். மாப்பிள்ளை அஜித் மாதிரி இருக்கிறார்டா எனக்கும் ரொம்ப பிடிச்சு போச்சு என்றாள்.

அவன் கண்களில் வர இருந்த கண்ணீரை வர விடாமல் அடக்கி கொண்டான் சௌமியா கோயில் பிரகாரத்தை சுற்றி வரும் வேளையில் தான் எழுதிய சிறுகதையின் ஹாப்பி எண்டிங் கிளைமாக்ஸ்ஸை மூலையில் தூக்கி எறிந்தான் அப்போது கோயில் நந்தி இவனை பார்த்து புன்னகையித்தது .

**நௌஷாத் கான். லி**

# நேசவிடம்



செரித்துப் போன நினைவுகளை
மீண்டும் கொண்டு வந்தாய்
செல்லரித்துப்போன சுவடுகளில்
சிவப்புக்கம்பளம் விரிக்கிறாய்

சிந்தனையில் மறந்தபடி
கிடக்கும் நேசக்காதையை
மீண்டும் படிக்க ஆரம்பிக்கிறாய்
சேர்மான விதிகள் அற்றதான
காகிதத்தில் மீறலின் விதிகள் எழுதுகிறாய்

வேண்டும் என்றா கேட்டேன்
வாவென்றா அழைத்தேன்
விளையாட்டென்று நினைத்தாய்
விலக்கப்பட்டதென்பதை மறந்தாய்

விகல்பம் இன்றி வேரூன்றிய மரம்
விண்தாண்டிக் கிளை தரித்த தரு
எப்படித் தறிப்பாய்
எங்கனம் எளிதில் உடைப்பாய்
எஃகின் உருக்கொண்டு
இறுகியுரங்கொண்டு
தழைத்ததை எப்படி அறுப்பாய்



வேண்டாம் இந்த விபரீதமென்றிருந்தேன்
தீண்டும் நேசவிடம் தொடாதிருந்தேன்
மாண்டுபோய் மறைந்தொழிந்தேன்
நீண்டவழி மேகக்கருக்கலைத் தாங்கி நின்றேன்

பேசாதிருந்த காலம் மரித்திருந்தேன்
மரித்திருந்த வேளையெலாம்
உனை நினைத்திருந்தேன்
நினைத்திருந்த வேளையெல்லாம்
உயிர்த்தெழுந்தேன்
உயிர்த்தெழும் கணங்களில்
முடிவிலிக் கவிதைகள் புனைந்திருந்தேன்
நித்திய சுகந்தமாய் எங்கும் சூழ்ந்திருந்தேன்

உயிர்த்து விடும் நேசத்துக்கு மரணமென்று
பெயர் வைத்திருக்கிறாயே ஏன்?
சிறு குவளைக்குள் கடலைக்
கொளித்து ஊற்றியவள் இவள்.
பேரன்பின் நெகிழ்வில் நீயின்றி
உனைக்காணுமுலகில் நான்
மிதந்திருப்பது எங்கனம் அறிவாய் நீ?

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை

# பறந்து போகின்றேன் சிறகில்லாமல்..

எனது கைக்குட்டையின்
ஈரமெல்லாம்
பிழிந்தெடுத்த துளிகளாய்
சாரல் வீச
நனைந்துகொண்டே பறக்கிறது
மனக்குருவி...



நீலத்தைப் பிடித்து
வானம் அமைத்து
இரு விரல்களாய்
சிறு சிமிட்டியதும்
பறக்கிறது வாலில்லாத குருவி...

எனது முதுகெல்லாம்
நாளைய ஆசைகள்
புடைத்தெழுந்து பறக்கிறது
பல வண்ண சிறகுகளை பறந்தாடிய
வண்ணப் பறவையினைப் போல...

ஒரு காடு
ஒரு மரம்
விதையுண்டு
வனமாக்க முயல்கிறது
பழமுண்டு பறந்த குருவி



மலை சரிந்து
நீர் படர்ந்து
விதை கலந்து
கனி விளைந்து
இனிப்பு கலந்து
எடுத்த முடிவிது- நான்
பறந்து போகின்றேன்
சிறகில்லாமல்...

சே கார்கவி கார்த்திக்

# தொடுகைத் தொலைபேசி ஒரு தொழு நோயா?

சாமக்கோழி கூவுஞ்
சத்தங் கேட்டறியாள்.
மாவின் தளிர் கோதி
மகிழுங் குயிலினங்கள்
பூவில் மதுவுண்டு
பூரிக்கும் வண்டினங்கள்
யாவுமிசைக்கு மின்ப
யாழிசை கேட்டறியாள்.

உருக்கிய தங்கமென
ஒளியினை பரப்புமந்த
அருக்கனினழகு தன்னை
ஒருபோதும் கண்டறியாள்.
கருக்கலிற் கண்விழித்துக்
காலைக்கடன் முடித்து
உருக்கமாய் இறைவணக்கம்
ஒரு நாளுஞ் செய்தறியாள்.

கைத்தொலை பேசியிலே
காமலீலைக் காட்சி கண்டு
பைத்தியமாகிவிட்ட
பழக்கதோஷ மவளுக்கு.
வைத்த கண் வாங்காமல்
விழித்து இரவு தன்னை
மைதுனக் காட்சிகளில்
மூழ்கிக் கழித்திடுவாள்.

பேயுலவும் நள்ளிரவில்
பக்குள் ஊமத்தம்
நாய் குரைக்கும் ஓசைகளால்
நடுக்கமுற்றுக் கட்டிலிலே
போய் விழுந்து படுத்திடுவாள்.
பொழுது புலர் வைகறையை
வாய் புலம்பும் நடுநிசியாய்
வாடிக்கை யாக்கிடுவாள்.

அட்டில் வேலை எதுவும்
அவளெழுந்து செய்வதில்லை.
கட்டிய கணவன் காலை
கடை கடையாகச் சென்று
பட்சணம் வாங்கி வந்து
பாங்குற மூடி வைப்பான்.
அட்டிலில் வேலை செய்ய
ஆயாவுங் காத்து நிற்பாள்.

பெட்டியிற் பாம்பு போன்று
சுருண்டு படுத்திருந்து
பட்டப் பகலான போது
படுக்கை விட்டெழுவாள்.
கொட்டாவிச் சப்தத்தைக்
கொழு நன் செவியுற்று
அட்ட பாற் கிண்ணத்தை
அவளருகே கொண்டு
வைப்பான்.

மடியிலே வந்து வீழும்
மக்களையுமவள் பாராள்.
கடிமணஞ் செய்த கணவன்
தன்னையுங் கூர்ந்து பாராள்.
சுடுகின்ற பாற் கிண்ணத்தைச்
சுவைத்துச் சுவைத்து அவள்
தொழுகைத் தொலைபேசி
தன்னையே பார்த்து நிற்பாள்.



கலா பூஷணம்
பைந்தமிழ் தீபகம்
**அப்துல் ஹலீம்**
ஏறாவூர்.

# பசுமையின் பாதையில்



**உமா ஸ்வாமிநாதன்**
பெங்களூரு

'ர வி... ரவி.. என்று கூப்பிட்டுக் கொண்டு வந்தார் ரவியின் தந்தை ராமன்,

இங்க பார் வெளிநாட்டு விமானங்கள் எல்லாம் விட ஆரம்பித்துட்டாங்க.

'கொரோனா' என்பதால் நீ இங்கு வந்து இரண்டு வருடமானது. இங்கிருந்தே உன் வேலைகளை பார்த்துக் கொண்டாய், எங்களுக்கும் சந்தோஷமா இருந்தது.

நீ எப்போ கிளம்பணும்?.. சொல்லு நாள் பார்த்து தருகிறேன். நல்ல நேரத்தில் கிளம்பணும். உனக்கு ஒரு கல்யாணம் பண்ணிட்டா நிம்மதியா!.... இருக்கும் என்றார் ராமன்.

அப்பா நான் தோட்டத்து பக்கம் போய்ட்டு வரேன் மனசு ஏதோ குழப்பமா!... இருக்கு.

''ஏன்டா!' உடம்பு சரி இல்லையா' வேலையில் ஏதாவது பிரச்சனைய்யா??" என்றார் ராமன்.

அதெல்லாம் இல்லப்பா.. 'நான் கொஞ்சம் வெளியே போய்ட்டு வரேன்' என்று அவர்கள் தென்னந்தோப்புப் பக்கம் போனான்.

அங்கே தோப்புக்குள் இருந்த கயிற்று கட்டிலில் அமர்ந்தான். சில்லென்று காற்றும்,. வெயில் படாத நிழலும், அதற்குள்... தோட்டக்காரன் இளநீர் வெட்டி வந்து குடுத்தான்.

இந்த இரண்டு வருட காலத்தில் அவன் அதிகம் செலவழித்தது,.. இணையதளம் இணைப்பு மட்டும் தான்!! மாதா,மாதம்... மின்சாரக் கட்டணம் கட்டுவது தவிர வேறு செலவில்லாததால் சம்பளப் பணம் அப்படியே வங்கியில் இருந்தது.

இரண்டு வருடம் அவனும் மிக்க சந்தோஷமாத்தான் இருந்தான்.

கிராமத்தில் அயராது உழைக்கும் உழைப்பு!, அனைவரிடமும் உள்ள ஒற்றுமை, சுயநலமில்லாத அன்பு, சுக, துக்கங்களில் தங்கள் வீட்டு சம்பவம் போல் சேர்ந்து கேட்காமலே உதவும் குணம்,

மழையோ, வெய்யிலோ எதுவானாலும் இயற்கை இப்படித்தான் என்று அதற்கு தன்னை உட்படுத்திக்கொள்வது. கோவில் திருவிழா எதுவானாலும் ஒன்று கூடி செய்வது.

பச்சை கம்பளம் விரித்தாற் போல பசுமை நிறைந்த வயல் வெளிகள்... வயல்களின் ஓரங்களில் நிற்கும் தென்னை மரங்களும், நிம்மதியான தூக்கம்....

கிளியும் குயில்களும் கீதம் பாட அங்கொன்று இங்கொன்றுமாய் அமைந்த மாமரம்... வீட்டு திண்ணையில் அமர்ந்து களங்கபடம் இல்லாமல் சீண்டும் ஆடவர்கள்... இவர்களிடம் இருக்கும் அன்யோன்னியமான உறவுகள். எல்லார்

வீட்டு திண்ணையும் அனைவரும் உபயோகித்தனர்.

அவன் மனதில் எண்ண ஓட்டங்கள் வேறு மாதிரி இருந்தது. தோட்டத்திலிருந்து வீட்டுக்கு வந்தான் ரவி,

வீட்டில் ரவியின் அம்மா, சீதா... இருந்தாள்.

"அம்மா... நான் இந்த தடவை ஊருக்கு போகலை,' உறுதியான குரலில் சொன்னான் ரவி .

"ஏன்... ஏதாவது வேலையில் பிரச்சனை யா ? எந்த காரணமா இருந்தாலும் சரி... நாம எல்லாரும் 'குல தெய்வத்துக்கு பொங்கல்' வைத்து வேண்டிக்கலாம் என்றாள்.

இல்லம்மா.... நான் அமெரிக்கா போகல!.... வேலையை விட்டுவிட்டு அப்பா கூட விவசாயம் பண்றேன்!..

என்னிடம் இரண்டுவருட சேமிப்பா... இருபத்தி ஐந்து லட்சம் இருக்கு. நம்ம நிலத்துக்கு பக்கத்து நிலம் விற்பனை க்கு வருது. அதையும் வாங்கி போடலாம்.

பக்கத்து வீட்டு கிழவி இறந்ததும் அந்த வீடு கவனிப்பார் இல்லாமல் பாழடைந்து!.. போச்சு.அதான் 'அவ பிள்ளை சென்னை யில் இருக்கான் .. வீடு விற்கமுடில யாரும் வாங்கல 'னு என் கிட்டே சொன்னான்.... நான் வாங்கிக்கறேன்னு சொன்னதும்!! அண்ணா நீ எடுத்துக்கோ நீயா ஒரு விலை குடு னு சொன்னான்.

அந்த வீடும் வாங்கி இன்னும் இரண்டு கறவை மாடு வாங்கிக்கலாம்.

சீதாவுக்கு ஒரே பிள்ளை பெரிய படிப்பு!! படிச்சி வெளி நாடு போய்ட்டானு... ரொம்ப வருத்தம்! பிள்ளை இப்படி சொன்னதும் பகவானே!...என்று கண் கலங்கினாள்.

அதே சமயம் பிள்ளை விவசாயம் னா பொண்ணு கிடைக்காதே?? னு பயமும் வந்தது.

இதெல்லாம் கேட்டுக்கொண்டே வந்த ராமன்,... ரவி.... நீ நல்ல முடிவு எடுத்தே எனக்கும் கொஞ்ச நாளா முடில. இவ்ளோ பெரிய வேலையில் இருக்கும் பிள்ளையை எப்படி சொல்லுவது?? னு யோசிச்சேன்.

என்ன இல்லை இங்கே கிராமத்தில்?? எப்பவாவது பஞ்சம் வரும், வானம்



# நல்ல நேரம்

சோதிடம் பார்த்து சோம்பித் திரியாதே
மனதிடம் கொண்டால் மகத்துவம் மறக்காதே!
நாளும் கோளும் முக்கியம் ஆகாது
நம்பிக்கையோடு உழைத்தால் நல்வாழ்வு போகாது!
உழைக்கும் நேரமே நல்ல நேரம்
உறங்கிக் கிடப்பது பெரும் சோகம்!
முயற்சியின் திருவினையில் முன்னேற்றம் பெருகும்
அயர்ந்து கிடந்தால் அவலங்கள் வளரும்!
இயக்கத்துடன் இருப்பது நல்ல நேரம்
இணைந்து வாழ்ந்தால் புத்துலகம் மலரும் !

**கவிஞர் கவிதா அசோகன் திருச்சி**

பொய்த்து பயிர் காயும்,, அந்த நேரம் அதுக்கு மாற்று பார்த்துக்கணும்.

நம்ம கிராமத்தில் இங்கு இருப்பவர் களின் ஒற்றுமை காணும் இடமெல்லாம் பசுமை, போகும் இடமெல்லாம் குளுமை, தேடும் இடமெல்லாம் புதுமை. நாலாபுறமும் இயற்கை நம்மை கண்குளிர வைக்கின்றன.

சீதா... முக்கியமான விஷயம் சொல்ல வந்தேன்....நம்ம அடுத்த தெரு கிருஷ்ணன் பொண்ணு ராகவி , சென்னை யிலிருந்து இங்கு வந்திருக்காளாம்.

அவளும்,பெரிய படிப்பு, படித்து வெளி நாட்டில் வேலையை விட்டு விட்டு!!... அங்கிருந்து இங்கு வந்து விட்டாளாம். இங்கிருக்கும் அரசாங்க பள்ளியில், ஆசிரியராக சேரப் போறாளாம்!!

அவனுக்கும் ஒரே பொண்ணு, இவள் இப்படி முடிவெடுப்பானு நினைக்கல. கல்யாணத்துக்கு பார்க்கிறேன், உன் பிள்ளை யை கேட்கலாம்னு பார்த்தா இவ வெளி நாட்டு மாப்பிளை வேண்டாம் இந்த கிராமத்துல பாருங்கிறா!!? என்று ரொம்ப வருத்தப்பட்டான்....

இப்போ தான் ரவி... இங்கயே தங்கபோறானே!! கேட்டுப்பார்க்கலாம்.

சீதா வுக்கு அவ்ளோ சந்தோஷம். சின்ன குழந்தை யிலிருந்து அவள் பார்த்து வளர்ந்தப் பெண். ரொம்ப நல்ல குணம், பெரியவர்களிடம் மரியாதை.

நேத்தி கோவிலில் ராகவி யை பார்க்கும்போதே ரொம்ப பிடித்தது. இவளும் வீட்டிற்கு வரச் சொல்லிருந்தாள். சாயந்திரம் வருவதாக சொன்னாள்.

சாயந்திரம், ராகவி வரும்போது, சீதாவும், ராமனும் கிருஷ்ணன், வீட்டுக்குப் போய் பேசினார்கள்.

அவர்களுக்கும் ரொம்ப சந்தோஷம். பக்கத்திலேயே இருக்கோம், சின்ன வயசிலிருந்து ஒண்ணா படிச்சி விளையாடி, ஒருவர் பற்றி ஒருவர்க்கு நன்கு தெரியும், ராகவி பெற்றோர் க்கு அப்படி ஒரு மன நிறைவு.

சரி வா, ராகவி.. எங்க வீட்டில் தான் இருக்கா, நாம் எல்லாரும் போய் பேசலாம். என்று நான்கு பேரும் வீட்டிற்குள் வந்தனர். ஒரே சிரிப்பு சத்தமா இருந்தது.

ரவியும், ராகவியும் சிரித்து பேசிக் கொண்டிருந்தனர்.

அனைவரும் பேசி சந்தோஷமாக கல்யாணம் முடித்தனர்.

இருவரும் தனக்கான யோசனைகளை பேசினர்.

ராகவிக்கும், நிறைய யோசனை இருந்தது. இந்த கிராமம் மற்ற கிராமங்களுக்கு ஒரு எடுத்து காட்டாக இருக்க வேண்டும் என்றும், வருங்கால இளைஞர் இளைஞிகளை அதற்கு தயார் செய்யவும் தான் ஆசிரியர் பணிக்கு முடிவெடுத்தாள்.

என்ன இல்லை இத்திரு நாட்டில்?? என்ன வளம் இல்லை இங்கு???

கிராமத்து வாழ்க்கை என்றாலே ஒரு தனி அழகு தான். கிராமத்திலிருப்போர் எந்த வேலை க்கும் கூச்சமில்லாமல் செய்து கொடுப்பது, உண்மையான சொர்க்கம் பசுமை நிறைந்த கிராமங்களில் தான்.

# விடுதி வாழ்வு

சொந்தவீட்டில் சொர்க்கமாய் சுற்றித்திரிந்தாலும் விடுதியில் என்னவோ, நான்கு சுவர் மத்தியில் தான் வாழ்வு!

கடுங்குளிர் மத்தியில் போர்வையை, தாய்மையாக அணைத்து உறங்கும் அதிகாலை பொழுதினை கடனாய் கேட்ட தருணங்கள் ஏராளம்!

காலை உணவு கதகதப்பு தேநீர் கோப்பை; மதிய உணவு லெக்சர் ஓட்டத்தில். இப்போதெல்லாம் வரிசையில் நிற்பதுகூட வழமையாகிவிட்டது!

இராப்பொழுது விழிநீராய் கடந்ததே அதிகம்; நண்பர் கூட்டம் அருகே சுற்றித்திரிவதால் விழிநீர் கானல்நீராய் மாறிவிடும் சிலநொடிகளில்!

அம்மாவின் அறுசுவையை நினைக்க வைக்கும் விடுதியுணவு; நாசுவை மறந்து வயிற்று பசிக்கு கறிவகை அறியாமல் சாப்பிட்ட வேளைகள்!.

காதல் வெட்டினை கற்ற எம்மவர்க்கு விடுதியில் மின்வெட்டு, தண்ணீர்வெட்டும் சாதாரணமாய் கடந்தன!.

வீட்டைத்தவிர அறியாத எமக்கு; விடுதி எனும் மூன்றெழுத்து, நிஜவாழ்வை வாழ கற்றுக் கொடுக்கிறது!

**வளர்கவி வாழையூர் அபி**



**பார் போற்றும் பாரதி!**

எட்டய புரத்தில் தோன்றி
எழில்மிகுச் சுடரா யென்றும்
பட்டொளி வீசிப் பாரில்
பாட்டினில் புதுமை தந்து
சுட்டிடும் நெருப்பாய்ப் பெண்ணின்
சுதந்திரம் வேண்டி நின்றான்!
முட்டிடும் எல்லை தாண்டி
முத்தமிழ்க் கவியாய் வென்றான்!

விடுதலை யடையும் முன்பே
வெற்றியின் முழக்க மிட்டான்!
மடுவையும் மலையாய் மாற்றும்
மாதிறம் கவியில் காட்டிக்
கெடுபகை ஒழிக்க வேண்டின்
கேட்டினை அழிக்கச் சொன்னான்!
மிடுக்குடன் நடந்த தோற்றம்
மீண்டிட வரம் தான் வேண்டும் !

பாரதி என்ற போதே
பாரத மக்கள் நெஞ்சம்
ஈரமாய் உணரும் அன்பை!
இனியநற் கவிக்கு வேந்தன்
தீரமும் பண்பும் சேர்ந்த
தீஞ்சுவை பாக்கள் ஈந்தான்!
வாரணம் சூழ வாழ்த்தி
வணங்கிடும் தமிழே போற்றி!

ஓசூர் மணிமேகலை

# வார்த்தை அம்புகள்

செவியோரம் காற்றிலே அலை மோதும் ஒலிகளாய்
மானிட நாவுகளின் ஓசை வெளியீடாம் வார்த்தைகளவை
தத்தம் எண்ணங்களின் காட்சிப் படங்களை கக்கிடுதே
அம்பெனும் ஆயுதமேந்தி மனந்தனை சட்டென துளைத்தபடி

மாற்றான் குறித்த எதிர்மறை உள்ளத்து உணர்வுகளவை
காற்றிலே பறந்து திரிபுகள் பலவென அடைந்து
உள்ளமெனும்  மென் கருவினிலே ஆழமாய் பதிகையில்
வார்த்தை அம்புகளின் முனைகள் ஆழமாய் பதம்பார்த்திடுகின்றனவே

வலியென்பது யாவருக்கும் பொதுவென்பதை உணரா மதிகள்
சுயநல ஜடங்களாய் வார்த்தைகள் கொண்டு அம்பெய்து
பிறரின் காயத் தடத்தினைக்  கண்டு ரசித்திடவே
தேனாய் குரல் கொடுப்பர் அவரோடான உறவுதனில்

தாம் தான் சிறந்தவரென வீராப்பு கர்வம் கொண்டு
பிறரின் நடத்தைகளை நுண்மையாய் அலசி ஆராய்ந்து
தம்மை உத்தமர்களாய் வேடம் பூண்டு அலைக்கழிகின்றனர்
வார்த்தையம்புகளால் தாக்கி பிறரின் கண்ணீரிற்கு உள்ளாகியபடி

தீவினையும் நோவினையும் என்றுமே செயலால் மட்டுமன்று
அனலென எரித்திடும் வீண் அவதூறுப் பேச்சுக்களில்
பிறரின் உள்ளமது உடைந்து நொறுங்கி மடிந்தாலும்
எள்ளளவும் குற்றவுணர்ச்சி உணராத மரணித்த மனங்களவை.

பேனா முனைக் காதலி ஹாஸ்மியா தாஹா
கெக்கிராவ - கலாவெவ, இலங்கை

# தன்முனைக் கவிதைகள்

●

புற் புதர் நான்
சொற் பதம் கொண்டேன்…
அற்பம் என்றவரும்
அற்புதம் என்றிடக் கண்டேன்…

●

உணர்வுகளெல்லாம் புலனத்தில்
புரிந்து கொள்வார் இல்லை..
புலம்பித் தவிக்கிறது
பழைய கலாச்சாரம்..

●

எட்டெட்டாய் வைத்தேன்
எட்டாதே என்று நகைத்தனர்…
தள்ளி நகர்ந்தேன் தரமானோர்
கரம்தட்ட உயர்ந்தேன்…

●

இச்சை தீர்க்க அவசரமாய்
இணைந்து கொண்ட இதயங்கள்…
தேவை தீரும் வரை
தேகம் தொட்டது காதல்…

●

இருந்தும் இழக்கப் படும்
கொடுக்கப் படாத வரங்கள்…
வாழ்தலின் சாபமாய்
தொப்புள் கொடி உறவு….

●

விரும்பியவன் விலகிப் போனான்
விலையாகிப் போனாள்…
நச்சரித்த சமுதாயத்தின் இச்சையில்
விரும்பியே எச்சிலாகிறாள்…

●

பட்டம் பெற்றவன்
பரதேசி ஆனான்..
பணம் விட்டவன்
பண்டிதன் ஆனான்..

●

திட்டம் தீட்டிய சட்டம்
இயற்றி சாதித்தனர்…
திருத்தப் படாமலே நடக்கிறது
தினமொரு தவறு…

●

கோடி கனா கண்டு
கூடி வாழ வந்தேன்..
சோடி மாறிப் பறக்க
வாடிப் போனது வாழ்க்கை…

●

மாற்றமின்றி நித்தம்
ஏற்றுத் தொலைத்த பாவம்..
விரும்பி அஞ்சியதால்
வினையாய்க் கிடைத்த சாபம்..

●

ஆட்டங்கள் அடங்கி
ஆசைகள் ஒடுங்கியது…
ஆறடி நிலத்துக்குள் கிடக்கிறது
அலங்கரித்து ஆடிய உடல்..

●

ஒட்டிக் கொண்ட பாசம்
வெட்டித் தள்ளப் பார்க்கிறது…
கட்டிக் கொண்ட ஆசைகளை
கொளுத்திப் போகிறது வேசம்…

●

உதிரத்தை ஊணாக்கி
உயர்ந்து நிற்க உரமிட்டாள்.
நான் நடந்த வழிகளின்
திறவுகோலாய் அம்மா.

ஏறூர் நிலாத்தோழி
(பாத்திமா அஸ்க்கியா முபாறக்)

# மணிப்பாக்கள்

கனிவோடு பயணித்த
காலை முகமன்.
தவித்து நிற்கிறது
துயர் கௌவிய இதயத்துள்
நுழைய முடியாமல்……

துவண்டு விடாதே
தோல்விகளில்..
என்கிறது போதனைகள்.
எதற்கும் எழ மாட்டாமல்
தடைகள் போடும்
சூழ்நிலைகள்.

அடுக்கடுக்காய் சிந்தனையில்
ஆசைகளின் வரிசைப்படுத்தல்.
ஆடி அடங்குகின்றது
தடைகள் கண்டு
துவண்ட இதயம்.

பார்த்துப் பார்த்துப்
பக்குவமாய்..
கட்டியது சிலந்தி வலை.
சிதைந்ததும் துவண்டதா?
மீண்டும் உயிர்ப்புடன்
தனக்கான தேடலில்.

குறுணிக் கற்களைத்தான்
நகர்த்த முனைகிறேன்.
தடைகளாய் வருவதெல்லாம்…
பாறாங் கற்களாய்ப்
பயமுறுத்துகின்றனவே.

மணிக்கூ கவி

நஸீரா எஸ் ஆப்தீன்

# ஏட்டுலா கனவாக்க அமைப்பின் இரண்டாவது புத்தக வெளியீடு!

சிந்தனைத் திறன்மிக்க எழுத்தாளர்களின் எழுத்துக்களை புத்தக வடிவாக்கி அவர்களின் புத்தகக் கனவை நனவாக்கும் அமைப்பான ஏட்டுலா கனவாக்கம் தனது இரண்டாவது நூலாக,..

கண்டி / தெல்தோட்டை இளம் எழுத்தாளர் திக்ரா ஹனீபா அவர்கள் எழுதிய வாப்பாக்கு எனும் நூலை (03.11.2024) காலை 9.00 மணியளவில் கண்டி/தெல்தோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் ஏட்டுலா கனவாக்கம் அமைப்பின் நிகழ்ச்சி ஏற்பாட்டில் வெளியீடு செய்தது.

இந் நிகழ்விற்கு ஏட்டுலா கனவாக்கத்தின் நிர்வாக உறுப்பினரும் ஜே.எம்.ஐ நிறுவனத்தின் பணிப்பாளருமான







ஜே.எம்.ஐ இஹ்சான் அவர்கள் தலைமை தாங்கியதுடன், பிரதம அதிதியாக கலாநிதி. அஷ் ஷெய்க் முனீர் சாதிக் (காஷிபி) தலைவர் - தெல்தோட்டை பள்ளிவாசல்கள் சம்மேளனம் உபதலைவர்களில் ஒருவர், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா- தெல்தோட்டை கிளை. அகில இலங்கை சமாதான நீதவான் அவர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வு செல்வன் எம்.ஏ.எம் ஷாபிக்கின் கிராஅத்துடன் ஆரம்பமானதைத் தொடர்ந்து ஏட்டுலா கனவாக்க நிர்வாக உறுப்பினர் ஜே.எம்.ஐ இஹ்சானினால் தலைமையுரையும், வரவேற்புரையும் நிகழ்த்தப்பட்டது.

அதனையடுத்து (இலக்கிய ஒளித்தாரகை) கவிக்குயில் ஷியாஸ்னா பைஸலின் வாழ்த்துப் பாவும், ஏட்டுலா கனவாக்கத்தின் முதலாவது புத்தக வெளியீடான நிதர்சனத்தின் நிழல் நூலாசிரியை அக்கரையூராள் முபீதா அமீன் அவர்கள் ஏட்டுலா கனவாக்கம் அமைப்பினை வாழ்த்தி எழுதிய வாழ்த்துக் கவிதை செல்வி ரிப்தாவினாலும் இடம்பெற்றது.

ஏட்டுலா கனவாக்கத்தின் நிர்வாகக் குழு உறுப்பினரான றஜா முஹம்மத் வெளியீட்டுரையினை நிகழ்த்தியதனைத்

தொடர்ந்து நூல் வெளியீடு உத்தியோக பூர்வமாக வெளியீடு செய்யப்பட்டது.

New Royal Hotel (Liyanege Mulla seedhuwa) உரிமையாளர் - அல் ஹாஜ் எம்.டி.எம் ரஸான் அவர்களுக்கு நூலாசிரியை திக்ரா ஹனீபாவினால் முதல் பிரதி வழங்கப்பட்டதுடன், இரண்டாம் பிரதி யானது நூலாசிரியையின் தாயார் திருமதி. நூருல் ஹிதாயா அவர்களுக்கும் நூலாசிரியர் திக்ரா ஹனீபா மூலமே வழங்கி வைக்கப்பட்டது.

அதனையடுத்து ஏட்டுலா கனவாக்கத்தின் மூலம் வெளியீடு செய்யப்படுகின்ற திக்ரா ஹனீபாவின் வாப்பாக்கு எனும் கவிதை நூலிற்காக ஏட்டுலா கனவாக்கத்தினால் நூலாசிரியையிற்கு கன்னிப்படைப்பு விருதும், பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஐ.எம் ஜமீல் ஆசிரியரால் நூல் நயவுரையும், மௌலவி ஐ.எம் நிஸாம் அவர்களால் நூல் விமர்சனமும் செய்யப்பட்டது.

பிரதம அதிதியாக வருகை தந்திருந்த கலாநிதி. அஷ் ஷெய்க் முனீர் சாதிக் (காஷிபி) அவர்களால் சிறப்பான முறையில் பிரதம அதிதி உரை நிகழ்த்தப் பட்டது.

அதனைத் தொடர்ந்து இன்றைய நிகழ்வின் முக்கிய கதா பாத்திரமான திக்ரா ஹனீபா, ஏட்டுலா கனவாக்கத்தின் பணிப்பாளர் ஆஷிக் ஹுசைன் அவர்களுக்கு நினைவுச்சின்னம் ஒன்றையும்







வழங்கி கௌரவப்படுத்தினார்.

இறுதியாக நூலாசிரியை திக்ரா ஹனீபா அவர்கள் தனது நூல் வெளியீட்டிற்கான ஏற்புரையினை நிகழ்த்தினார்.

விழாவிற்கு வருகை தந்த பிரதம அதிதி, இலக்கிய அதிதிகள், கௌரவ அதிதிகள் விசேட அதிதிகள், அதிபர், ஆசிரியர்கள், ஏட்டுலா கனவாக்கத்தின நிர்வாக உறுப்பினர்கள், ஊர் மக்கள் மற்றும் நூலாசிரியையின் குடும்ப அங்கத்தவர்களுக்கான நூல் பிரதிகளும் நூலாசிரியை திக்ரா ஹனீபாவின் கரங்களாலேயே வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்ச்சியை திறம்பட தொகுத்து வழங்கியிருந்தார், ஆதவன் வானொலியின் செய்தி வாசிப்பாளரும், தொகுப்பாளருமான சகோதரர் முஸ்னி முர்ஷித் அவர்கள்.

ஸலவாத்துடன் ஏட்டுலா கனவாக்கத்தின் இரண்டாம் புத்தக வெளியீடு இனிதே நிறைவு பெற்றது.

ஏட்டுலாவின் கனவை நோக்கிய பயணத்தில் அடுத்த ஏட்டுலாவும் வெற்றிகரமாக நிறைவடைந்தது அல்ஹம்து லில்லாஹ்.

கடந்த (10.05.2024) அன்று ஏட்டுலா கனவாக்க பணிப்பாளர் ஆஷிக் ஹுசைன் அவர்களுடன் இணைந்து மொத்தம் 09 பேர் கொண்ட ஒரு குழுமமாக ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு, இரண்டு மாதங்களில் அதன் முதலாவது வேலைத் திட்டத்தினை செவ்வனே செய்து முடித்து தற்போது இரண்டாவது நூலினையும் மிகச் சிறப்பான முறையில் கண்டி மண்ணில் வெளியீடு செய்திருக் கின்றது.

இலைமறைகாய்களாக சமூகத்தில் இருக்கும் எழுத்தாளர்களை இனம் கண்டு அவர்களுடைய புத்தகக் கனவை நனவாக்கம் செய்வதே இவ்வமைப்பின் பிரதான நோக்கமாகும்.

ஏட்டுலா கனவாக்கம் அமைப்பின் குழும உறுப்பினர்கள்:-

- திருஆஷிக்ஹுசைன்(பணிப்பாளர்-ஏட்டுலா கனவாக்கம்)
- திரு. அமின் முஹம்மட் (பிரதம ஆசிரியர் - தமிழ்நெஞ்சம் - பிரான்ஸ்)
- திரு.ஜே.எம்.ஐ இஹ்சான் (பிரதம ஆசிரியர் முத்திதழ் சஞ்சிகை)
- திரு. முஹம்மட் இன்ஷாப் (பணிப்பாளர் Rj Media)
- திரு.றஜா முஹம்மட் (பிரதம ஆசிரியர் பேனாத்துளிகள் சஞ்சிகை)
- திருமதி. ஆயிஷா ஷகீலா (வடிமைப்பாளர் - Design glitz)
- செல்வி.பஹ்ரியா பாயிஸ் (இளம் எழுத்தாளர் - ஹெம்மாதகமை பிராந்தியம்).
- செல்வி. அதீகா மசூர் (Sky தமிழ் செய்தி ஆசிரியை).
- செல்வி. ஹாஸ்மியா தாஹா (இளம் எழுத்தாளர் பல்கலைக்கழக மாணவி - SEUSL).

# தன்முனைக் கவிதையின் தோற்றமும், வளர்ச்சியும் (11)



அன்பு செல்வி சுப்புராஜு
தன்முனைக் கவிதை படைப்பாளர்கள் பேரவை
பட்டாபிராம், சென்னை

***அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்***
***சிறுகை அளாவிய கூழ்.*** (குறள் - 64)

சிறந்த பொருளை அமிழ்தம் எனக் குறிப்பிட்டாலுங் கூடத் தம்முடைய குழந்தைகளின் பிஞ்சுக்கரத்தால் அளாவப்பட்ட கூழ் அந்த அமிழ்தத்தைவிடச் சுவையானதாகி விடுகிறது என்பதினை யாராலும் மறுக்கவியலாது.

நாளும் இன்பத்தை மட்டுமே அள்ளித் தரும் குழந்தைகள் குறித்த கதைகள், கவிதைகள் என எதை எழுதினாலும், அவை எழுதுபவருக்கும் மகிழ்ச்சி, வாசிப்பவருக்கும் மகிழ்ச்சி பெருகும்

என்பது நிதர்சனம். குழந்தைகளைக் கொண்டாடும் எழுத்தாளர் கன்னிக்கோவில் இராஜா அவர்களால் எழுதப்பட்டு, நூலேணி பதிப்பகம் வழியாக வெளியீடாகிய 'சிறுகை கூட்டாஞ்சோறு' ( 2021) புத்தகம் குழந்தைகள் குறித்த தனியொருவர் எழுதிய முதல் நூல் என்ற சிறப்பினைப் பெற்றுள்ளது. இதோ இக்கவிதையைப் பாருங்கள். குழந்தைகள் ஒருவரின் ஆடையை முதுகுப்புறமிருந்து மற்றொருவர் பிடித்துக் கொண்டு ஓட்டும் இரயில் வண்டி விளையாட்டு நாம் அனைவரும் விளையாடிக் களித்திருப்போம். அவ்வரிசையின் இறுதியில் பாட்டி இணைவதால் தள்ளாடுகிறதாம் வண்டித் தடம். இளம் பருவத்திற்கே சென்று மீண்ட களிப்பை இக்கவிதை தருகிறது.

**இரயில் வண்டி விளையாட்டில்**
**கடைசியாய்ப் பாட்டி**
**தள்ளாடி நகர்கிறது**
**வண்டித் தடம்**

அடுத்தொன்று... நோட்டில் வைத்திருக்கும் மயிலிறகுக்கு பசிக்கும் என்று சிந்திய அரிசியை சேகரிக்கிறாளாம் சிறுமி. குழந்தைகளின் கள்ளமில்லா வெள்ளை மனம், உயிர்களை போற்றும் மாண்பு என அனைத்தையும் இச்சிறு கவிதையின் வாயிலாக வெளிக்கொணர்ந்துள்ள நூலாசிரியருக்குப் பாராட்டுகள்.

**சிந்தும் அரிசியை**
**சேகரிக்கும் சிறுமி**
**நோட்டில் குட்டி போட**
**காத்திருக்கும் மயிலிறகு**

-- கன்னிக்கோவில் இராஜா

அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார் பெரும்பயன் இல்லாத சொல். ( குறள் 198)

அரும்பயன்களை ஆராய்ந்து அறியக்கூடிய ஆற்றல் படைத்தவர், பெரும்பயன் விளைவிக்காத எந்தச் சொல்லையும் பயன்படுத்த மாட்டார் என்பதற்கிணங்க முனைவர் வே. புகழேந்தி அவர்கள் தன்முனைக் கவிதை குழுமத்தில் கிட்டத்தட்ட மூன்றாண்டுகளாக கவிஞர்களால் பதியப்படும் கவிதைகளைத் தொடர்ந்து பகுப்பாய்வு செய்ததுடன், அக்கவிதைகளை ஆங்கிலம் மற்றும் கன்னடம் என்று இரண்டு மொழிகளில் மொழிபெயர்த்து மூன்று மொழிக் கவிதைகளுடன் பதிவு செய்து வருகிறார். அவ்விதம் பகுப்பாய்வு செய்யப்பட்ட கவிதைகளில் முதற்கட்டமாக ஐம்பத்தைந்து தன்முனைக் கவிஞர்களின் தேர்ந்த கவிதைகளின் பகுப்பாய்வுகளைக் கொண்டு 'எப்படியாவது சாவியைத் தொலைத்தாக வேண்டும்' தன்முனைப் பகுப்பாய்வு முதல் நூலாக 'அகநி' பதிப்பகம் வழியாக ஆகஸ்ட் 2023 வெளியீடானது தன்முனைக் கவிதையுலகின் மகிழ்வானதொரு பொழுதாகும்.

' எப்படியாவது சாவியைத் தொலைத்தாக வேண்டும். பண்டோராவின் பெட்டி திறக்காமல் இருக்கட்டும். எப்படியாவது சாவியைத் தொலைத்தாக வேண்டும். சமத்துவ சமூக மொட்டுகள் மலரட்டும்.'

Let us lose the key, at any cost, let Pandora's box not open. Let us eradicate casteism one shot, let egalitarian society be born.

என்ற முனைவர் வே. புகழேந்தி அவர்களின் பொன்மொழியுடன் தொடங்கும் இந்நூலின் ஒவ்வொரு ஆய்விலும் அவரது பன்முகத்திறன், மொழியாளுமை வெளிப்படுகிறது

என்றால் மிகையில்லை. மேலும் இந்நூல் பல்கலை மாணவர்களுக்கும், தன்முனைக் கவிதைகள் என்றால் என்ன என்று அறிந்து கொள்ள ஆவலாக உள்ளவர்களுக்கும் பேருதவியாக இருக்கும் என்பது திண்ணம்.

அடுத்ததாக தன்முனைக் கவிதையின் கிளை வடிவமாக என்னால் அறிமுகம் செய்யப்பட்ட தன்முனையியைபுக் கவிதை வகைமையின் முதல் நூலாக கலைமாமணி முனைவர் ஔவை நிர்மலா அவர்கள் எழுதியுள்ள ' மின்மினிக் கங்குகள்' விழிச்சுடர் பதிப்பகம் வழியாக 2023 ஆம் ஆண்டு வெளியானது.இப்புத்தகத்தில் தன்முனையியைபுக் கவிதைகளுடன் கூடிய தனிச்சிறப்பு என்னவென்றால் ... மொழிப்பத்து தொடங்கி இன்பப்பத்து வரை ஐம்பது சூழல்களில், சூழலுக்கு பத்து கவிதைகளாக எழுதியுள்ளது மிகவும் சிறப்பாக இருக்கிறது. சமூகப் பார்வையுடன் கூடிய ஒரு சாட்டையடிக் கவிதை இதோ...

***மரமெல்லாம் வெட்டிவெட்டி***
***மாடங்கள் செய்வோம்***
***மாங்குயிலின் தேனிசையில்***
***அழைப்புமணி வைப்போம்***

மரங்களை வெட்டி, இயற்கையை அழித்து, தானும் அழியக் காத்திருக்கும் மனிதன், குயிலோசையில் அழைப்பு மணி வைப்பது எவ்வளவு அபத்தம்... அடுத்தொன்று ' நூல் பத்து ' தலைப்பில் எள்ளலும், நகைச்சுவையும் இழையோடும் கவிதை

***மேடையில் அடைத்தமர்ந்தார்***
***வாழ்த்திடவே அழைத்தார்***
***நூல்யாத்த படைப்பாளர்***
***இருக்கையின்றி விழித்தார்***

வாசிக்கும் பொழுதே படைப்பாளரின் நிலை குறித்து வேதனை வந்தாலும் கூட.... இதழ்க்கடையோரம் சிரிப்பும் வருகிறது தானே....

சிரித்துக்கொண்டே இருங்கள். அடுத்த மாதம் இன்னுமொரு சிறப்புடன் உங்களைச் சந்திக்கிறேன்.. நன்றி



## எறும்பென நீயும் இயங்கு

எறும்புகள் சுமக்கும் இறகு
இறந்த தும்பியின் இறகு

கூட்டாக இழுக்கும் அழகு
கட்டாக ஒற்றுமை பழகு

கிடைத்ததைப் பொதுவில் வைத்து
கிடைத்ததை எறும்புகள் பகிர்ந்து

உண்ணும் அழகே அழகு
கண்ணாய் நீயும் பழகு

எறும்பூறக் கல்லும் தேயும்
அருமையாய் விடாமுயற்சி உய்யும்

கற்களையும் குடையும் எறும்பு
கடினமெதுவும் இல்லை துரும்பு

எப்போதும் இயங்கும் எறும்பு
தப்பாமல் அச்செயல் விரும்பு

எறும்பென நீயும் இயங்கு
அரும்பும் நல்வாழ்வு விளங்கு

பெரணமல்லூர் சேகரன்



# மனையுறுமகள்

அடுப்பில் பால் பொங்குகிறது
இடுப்பில் குழந்தை அழுகிறது
அடுத்தவள் எழுந்து விட்டால்
ஐயோ வெனப் பதறிடுவாள்.


அம்மி மிதித்து அருந்ததி பார்த்து
அம்மா அப்பாவைப் பிரிந்து வந்து
ஆண்டுகள் மொத்தம் இரண்டே தான்
அதற்குள் அவளுக்கு மழலைகள் இரண்டு.

வேலை வெட்டி இல்லாதவன் போல்
விடிய விடியத் தூங்குகிறான்
விழித் தெழுந்ததும் விடியல் முத்தம்
வேண்டி நிற்பான் விந்தையாய்.

வேலை முடிந்து வீடு வரும்வரை
வழி மேல் விழி வைத்துக்
காத்து நிற்பாள் காரிகை அவள்
பார்த்துப் பார்த்துப் பணிவிடை செய்திட.

**- எஸ். ஏ. கப்பார்**




MUTUR JMI
PUBLICATION
Offset Printing & Photocopy Services
MINIMUM QUANTITY
100
40% OFF
Island Wide Delivery Available
FREE DELIVERY
BOOK BINDING
Off-Set Printing
PRINTING
Offset Printing
A4 - 3.50
A3 - 12.50
Book Binding
Perfect & Hard Binding
A4 - 3.80
A3 - 12.20
B5 - 10.00
Color Printing
Four Color (Inject & Laser)
70 - 250 GSM Board & Papers
Certificate & Photos
Layouts & Designing
A4 - 40.00
A3 - 100.00
Mutur JMI
Contact Now
+94 77 1920030
+94 262238593
Our Office
More Information
muturjmi@gmail.com